# மொழியியல்

தொகுதி 5 ஜூலை - செப்டம்பர் எண் 1

பதிப்பாசிரியர்கள்,
ச. அகத்தியலிங்கம்
கோ. சீனிவாசவர்மா
ஜெ. நீதிவாணன்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1981

T13384
R005A07

# அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

**பதிவு எண் 2 (1977)**

*அண்ணாமலைநகர்*

## செயற்குழு

| | |
|---|---|
| தலைவர்: | **டாக்டர் மு. சண்முகம் பிள்ளை** (மதுரை) |
| துணைத் தலைவர் | **டாக்டர் மு. இஸ்ரேல்** (மதுரை) |
| செயலாளர்: | **டாக்டர் ச. அகத்தியலிங்கம்** (அண்ணாமலைநகர்) |
| பொருளாளர்: | **டாக்டர் க. முருகையன்** (அண்ணாமலைநகர்) |
| உறுப்பினர்கள்: | **டாக்டர் சு. இராசாராம்** (மைசூர்) |
| | **திரு சி. அருணன்** (அண்ணாமலைநகர்) |
| | **டாக்டர் டி. எஸ். மாணிக்கம்** (ஹைதராபாத்) |
| | **டாக்டர் கே. மீனாட்சி** (டெல்லி) |

## மொழியியல்

### அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

### கட்டணம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆயுள் கட்டணம் | ரூ 200-00 | US $ 50-00 |
| ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 300-00 | US $ 75-00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 20-00 | US $ 5-00 |
| ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 30-00 | US $ 7-00 |
| ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு) | ரூ 10-00 | |

மொழியியல் 5.1, (1981)

# காரண வினை

ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## 1. காரண வினையாக்கம்

உலக மொழிகள் பலவற்றில் காரண வினையாக்கத்தைக் காண்கிறோம். ஒருவன் மற்றொருவனைக் கொண்டு ஒரு செயலைச் செய்யச் செய்வதையே காரண வினை என்கிறோம். அதாவது ஒருவன் ஒரு காரியத்தைச் செய்வதற்கு இன்னொருவன் காரணமாக இருப்பதை வினைச் சொல் பிரதிபலித்து நிற்குமானால் அவ்வினையைக் காரண வினை என்கிறோம். இதனை ஆங்கிலத்தில் Causative எனக் கூறுவர்.

நான் கண்ணனை ஓடச் செய்தேன்

எனக் கூறும்போது கண்ணன் ஓடுவதற்கு நான் காரணமாக இருப்பதால் 'ஓடச் செய்' என்பதைக் காரணவினைத் தொடர் என்றும் 'செய்' என்பதைக் காரண வினை காட்டும் வினை என்றும் கருதலாம். கண்ணன் ஓடுதல் தொழிலைச் செய்வதற்கு நான்

காரணமாக இருக்கிறேன். கண்ணன் ஓடுகிற நிலையில் கண்ணன் என்பது ஓடு என்பதன் எழுவாயாகவும் நான் என்பது செய்தேன் என்பதன் எழுவாயாகவும் உள்ளன. எனவே இதன்கண் இரு தொழில்கள் நடைபெறுவதைக் காண்கிறோம். ஒன்று ஓடுதல் தொழில், மற்றொன்று அதனைச் செய்யச் செய்யும் தொழில். எனவே காரண வினையில் இரண்டு தொழில்கள் உள்ளன.

## 1. 1. காரண வினையும் பிற வினையும்

பிறவினைகளிலும் இரண்டு தொழில்கள் உள்ளமை கண்கூடு.

நான் அவனை ஆட்டினேன்

என்று கூறும்போது நான் ஆட்டுதல் தொழிலையும் அவன் ஆடுதல் தொழிலையும் செய்வதால் இரண்டு தொழில்கள் உள்ளனவாகக் கருதலாம். எனினும் காரண வினைக்கும் பிறவினைக்கும் இடையே ஒரு சில வேறுபாடுகளைக் காணமுடியும். பலர் (மு. வ. 1947, 1974:225) இவ்விரண்டையும் ஒன்றாகக் கருதுவர் இது தவறு.

நான் அவனை ஆட்டினேன், ஆனால் அவன் ஆடவில்லை என்று கூற முடியும். ஆனால்

நான் அவனை ஆடச் செய்தேன்
ஆனால் அவன் ஆடவில்லை

எனக் கூற முடியாது. காரணவினைகளில் தொழில் முடிந்து விடக் காண்கிறோம். ஆனால் பிற வினைகளில் முடிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

தன்வினையிலிருந்து மட்டுமன்றிப் பிறவினையிலிருந்தும் காரண வினையை உண்டு பண்ணலாம்.

நான் அவனை ஆடச் செய்தேன்

என்பது தன்வினையிலிருந்து உருவான காரண வினை. ஆனால்

நான் அவனை அம்மரத்தை ஆட்டச் செய்தேன்
நான் அவனைக் கொண்டு அம்மரத்தை ஆட்டச் செய்தேன்
நான் அவனால் அம்மரத்தை ஆட்டச் செய்தேன்

இங்கு நான், அவன், மரம் ஆகிய மூன்று பெயர்கள் (Arguments) வரக் காண்கிறோம். மூன்று பெயர்களுக்கும் உரிய தனித்தனி வினைகளும் உண்டு.

நான் செய்கிறேன்
அவன் மரத்தை ஆட்டுகிறான்
மரம் ஆடுகிறது

செய் என்ற காரண வினையால்தான் மரம் ஆடுகின்ற தொழில் முடிவதாகக் கருதுகிறோம். எனவே ஆட்டு என்பது ஆடுதல் செய் என்பது போலத் தோன்றுகிறது. ஆனால்

அவன் மரத்தை ஆட்டினான்

என்று மட்டும் இருக்குமானால் ஆடுதல் முடிந்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனவே காரணவினைகளில் பிற வினைச் சொற்களில் காணப்படும் தொழிலும் முடிந்து விட்டதாகக் கருதலாம்.

காரணவினை பிறவினையிலிருந்தும் உண்டாகிறது. ஆனால் பிறவினையோ தனிவினையிலிருந்து மட்டுமே உண்டாகும். எனவே பிறவினை வேறு காரண வினை வேறு. காரண வினை படி, கொடு போன்ற இயற்கைச் செயப்படுபொருள் குன்றா வினைகளிலிருந்தும் உண்டாகின்றன. (இவை தன்வினையே). இவற்றுடன் செய் போன்றவற்றை இணைத்து

நான் அவனைப் புத்தகம் படிக்கச் செய்தேன்

எனக் கூறலாம்.

பிறவினையில் இரண்டு தொழில்கள் மட்டுமே இருக்கும்.

நான் அவனை அடக்கினேன்

என்பதில் அவனை நான் அடக்குதலும், அவன் அடங்குதலும் உள்ளன. ஆனால் காரண வினையில் இரண்டோ அல்லது மூன்றோ வினைகள் இருக்கலாம்.

அவனை அடங்கச் செய்தேன் என்பதில் இருவினையும்

நான் { அவனை / அவனால் / அவனைக்கொண்டு } அம்மரத்தை ஆட்டச் செய்தேன்

நான் அவனைக் காரை ஓட்டச்செய்தேன்

போன்றவற்றில் மூன்று தொழில்களும் இருக்கக் காண்கிறோம். இதனால்தான்

நான் அவனை அடிக்கச் செய்தேன்

என்பது

நான் யாரையோ கொண்டு அவனை அடிக்கச் செய்தேன்

என்றும்

நான் அவனைக் கொண்டு யாரையோ அடிக்கச் செய்தேன்

என்றும் பொருள்படுவது காணலாம். ஆனால் இந்நிலை பிற வினைக்கு இல்லை.

தன்வினை, பிறவினை வேறுபாடு எல்லா வினைகளிலும் காணப்படுவதில்லை,

அடங்கு — அடக்கு
அருந்து — அருத்து
ஆடு — ஆட்டு

போன்ற வினைகளில் காணப்பட்டாலும்

அடி
கடு
பாடு

போன்ற வினைகளில் காணப்படுவதில்லை. ஆனால் காரணவினை களை எல்லா வினைகளிலிருந்தும் உருவாக்கலாம்.

அடங்கு — அடங்கச் செய்
அடக்கு — அடக்கச் செய்

ஆடு — ஆடச் செய்
ஆட்டு — ஆட்டச் செய்
அடி — அடிக்கச் செய்
கடு (த்தது) — கடுக்கச் செய்
பாடு — பாடச் செய்

போன்ற எடுத்துக் காட்டுக்கள் இப்பண்பைக் காட்டும்.

மேலும் பிறவினைகளிலிருந்து செயப்பாட்டு வினைகளை உருவாக்க முடியும்.

நான் சைக்கிளை ஓட்டினேன்
என்னால் சைக்கிள் ஓட்டப்பட்டது
நான் அவனுக்கு ஊட்டினேன்
அவன் என்னால் ஊட்டப்பட்டான்

ஆனால் இந்நிலையைக் காரண வினையில் காண முடிவதில்லை.

நான் அவனை ஓடச் செய்தேன்
நான் அவனை ஆடுவித்தேன்
*அவன் என்னால் ஓடச் செய்யப்பட்டான்
*அவன் என்னால் ஆடுவிக்கப்பட்டான்

மேலே கூறிய பல காரணங்களால் பிறவினை வேறு, காரணவினை வேறு எனக் கருதலாம்.

## 2. காரணவினையாக்க முறைகள்

காரணவினை இரு வழிகளில் தமிழில் உணர்த்தப்படுகின்றது. சொல்லியல் நிலையிலும் தொடரியல் நிலையிலும் காரண வினை காட்டப்படுகின்றது. முன்னது ஒருசில ஒட்டுக்களாலும் பின்னது ஒரு சில துணை வினைகளாலும் உணர்த்தப்படுகின்றன.

### 2.1 ஒட்டுக்கள் (சொல்லியல்)

தமிழ் மொழியில் வினையடிகளுக்குப் பின்னர் –வி P–, –பி P– ஆகிய இரு ஒட்டுக்கள் வந்து காரண வினை காட்டும்.

வினை + (பிற வினை) + காரண வினை

-பிP - வல்வினைகளுக்குப் பின்னர், அதாவது P யில் முடிகின்ற வினைகளுக்குப் பின்னரும் உண் போன்ற ணகர ஒற்றில் முடிகின்ற ஒருசில வினைகளுக்குப் பின்னரும் பிறவினை காட்டும் P க்குப் பின்னரும் இது வரக் காண்கின்றோம்.

உண் + பிP + த் + ஆன் > உண்பித்தான்
கொடு P+ பிP + த் + ஆன் > கொடுப்பித்தான்
நனை + P + பிP + த் + ஆன் > நனைப்பித்தான்
சேர் + P + பிP + த் + ஆன் > சேர்ப்பித்தான்

-விP- பிற வினைகளுக்குப் பின்னர் வரும்.

செய் + விP + த் + ஆன் > செய்வித்தான்
குளிர் + விP + த் + ஆன் > குளிர்வித்தான்
எழுது + விP + த் + ஆன் > எழுதுவித்தான்
நடத்து + விP + த் + ஆன் > நடத்துவித்தான்
உருட்டு + விP + த் + ஆன் > உருட்டுவித்தான்

உருட்டுவிப்பான்
உருட்டுவிக்க
உருட்டுவிக்கிறான்
கெடுவித்தான்

-விP- -பிP- ஆகிய ஒட்டுக்களை எல்லாத் தன்வினை பிற வினைகளுக்குப் பின்னரும் இணைத்துக் காரண வினைகள் உண்டு பண்ண முடியுமாயினும் சில வினைகளுக்குப் பின்னர் அவை இணையும் போது அவை காரண வினையைத் தராமல் புது வினைப்பொருள் தரக் காண்கிறோம்.

காண்பி என்பது காட்டு என்ற பொருளில் வரக்காண்கின்றோம்.

அதை எனக்குக் காண்பி

என்பது

அதை எனக்குக் காட்டு

என்ற பொருளிலேயே இன்று வழங்குகிறது. இது போன்றே

அறிவி } — தெரியப்படுத்து
தெரிவி }

படிப்பி } — சொல்லிக்கொடு
கற்பி }

குளிப்பி — குளிப்பாட்டு

போன்றவைகளும் உள்ளன. இவை காரணப்பொருளில் அன்றிப் பிற பொருள்களில் நிற்றல் காண்க. இவற்றுள் சில காரணப் பொருளையும் தரும். இந்நிலையில்தான் தெளிவாகக் காரணப் பொருள் காட்டும் துணை வினைகள் உண்டாயினவோ என எண்ணத் தோன்றும்.

மேலும் சில நேரங்களில் தன்வினை பிறவினை மயக்கமும் இருப்பதைக் காண முடிகின்றது.

ஆடச் செய்தால் ஆடாதார் யாரே
அடங்கச் செய்தால் அடங்காதார் யாரே
பாடச் செய்தால் பாடாதார் யாரே
உருகச் செய்தால் உருகாதார் யாரே

என்ற பொருளில் வரும்

“ ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
... ... ... ... ... ... ... ...
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே”

(அப்பர் தேவாரம், 931)

போன்றவற்றில் தன்வினையுடன் வரவேண்டிய வினை பிற வினைகளுடன் வந்து நிற்றல் காணலாம். ஆனால் உருகுவித்தால் என்பதில் தன் வினையுடன் வந்து நிற்றல் காணலாம். பாட்டு என்ற வினை இல்லாமல் இருந்த போதிலும் பாட்டுவி என்ற தொடரை உருவாக்கியிருக்கக் காண்கிறோம்.

என்னை அடக்குவித்தான்

எனக் கூறுவது காதுக்குப் பொருந்துவதாகத் தோன்றலாம். எனினும் அடக்குவித்தான் என்பது

என்னை அடங்கச் செய்தான்

என்ற பொருள் தருவதும்

அடக்குவித்தான்

என்பது

என்னை (யாரையோ கொண்டு) அடக்கச் செய்தான்

எனப் பொருள் தருவதும் நினைவு கூரத்தக்கன.

மேலே கூறிய செய்யுளில் அடக்கு என்பது அடங்கு என்ற பொருளில் வருகிறது. இதுபோன்றே ஆட்டு என்பது ஆடு என்ற பொருளிலும் வந்துள்ளது

**2,2. துணை வினைகள்**

செய், பண்ணு, வை ஆகிய துணை வினைகள் காரணப் பொருளில் வருதல் கண்கூடு. இவ்வினைகள் முழுவினைகளின் குறை யெச்சங்களின் பின்னர் வந்து இப்பொருள் காட்டும்.

ஆட + { செய் / பண்ணு / வை }

ஆட்ட + { செய் / பண்ணு / வை }

போன்ற உதாரணங்கள் இப்பண்பைக் காட்டும். காரண வினைகள் பிற வினைகள் போலன்றி தொழில் முடிகின்ற பண்பை உர்ணத்து வதால்

ஆடும்படி, ஆடும் வண்ணம், ஆடுமாறு

போன்ற தொடர்களை எடுத்து நிற்கும். எனவே இத்துணைவினைகள் குறையெச்சத்துடன் வருவதோடு மட்டுமன்றி இவற்றுடனும் வருதல் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஆடும்படி<br>ஆடுமாறு<br>ஆடும்வண்ணம்<br><br>ஆட்டும்படி<br>ஆட்டுமாறு<br>ஆட்டும் வண்ணம் | + | செய்<br>பண்ணு<br>வை | |

போன்ற தொடர்கள் காரண வினை காட்டும் தொடர்களாக உள்ளன. எனினும் குறையெச்சத் தொடர்களுக்கும் இவற்றிற்கும் இடையே சில வேறுபாடுகளையும் காண முடியும்.

குறையெச்சத்தொடர்களில் வரும் வாக்கியத்தின் எழுவாய் எப்போதும் செயப்படுபொருள் வேற்றுமையை எடுத்து வருவதும்

| | | |
|---|---|---|
| நான் கண்ணனை ஓட | + | செய்தேன்<br>பண்ணினேன்<br>வைத்தேன் |

இத்தொடர்கள் செயப்படுபொருள் வேற்றுமை மட்டுமின்றி எழுவாயாக எந்த மாற்றமுமின்றி நிற்பதும் குறிப்பிடப்பட வேண்டிய செய்திகள். இங்கு எழுவாய் வேற்றுமைத் தாழ்ச்சி (Subject demotion) கட்டாய நிலையில் இல்லை.

அவனை ஓடும்படிச் செய்தேன்
அவனை ஓடுமாறு செய்தான்

போன்றவை மட்டுமன்றி

| | | |
|---|---|---|
| நான் | அவன் ஓடும்படி<br>அவன் ஓடுமாறு<br>அவன் ஓடும்வண்ணம் | வைத்தேன்<br>செய்தேன்<br>பண்ணினேன் |

போன்றும் வருதல் இப்பண்பைக் காட்டும்.

## செட்டிநாட்டில் வழங்கும் சில சிறப்புத் தமிழ்ச்சொற்கள்.

| | | |
|---|---|---|
| அந்தாசு | — | ஏறத்தாழ |
| அரசு | — | ஆண்குழந்தை (முதல் அரசு, சின்ன அரசு, நடு அரசு) |
| அல்பனத்தி | — | குண்டூசி |
| ஆமக்கன் | — | ஆண்மகன் |
| இஞ்சி | — | கஞ்சன் |
| எக்கு | — | எனக்கு |
| ஏவஞ்சம் | — | ஆகக்கூடி |
| ஒலுகு | — | சதுரவடிவமான தலையணை |
| கடவு | — | இடம் |
| கமை | — | பெருமை |
| கமாம்சு | — | அலுவலகம் |
| கூதரை | — | இழிந்த குணமுடையர் |
| கெடும்பு | — | கெடுதல் |
| கொசறு | — | பின்னம், சிறு சிறு தொல்லைகள் |
| சிலாங்கம் | — | தாராளம், பணவசதி, தடையின்மை |
| சோமாத்தி | — | உதவி |

—சோமலெ

செட்டிநாடும் தமிழும், சென்னை.

# திராவிட மொழிகளில் 'பால்' அமைப்பின் வரலாறும் வளர்ச்சியும்*

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்
தமிழாக்கம்: சா. வளவன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## 0.0: முன்னுரை

பெரும் பான்மையான திராவிட மொழிகள் பால் வேறுபாடுகளைச் சுட்டுவதற்குப் பொதுவாக பால் விகுதிகளையே பயன்படுத்துகின்றன. டாக்டர் கால்டுவெல்லின் கருத்துப்படி பால் விகுதிகள் யாவும் பிரதிப் பெயர்களின் மாற்று அல்லது திரிந்த வடிவங்களாகும், ஜூல்ஸ்பிளாக் பெயர்ப்பதிலி விகுதிகளாகக் கூறுவார். எழுவாயும் பயனிலையும் அதாவது பெயரும் வினையும் பொதுவாக ஒரே பால் விகுதிகளைப் பெற்று வருவதால் தற்காலத்தில் ஒரு சொற்றொடரில் எழுவாய்

* பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் "The History and Development of Gender in the Dravidian Languages" (Papers on Linguistics and Literature. Annamalai University, 1965.) என்ற கட்டுரையின் தமிழாக்கம்.

பயனிலைகட்கு இடையில் தொடரியைபு இருக்கக் காணலாம். மலையாளமும், பிராகூய் மொழியும் இதற்கு விதி விலக்கானவை. இங்கு இரு ஐயங்கள் எழுகின்றன.

1 எப்போது தொடர் இயைபு எனும் இந்த அமைப்பு உருவாகியது?

2 எப்போது, எப்படி இந்த ஐவகைப் பால்வேறுபாடு வளர்ந்தது?

முதலில், முதற்கேள்வியை, அதாவது எப்பொழுது எழுவாய் பய னிலைகட்கிடையே தொடர் இயைபு உருவாகியது என்பதை நோக் குவோம். இப்பால்விகுதிகளை மூலத்திராவிட மொழிக்கு உரியதாகக் கொள்ள இயலுமா?

## 1.0 பால்

பால் அமைப்பில் ஒரே மாதிரியான அமைப்பைத் திராவிட மொழிகள் கொண்டிருக்கவில்லை. தென்கோடி திராவிடமொழி களான தமிழ், மலையாளம், கன்னட மொழிகளே ஐவகை பால் வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. இந்த ஐவகையையும் உயர்திணை, அஃறிணை என இருபெரும் பிரிவுகளுக்குள் அடக்கி விடலாம். உயர்திணைக்குள் மனிதரைச் சுட்டும் விகுதிகளை அடக்க லாம். ஒருமை, பன்மை இரண்டுமுள்ள ஒருமையில் ஆண், பெண் என்னும் உட்பிரிவு உள்ளது. ஆனால் பன்மையில் இத்தகு இலக்கணப் பாகுபாடு இல்லை யென்றாலும் சொற்பாகுபாடு காட்ட முடியும். அஃறிணை அதாவது மனிதரைச் சுட்டாதவற்றில் ஒருமை பன்மை வேறுபாடுள்ளது. இவை பெயர் வழியே செய்யப்படும் பாகுபாடுகள். வினை வழியே நோக்குவோமானால் தற்கால பேச்சு மலையாளத்தில் இவ்வகைப் பால்வேறுபாடுகள் கிடையாது. பிரதிப் பெயர் வேறுபாட்டினையும் கூட அம்மொழி சுட்டாது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது வினைமுற்றுகளில் பெயர்ப்பதிலி விகுதிகள் காணப்படுவதில்லை.

மத்திய திராவிட மொழிகளை நோக்கினால் அங்கு பெண்பால் அஃறிணையினுள் அடக்கப்பட்டுள்ளது. எனவே உயர்திணையை ஆண்பால் என்றும், அஃறிணையை ஆண்பால் அல்லாதவை

என்றும் நாம் கூறலாம். தெலுங்கு போன்ற பேச்சு மொழிகள் மத்திய திராவிடமொழிகளை இவ்வகையில் ஒத்திருக்கின்றன. அஃறிணை ஒருமையில் பெண்பால் ஒருமை அடங்கியிருப்பினும், உயர்திணைப் பன்மையில் பெண்பால் பன்மையும் குறிக்கப் பெறுகின்றது.

வடதிராவிடத்தை நோக்கும் போது, பிராகூய் மொழி பால் அமைப்பினை ஏற்கவில்லை எனத்தெரிகிறது. குருக் மொழியில் பன்மை விகுதியான அர் ஆண், பெண்களுக்குப் பொதுவாய் வழங்குகின்றது. ஆனால் பெண்கள் தம்முள் பேசிக்கொள்ளும் போது ஐ விகுதியைப் பன்மைக்குப் பயன்படுத்துகின்றனர். இது உயர்திணை ஆண்பால் பன்மைக்கும், அஃறிணை ஒருமைக்கும் இடையே காணும் வேறுபாட்டினை உணர்த்தும். ஐ, ஆர் விகுதிகளைப் பின்னர் ஆராய்வோம். ஆனால் பால் விகுதிகளின் ஐவகைப் பாகுபாடு படிப்படியே வளர்ச்சி பெற்று உருவானதே என்பது தெளிவு. எனவே மூலத்திராவிட மொழிக்கு உரியதாக இவற்றைக் கொள்ள இயலாது.

## 1.1. தென்திராவிடம்-தமிழ்

முதலில் தமிழ் மொழியை விரிவாகக் காணலாம். அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்ல வேண்டுமென்பதால் தமிழிலிருந்து தொடங்குவோம். தற்காலத் தமிழில் தன்மை ஒருமை எழுவாயில் யான் அல்லது நான் (சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை)' என்றும், திரிந்த வடிவமாக என் என்றும் வழங்குகின்றன. யாம் (தற்கால வழக்கிலில்லை) அல்லது உளப்பாட்டுப் பன்மையான நாம் வேறுபாட்டுப் பன்மையான நாங்கள் திரிந்த வடிவமான எங்கள் நங்கள் (வழக்கிலில்லை) (உளப்பாட்டுப் பன்மை) நம் வேறுபாட்டுப் பன்மை யாழ்ப்பாண பேச்சு மொழியில் இன்று மாறுபாடாக உள்ளது.) ஆகியவை வழக்கிலுள்ளன.

முன்னிலை ஒருமை எழுவாயில் நி அல்லது நீன் (திருநெல்வேலிப் பேச்சு மொழியில் மட்டும்) நின் (இலக்கிய வழக்கு) உன் (திரிந்த வடிவு), பன்மையில் நீர் (இப்போது உயர்வுப் பன்மையாக மட்டும்) நீயீர் (வழக்கிலில்லை) நீவீர் (வழக்கிலில்லை) அல்லது நிம்

(திருநெல்வேலிப் பேச்சு மொழியில்) அல்லது நீங்கள், நும், நுங்கள் (நும், நுங்கள் இரண்டும் பேச்சு வழக்கிலில்லை) திரிந்த வடிவங்களாக உங்கள் அல்லது உம் (இப்போது உயர்வுப் பன்மையாக நிரம்பக் கையாளப் படுகின்றன) ஆகியவை உள்ளன. படர்க்கையில் ஆண்பால் அவன் பெண்பால் பலர்பால் அஃறிணை ஒன்றன்பால் அது பலவின்பால் அவை என வழங்குகின்றன. வினையில் தன்மை ஒருமையில் என் தன்மைப் பன்மையில் ஓம் முன்னிலை ஒருமையில் ஆய் முன்னிலைப் பன்மையில் ஈர் உயர்திணைப் படர்க்கை ஆண்பால் ஒருமை, பெண்பால் ஒருமை, பலர் பால்களில் முறையே அன், அள், அர் எனவும் அஃறிணை ஒன்றன் பாலில் து வும் பலவின் பாலில் அ அல்லது ஐ அல்லது வ (வழக்கில் இல்லை) வும் விகுதிகளாக வழங்குகின்றன.

மகளிர், கேளிர், வேளிர் போன்ற சிலவிடங்களில் படர்க்கைப் பன்மையாக இர் வருதல் காணலாம். எனவே இச்சிக்கல் நீங்கலான பிறவற்றில் ஒரு தொடரியைபு இருப்பதாகக் கூறலாம்.

தன்மை யொருமையாக நான் பிற்காலத்தில் குறைந்தபட்சம் இலக்கிய வழக்கிலேனும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நாம் உளப்பாட்டுப் பன்மையாகக் கொள்ளவேண்டும். யான் என்பது ஏன் என்றும் யாம் என்பது ஏம் என்றும் மாறியதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். தொல்காப்பியர் காலத்திலேயே ஏம் என்பது ஓம் என மாறியிருக்கிறது. (சூத். 698) ம் இன் செல்வாக்கினால் அங்ஙனம் மாறியது. வருதியில் இருக்கும் இ முன்னிலை ஒருமையைக் குறிக்கும். மேற்குறிப்பிட்ட விகுதிகளில் அஃறிணை விகுதிகள் நீங்கிய ஏனைய எல்லா விகுதிகளும் இலக்கிய வழக்கில் குறில் உயிர்களுடன் கூடிய மாற்று வடிவங்கள் உள்ளன. அன், ஆன், என், ஏன் முதலிய விகுதிகளை நோக்கவும். எனவே இ நீ என்ற முன்னிலை ஒருமையின் கடையுயிராக இருக்கக் கூடும். ஆய் அல்லது அய் யின் கடையில் உள்ள ய் தொல்காப்பிய விதிப்படி ((சூத். 58) இ யின் மாற்று வடிவமாகலாம். இ-யை நீ-யிலிருந்து தருவிக்கலாம். முதல் ந் மறைய ஈ குறுகியிருக்கும்.

முற்காலத்தில் தன்மை, முன்னிலைப் பெயர்களை ஒத்து, தான் தாம் ஆகியவை படர்க்கைப் பிரதிப்பெயர்களாக விளங்கின. இவை முறையே ஒருமை, பன்மைகளைக் குறித்தன. ஆன் 'ஆள்' முதலியவை சுட்டுப் பெயரிலும், வினாப் பெயரிலும், ஆக்கப் பெயரிலும் பயின்று வரும். சுட்டு, வினாப்பெயர்களையும் சுட்டுப் பெயர்களையும் விட்டுவிடின் படர்க்கையில் கூட பால் வேறுபாட்டைக் காட்ட முடியாது. ன் ம் என்பன முறையே ஒருமை, பன்மை வேறு பாட்டினை மட்டும் சுட்டும். பழைய படர்க்கை இடப்பெயர் ஒருமை யில் தான் எனவும், பன்மையில் தாம் எனவும் வழங்கின. பின்னர் தற்சுட்டுப் பெயராய் நிறைந்த அளவில் இவை வழங்கப்படுகின்றன.

முன்னிலை இர் முன்னரே கூறியபடி ஒரு சிக்கலைத் தோற்று விக்கின்றது. படர்க்கைப் பலர்பாலிலும் பயின்று வருகின்றது. இன்னுமொரு அமைப்பும் உள்ளது. பழைய தமிழ் இலக்கியத்தில் செய்கு ஒருமையில் அடிச்சொல் + கு (சூத்-688). பன்மையில் செய்கும் அடிச்சொல் செய் + கும் (சூத்-687) முதலிய சில தன்மை வினைமுற்றுக்கள் காணப்படுகின்றன. நீன் என் இருக்கவேண்டி யது நீ- என இருப்பதிலிருந்து ஒருமையில் ன் மறைந்து விட்டது என்று கொள்ளலாம். எனவே செய்கு என்பது செய்குன் என இருந்திருக்க வேண்டும். எனவே செய்குன் மற்றும் செய்கும் இவற்றிலும் கூட ன், ம் ஒருமை பன்மையை உணர்த்தின, என லாம். கன்னடத்தில் இந்த கும் தன்மைக்கு மட்டுமல்லாமல் பிற இடப்பெயர்கட்கும் பொதுவாக வழங்குகின்றது. தமிழிலும் ஒரு காலத்தில் இப்படி இருந்திருக்கலாம். தொல்காப்பியர் காலத்தில் சென்ற காலத்தை நினைவூட்டும் பழம் பொருளாய் தன்மையில் மட்டும் பயின்று வந்தது எனலாம். இங்ஙனம் கொண்டால் ஆகும் ஆகுவ செய்குவ முதலியவற்றில் காணும் க் (2)–வை ஆக்க உருபாக கொள்ளவேண்டும். அதனால் கடைவிகுதியாக உம்–மைக் கொள்ளவேண்டும். இந்த உம் செய்யும் – அடிச்சொல் + உம் – முதலிய படர்க்கையில் பயின்று வருதல் காணலாம். துரதிட்டவசமாக முன்னர் குறிப்பிட்ட ஒருமை (2)ன், செய்யுந் – அர், செய்யுந் –து போன்றவற்றில் மட்டுமே (அதுவும் நாம் இரண்டையும் தொடர்பு படுத்திப் பார்த்தால்) பயின்று வருகிறது. அர், து போன்ற கடைவிகுதிகளை நீக்கினால் மிஞ்சுவது செய்யுந் ஆகும். மேலே

குறிப்பிட்டிருப்பதில் நுனியண்ண ஒலியாக 'ன்' ஒலிக்கின்றது. ஆனாய் அது பல்லின ஒலியாக எழுதப்பட்டிருப்பதால் சிக்கல் தோன்றுகிறது. தொல்காப்பிய காலத்தில் நுனியண்ண, பல்லின ஒலிகள் எதிர்நிலை வழக்கில் இருந்தன எனத் தோன்றுகின்றது. ஒருக்கால் இத்தகு வடிவங்கள் இந்த எதிர்நிலை வழக்கு வளர்ச்சி பெற்று முழுமை பெறுவதற்கு முந்திய காலத்தின் எச்சங்கள் என ஒருமுடிவுக்கு நாம் வர நேரலாம். செய்யும் போன்ற வினைகள் அடிச்சொல், விகுதி என்ற இரு உறுப்புகளைக் கொண்டவை. மற்ற வினைகள் அடிச்சொல், கால விகுதி, பால்விகுதி என்று மூன்று உறுப்புக்களைக் கொண்டவை. பாலினைச் சுட்டா ஈருறுப்பு வினைகள் பாலினைச் சுட்டும் மூவுறுப்பு வினைகளாக வளர்ச்சி பெற்றதை வரலாற்று மாற்றம் எனக் கூறலாம். ஈருறுப்பு வினைகளை மேலும் சில எடுத்துக் காட்டுகள் தந்து விளக்கலாம்.

பழந்தமிழ் அல்லது சங்ககால இலக்கியங்களில் சில பழைய வடிவங்களைக் காணலாம். அதாவது சில வினைகள் இரு உறுப்புகளை மட்டும் கொண்டு விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக வியங்கோள் அடிச்சொல்லையும் க அல்லது அல் விகுதியையும் பெற்று அமைந்துள்ளது. இது தொல்காப்பியர் காலத்தில் படர்க்கையில் மட்டுமே பயின்று வந்தமை உண்மைதான் (சூத். 711) அதாவது அவருடைய இலக்கிய வழக்கில் மட்டுமே பயன்று வந்துள்ளது. இது பயின்று வந்த பழைய வடிவம் என்பதால் படர்க்கையில் மட்டுமே நிலைபேறு அடைந்தது எனலாம். ஆனால் பிற வழக்குகளில் இவ்வமைப்பு எல்லா பிரதிப் பெயர்களுக்கும் பால், திணைக்கும் பொதுவானதாக இருந்தமையைச் சங்க வழக்காறு (புறநானூறு. 2) காட்டும். கடந்த காலத்தின் எச்சங்களாக வேறுசில வினைமுற்று வடிவங்களும் பயின்று வந்துள்ளன. அவை பால் திணை விகுதிகளைப் பெறாமல் காணக்கிடைக்கின்றன. இதே சொற்கள் பிற்காலத்தில் பால், திணை விகுதிகள் பெற்று வந்துள்ளதையும் சங்க இலக்கியத்தில் காணலாம். நுவன்று போன்றவற்றை முன்னதற்கு எடுத்துக் காட்டாகவும், நுவன்றார் நுவன்றிசின், நுவன்றிசினோர் முதலியவற்றைப் பின்னதற்கு எடுத்துக் காட்டாகவும் காட்டலாம். பால்திணை விகுதிகள் பெறாமலிருந்த நுவன்னு முதலியன இப்போது எச்சவினையாகக் கருதப்படுவதைக் காணலாம்.

ஆயினும் பேச்சு மலையாளத்தில் அவை வினைமுற்று வடிவங்களா கவே உள்ளன. சங்ககாலத்தில் இன்னும் சில வடிவங்கள் கூட இன்று வினையெச்ச வடிவங்களாகத் தோன்றுவன வினை முற்று வடிவங்களாக இருந்தவையே. கண்டாங்கு (நற்றிணை 291 – 6) போன்றவை கண்டு எனும் வினைமுற்று வடிவமும் ஆங்கு எனும் ஒப்புமை உருபும் சேர்ந்தது என்ற எண்ணத்தைத் தோற்றுவிக் கின்றது. இவ்வண்ணம் செய்யுநர் செய்யுமோர் போன்ற வடிவங்க ளையும் ஆய்வுக்குரியதாக்குகின்றது. இவை உண்மையிலேயே பழைய வினைமுற்று வடிவமான செய்யுந் அல்லது செய்யும் என்ப தோடு பால்விகுதி அர் அல்லது ஓர் பெற்று பயின்று வந்துள்ளது எனலாம்.

### 1. 1. 2. கன்னடம்

கன்னடத்தில் கூட சில வினைச் சொற்களில் பழைய வடிவங்கள் ஈருறுப்புகளாகவும் பிற்கால வடிவங்கள் மூவுறுப்புகளாகவும் இருப் பதைக் காணலாம். ஈருறுப்புகளாக விளங்கும் வினைகள் ஒருக்கால் தொடக்கக் காலத்தில் பெயர்த் தொடர்களாக இருந்திருக்கலாம். இத்தகு ஈருறுப்புப் பயனிலைகள் பயின்று வரும்போது பால் திணை யில் தொடரியைபு இருக்க முடியாது.

கன்னடத்தில் தன்மை ஒருமை ஆம் அல்லது ஆன் ஆகும். இதன் வேற்றுமைத்திரிபு பால், இடவிகுதி எம் அல்லது எனு ஆகும். ம் ன் இரண்டும் கடைநிலையில் பொதுமையாக்கப்பட்டிருப்பதைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். ஆனால் இப்பொதுமையாக்கத்தைத் தமிழில் அஃறிணைக்கு மட்டுமே கொள்ளல் வேண்டும். இல்லை யெனில் ஆண்பால் அன் விகுதியோடு குழப்பிக் கொள்ள வேண்டி யிருக்கும். ஆனால் கன்னடத்தில் ஆண்பால் அன், அம் மாகவும் பயின்று வரும். அஃறிணையில் பன்மை அம் முக்கும் ஒருமை அன் னுக்கும் இடையில் இருந்த வேறுபாட்டினை இழந்தமையால், தமிழில் பால்பகா அஃறிணை என்பது தோற்றம் பெற்றது. கன்னடத் தில் ஆண்பால் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர் அம். வேறு பாட்டுத் தன்மைப் பன்மை நாவு. இதனுடைய வினை விகுதி எம் மாகும். அடிக்கடி மூக்கொலி ம் மூக்கொலிப்புத் தன்மை இழந்து

வ் ஆவதால் வினைவிகுதியாக எவுவைக் கொள்கின்றோம். முன்னிலைப் பெயரின் ஒருமை நீன்னாகவும் வேற்றுமைத் திரிபு வடிவம் நின்னாகவும் உள்ளது. இங்கேயும் ன், ம் இரண்டும் பொதுமையாக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம். வினைவிகுதி அய் தற்காலத்தில் எ, இ என்றானதாகவும் கூறப்படுகின்றது. இவ் அய் விகுதியைத் தமிழில் மட்டுமல்லாது வட, நடுதிராவிடங்களிலும் காணமுடிகின்றது. இந்த அய் படர்க்கைப் பன்மை விகுதியாக குருக், குயி மொழிகளில் மட்டுமல்லாது 'அவை' என்ற தமிழ்ச் சொல் லிலும் பயின்று வந்துள்ளது. இரண்டாம் வேற்றுமையை நினைத்துப் பார்ப்பவர்க்கு கன்னடத்தில் அம் மும் தமிழில் அய்யும் நினைவுக்கு வரும். மூல திராவிட மொழியில் பன்மை வடிவம் முதலில் (அ) ம் ~ (அ) வ் இருந்து பின்னர் (அ)ய் ஆகியிருக்கலாம் எனக் கூற முடியும். முன்னிலைப் பெயரில் இந்த் அய்யை அவ்வாறு காண்பது கடினமானதே. முதலில் அம்மாக இருந்த ஒருமை ம், ன் னாகப் பின்னர் பயின்று வந்ததால் வந்த குழப்பத்தின் காரணமாக இம் மயக்கம் தோன்றக் கூடும். முன்னிலை பன்மை நீவு. அதன் வேற் றுமைத் திரிபு வடிவம் நிம். இதிலும் பன்மை விகுதி ம் என்பது எழுவாய் வடிவத்தில் வ் வாக மாறுகின்றது. தமிழ் நீங்கள் என்ற சொல்லில் இவ் ம் பயின்று வருகின்றது. நீங்கள் என்பதை நீம் + கள் என பகுக்கலாம். ஆகவே இது ம் + கள் ஆகிய இரு பன்மை விகுதிகளைக் கொண்ட இரட்டைப் பன்மைச் சொல் ஆகும். தமிழ் நீவிர் என்பதில் கன்னடத்தைப் போலவே நீவ் உள்ளதென்றாலும் மற்றொரு பன்மை விகுதி இர் சேர்ந்துள்ளது. இங்கும் இந்த இர் முன்னிலை, படர்க்கைப் பன்மைகளில் ஒன்றாகப் பயின்று வருவதை மீண்டும் நிரூபிக்கின்றது. ஆனால் இந்த இர் கன்னடத்தில், முன்னிலைப் பன்மையில் எழுவாய்ச் சொல்லிலோ, வேற்றுமைத் திரிபுச் சொல்லிலோ காணப்படவில்லை. படர்க்கையில் சுட்டு வினாப் பெயர்களின் மூலம் கண்டால் ஜூல்ஸ் பிளாக் (Jules Block) எடுத் துக்காட்டியபடி ஒப்புமை சரியானதாகும். ஆண்பாலுக்கு அம் (அன்), பெண்பாலுக்கு அள், அஃறிணைக்கு அது, பன்மைக்கு அர், அஃறிணைப் பன்மைக்கு அவு என உள்ளன. இங்கு உ ஒலி நயத்துக்காகவும் பன்மை ம் பின் மெலிந்த வடிமாக வ் வும் உள்ளன.

**1.1.3.**

துளு மொழியில் தன்மை ஒருமை விகுதி எ. பன்மை விகுதி அ. முன்னிலை விகுதி எ (சில இடங்களில் இ) பன்மை விகுதி அரு, படர்க்கை விகுதி எ (ஆண்பால்) அலு (பெண்பால்), அஃறிணை ஒருமை உ என உள்ளன. படர்க்கைப் பன்மை விகுதி உயர்திணையில் எரு வாகவும், அஃறிணையில் அ வாகவும் உள்ளது. முன்னிலை, படர்க்கைப் பன்மைகளில் காணும் உயிரெழுத்துக்கள் பெயர்ப்பதிலிகளில் காணப்படுவதில்லை. முன்னிலை ஒருமையும், தன்மைப் பன்மையும் ஒரே மாதிரியாகவும் தன்மையொருமையும், படர்க்கை யொருமையும் ஒரு தன்மையாகவும் உள்ளன. இச்சூழல்களில் தொடரொற்றுமை அல்லது தொடரியைபு சுட்டுவது கடினம்.

எண்ணில் கூட தொடர் இயைபு எப்போதும் ஒரே மாதிரியாக இல்லை. செய்து போன்ற தன்மை வடிவங்களில் கூட கடைசியில் இருக்க வேண்ய ன் மறைந்து விட்டது. முன்னிலைப் பன்மையில் பன்மை விகுதி ர் ரும் பிற்காலத்து படர்க்கை உயர்திணைப்பன்மை ர் விகுதியும் சேர்ந்து மயக்கந் தருகின்றன. கேளிர் போன்ற பன்மைச்சொற்களில் படர்க்கைப் பன்மை விகுதியான அர் காணப் படுவதில்லை; இர் காணப்படுகின்றது.

**1.1.4.**

பெயர்த்தொடர் வினைகளான கண்டு, நு வன்று போன்றவை முன்னரே குறிப்பிட்டபடி தற்கால மலையாளப் பேச்சு மொழியில் வினைமுற்றுக்களை ஒத்திருக்கின்றன. எனவே சில தொன்மை வடிவங்கள் ) சங்கத்தமிழில் பயின்று வந்து இன்றைய பேச்சு மலையாளத்தின் நிலைத்த வடிவங்களாகத் தொடர்ந்து பயின்று வருகின்றன என நாம் கொள்ளலாம். இலக்கிய மலையாளம், அதிலும் குறிப்பாக இடைக்கால இலக்கியம், இடைக்கால இலக்கியத் தமிழின் பாதிப்புக்குள்ளானது. அதனால் பேச்சு மலையாளத்தினின்று வேறுபட்ட தோற்றத்தைப் பெற்றிருக்கின்றது. எனவே, தென் திராவிட மொழிகளில் பிற்காலத்தில் பெயர் பதிலி விகுதிகள், பால் விகுதிகளாக மாறுவதற்கமைந்த வாய்ப்பினை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதாகின்றது.

### 1.2.1. நடு திராவிடம்—தெலுங்கு

நடுதிராவிடத்தை நோக்கும்போது, தெலுங்கு நாடு, தென் திராவிடத்திற்கு இடைப்பட்ட நிலையில் இருக்கின்றது. அதில் தன்மை ஒருமை ஏனு வாக உள்ளது. அதன் வேற்றுமைத் திரிபு வடிவம் நா வினைமுற்றில் தன்மை ஒருமைக்குக் குறிப்பிட்ட உயிரெழுத்து எதுவும் விகுதியாக இல்லை. வினை விகுதியாக ந் அல்லது நு உள்ளது. தன்மைப் பன்மை ஏமு வாகவும் அதன் வேற்றுமைத்திரிபு வடிவம் மா வாகவும் உள்ளன. வினைமுற்று விகுதி மு வாகும். இங்கும் கூடத் தன்மையைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய உயிரெழுத்து எதுவும் இறுதியில் இல்லை.

தெலுங்கில் வேறுபாட்டுத் தன்மை வடிவம் ஏமு. உளப்பாட்டுத் வடிவம் மனமுவாகும். தெலுங்கு மற்றும் பிறநடு திராவிட மொழி களில் இத்தகு வேறுபாடு வினைச்சொல்லில் பின்பற்றப்பட வில்லை. முன்னிலை எழுவாய் ஒருமை ஈவு அல்லது நீவு எனவும் அதன் வேற்றுமைத் திரிபு வடிவம் நீ எனவும் வினைவிகுதி வு அல்லது வி எனவும் வரும். இங்கு வ் உடம்படுமெய்யே அன்றி அடிப்படை விகுதியின் ஓர் உறுப்பல்ல. அதாவது விகுதி வு முன்னிலை யின் குறியீட்டுப் பகுதியோடு எந்தத் தொடர்புமில்லாதது. ஆயினும் எழுவாய், பயனிலைகளின் விகுதிகளில் உடன்பாடு காணும் முயற்சி எப்படியோ மேற்கொள்ளப் பட்டது. முன்னிலைப் பன்மைப் பெயர் இரு வாகும். அதன் வினைவிகுதி ரு ஆகும். உயர்திணைப்படர்க்கைப் பன்மைப் பெயர் வாரு. அஃறிணை விகுதி அவியாகும். வினைவிகுதி வு அல்லது வியாகும். இங்கு முன்னிலைப் பன்மையிலும், படர்க்கைப் பன்மையிலும் ஒரே விகுதி (ரு) உள்ளதை நாம் காண்கிறோம். பின்னிலை ஒருமையும் படர்க்கை அஃறிணைப் பன்மையும் ஒரே விகுதியைப் (வு அல்லது வி) பெற்றுள்ளன. உண்மையான இடுகுறியாக்கம் அல்லது குறிப் பிட்ட இயைபு இருப்பதாகக்கூறுவது மிகக் கடினம். இவ் விகுதிகள் தெளிவாகப் பொருந்தாத போதிலும் எப்படியோ பெயர்ப்பதிலிகளின் இயைபில்லா விகுதிகளுடனும் பொருத்தம் பெற்றுள்ளன.

### 1. 2. 2. கோண்டி

கோண்டி மொழியில் தன்மை ஒருமை அனாவாகவும் அதன் வேற்றுமைத்திரிபு வடிவம் நாவாகவும் வினை விகுதிகள் ஆ,

ஆன் அல்லது ஓன் ஆகவும் உள்ளது. முன்னிலை ஒருமை எழுவாய் இம்மாவாகவும், வேற்றுமைத் திரிபு வடிவத்தில் நீயாக வும், வினை விகுதி இயாகவும் உள்ளது. படர்க்கை ஆண்பால் ஓல் ஆகவும், அதன் வினைவிகுதி ஓல் அல்லது உர் ஆகவும் உள்ளது. ஒருமையால் ர் பயின்று வத்துள்ளமையால் இதனை இன்றியமையாது குறிப்பிட்டாக வேண்டும். அஃறிணை வினை விகுதிக்கென்று எதுவும் இல்லையென்றாலும், எழுவாயில் அட் (ad) வடிவம் உள்ளது. வேறுபாட்டுத் தன்மைப் பன்மை எழுவாய் அம்மட் (ammat) ஆகவும் அதன் திரிபு வடிவம் மா வாகவும் வினை விகுதி ஆம் அல்லது ஓம் ஆகவும் உள்ளது. உளப்பாட்டுப் பன்மை அப்போ வாகவும், அதன் திரிபு வடிவம் அட் (at) ஆகவும் உள்ளது. இது பற்றிய குறிப்பு பின்னர் கூறப்படும். முன்னிலைப் பன்மை இம்மட் (immaṭ) ஆகவும் அதன் திரிபு மீ ஆகவும், வினைவிகுதி ஈட் (iṭ) ஆகவும் உள்ளது. படர்க்கை ஆண்பால் பன்மை ஓர் ஆகவும் அதன் வினைவிகுதி ஓர் அல்லது உர் ஆகவும் உள்ளது. படர்க்கை அஃறிணைப்பன்மை ஔ. இது தமிழ் அவ்வோடு இயைபுள்ளதாக உள்ளது. அதன் வினை விகுதி ஆங் (ang) ஒங் (ong), அல்லது உங் (ung) ஆகும். இந்த அஃறிணைப் பன்மை, அஃறிணைப் பெயர் பதிலியோடு எத் தொடர்பும் பெற்றிருக்கவில்லை. ஒருக்கால் பழைய பன்மை அம் முன் அஃறிணைப்பன்மை க் (k) சேர்ந்தது எனலாம். இது ஒரு இரட்டைப்பன்மை வடிவமாகும். கடைவிகுதி ட் (ṭ)–ஐ பிறமொழி களில் காணும் வடிவங்களோடு ஒப்பிடுவது கடினம். உயர்திணை வினைவிகுதிகளில் ஒருமை, பன்மைக்கிடையில் காணும் மயக்கமும் குறிக்கத்தக்கது.

### 1.2.3. குயி

குயி மொழியில் தன்மை யொருமை ஆனு வாகவும் அதன் வினை விகுதி நிகழ்காலத்தில் இயாகவும் இறந்த காலத்தில் எ (e) வாகவும் பயின்று வருதலைக் காண்கிறோம். முன்னிலை ஒருமை யில் ஈனு வரும். இங்கும் இ நிகழ்காலம், இறந்தகாலம் இரண்டி லும் விகுதியாக வந்துள்ளது. படர்க்கை ஆண்பால் ஒருமை அஞ்சு (anju) வாகும். ஆனால் வினை விகுதி எஞ்சு (enju) வாகும். படர்க்கை அஃறிணை ஒருமை ஈரி அல்லது ஐ (ai) யாகும்,

ஆனால் வினை விகுதி, தன்மைப் பன்மையாகவரும் எ (e)வுக்கு இணையாகும். தன்மை வேறுபாட்டுப்பன்மை ஆமு வாகும். ஆனால் வினைவிகுதி அமு வாகும். உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆஜு (āju) வாகும். வினை விகுதி ஆசு (āsu) வாகும். இந்த S கோண்டியின் ட் (ṭ)டுடனும் குருக்கின் த் (t) துடனும் ஒப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். முன்னிலைப் பன்மை இரு வாகும். ஆனால் வினை விகுதி எரு வாகும். படர்க்கை உயர்திணைப் பன்மை இயரு (iaru)வாகும். ஆனால் வினைவிகுதி ஒருமையைப்போல தொடக்கத்தில் எ (e) உயிரைக் கொண்டுள்ளது. வினைவிகுதி எரு வாகும். முன்னிலைப் பன்மை விகுதியுடன் ஒப்புமையுள்ளதாகும். இது அஃறிணைப் பன்மையில் தெளிவாக விளங்கும்; உ (u) அதன் ஒலிநயமாக உள்ளது. அதன் எழுவாய் வடிவம் ஈவி யாக உள்ளது. இங்கும் சிக்கல்கள் தோன்றி சில வகைகளில் தொடர்பு பெற்றிருந் தாலும், பெரும்பான்மையான வகைகளில் குறிப்பிடத்தக்க அல்லது சிறப்பு வாய்ந்த தொடர்புகளை ஒப்புமைப் பகுதிகளாகக் குறிக்க இயலாமல் போகின்றது.

### 1.3.1. திராவிடம் — பிராகூய்

வடதிராவிடத்தை நோக்குவோம். பிராகூய் மொழியில் தன்மை யொருமை ஈ. வேற்றுமைத் திரிபு வடிவம் கன். தன்மை யொருமை விகுதி இவ். முன்னிலை ஒருமை விகுதி இஸ் (is). படர்க்கை விகுதி தேன் னாகவும், அதன் விகுதி எ வாகவும் உள்ளது தன்மைப் பன்மை எழுவாய் நன் (nan) னாகவும், அதன் விகுதி இன் (in) னாகவும் உள்ளது. முன்னிலை எழுவாய் நும் மாகவும் அதன் விகுதி ஐ அல்லது இ (i) அல்லது இரெ (ire) வாகவும் உள்ளது. படர்க்கைப் பன்மையும் தேன் (tēn) னாகவே உள்ளது. ஆனால் வினை விகுதி இர் (ir) ராக உள்ளது. இங்கு மீண்டும் முன்னிலைப் பன்மையும், படர்க்கைப் பன்மையும் ஒன்றாகவே காணப்படுகின்றது. முன்னிலை யொருமை விகுதி இஸ் (is) யாகவும் தன்மை யொருமை விகுதியாக (iv) இவ் வும் பயின்று வருகின்றமையைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது. படர்க் கையில் தென் னில் உள்ள ன் விகுதி இவ்வாறே உணர்ந்து கொள்ள அருமையாய் உள்ளது. இவ் (iv) இஸ் (is) இரண்டும் தொடக்கக் காலத்தில் இந்தோ - ஆரியத்தில் இருந்திருக்கலாம்

என்பர் ஜுல்ஸ் பிளாக் - (Jules Block). ஐரோப்பிய நாடோடி இனத்தவர் (Gypsy) மொழி தன்மை யொருமைக்கு Kamar முன்னிலை ஒருமைக்கு kamas ஆகிய சொற்களைக் கொண்டுள்ளது.

1.3.2. குருக்

குருக் மொழியில் தன்மை யொருமை ஏன் ஆகவும், வினை விகுதி ஆண்பாலுக்கு அன் ஆகவும், பெண்பாலுக்கு ஏன் ஆகவும் உள்ளதைக் காண்கிறோம். தன்மை முன்னிலைகளில் ஆண் பெண் பால்கட்கிடையில் காணும் இந்தவேறுபாடு திராவிட மொழிகளில் இந்த மொழியில் மட்டுமே காணப்படுகின்ற ஒரு வளர்ச்சி யாகும். இவ்வமைப்பை மூலத்திராவிட மொழிக்கு உரியதாகக் கூற இயலாது. தன்மைப் பெயரில் உயிரெழுத்தின் எவ்வித அறிகுறியும் இல்லாமல் ன் (n) னில் முடியும்ஒரு விகுதியும் காணப்படுகின்றது. முன்னிலை ஒருமை நீன் (n̄in) எனக் காணப்படுகின்றது. ஆண் பால் விகுதியாக ஐ (ai) யும், பெண்பால் விகுதியாக இ (i) யும் காணப்படுகின்றன. படர்க்கை ஆண்பால் ஆஸ் (ās) ஆகவும், அஃறிணை ஆட் (ād) அல்லது ஈட் (id) ஆகவும் உள்ளன. வினைவிகுதி ஆண்பாலுக்கு அஸ் (as) ஆகவும், அஃறிணைக்கு ஆ அல்லது ஈ யும் உள்ளன. குருக் மொழியில் கூட படர்க்கை ஒருமை தான் ஆகவும், பன்மையில் தாம் ஆகவும் பயின்று வரு கின்றன. வேறுபாட்டுத் தன்மைப் பன்மையின் வடிவம் 'ஏம்' ஆகவும், அதன் வினைப் பகுதி அம் ஆகவும், உளப்பாட்டுத் தன்மை வடிவம் நாம் ஆகவும் அதன் வினை விகுதி அத் (at) ஆகவும் உள்ளன. முன்னிலைப் பன்மை நீம் ஆகவும், அதன் வினைவிகுதி அர் ஆகவும் உள்ளன. படர்க்கை ஆண்பால் பன்மை அப்றர் (abṛar) ஆகவும், அதன் வினைவிகுதி அர் ஆகவும் உள்ளன. அஃறிணைப் பன்மைக் கென்று தனியாக ஏதும் வினைவிகுதி இல்லை. இங்கும் முன்னிலைப் பன்மையும், படர்க்கை உயர்திணைப் பன்மையும் ஒன்றாகவே உள்ளன. உளப்பாட்டுத் தன்மையின் விகுதி அத் கோண்டி மொழியின் உளப்பாட்டுத் தன்மை விகுதி அட் (at)டை நினைவுறுத்துகிறது. அது தன்மையில் காணும் உயிரெழுத்து அ வையும் முன்னிலையின் கடைசியில் விளங்கும் மெய்யெழுத்து த்-தையும் கொண்டுள்ளது - நோக்குக. "இம்மட்". ஐ (ai) முன்னிலை ஆண்பால் ஒருமை விகுதியென்றாலும், முன்னிலை

படர்க்கைகளின் பன்மையைக் குறிக்கும் விகுதியாகப் பயன்படுத்தப் பட்டதைக் (ai) குறிப்பிடவேண்டும். கிர்க்னூர்டு (Grignard), பெண்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும்போது வழக்கமாகப் பயின்று வரும் அர் விகுதிக்குப் பதிலாக இதனைப் பயன்படுத்துவதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## முடிவுரை

இந்த இரு வடதிராவிட மொழிகளின் அடிப்படையில் மூலத் திராவிடத்தில் எந்தப் பெயர்ப்பதிலி விகுதியையும் நம்மால் திருத்தி அமைப்பது கடினமாக இருக்கும். இரண்டு எண்களுக்கிடையே வேறுபாடு உள்ளது என்று தொடங்கலாம். பிராகூய் மொழியில் ஆண்பால் பன்மையாக அர் இருந்தும், ஆண்பால் ஒருமையாக அஸ் (as) உள்ளது. தமிழில் செய்யியர் போன்றவற்றில் உள்ள அர் வாழ்த்தில் அல்லது மறைமுகக்கட்டளை போன்றவற்றில் பயின்று எண், திணைகளைச் சுட்டாமல் காணப்படுகின்றது. ல் பேச்சு மொழியும், ர் (r) பேச்சு மொழியும் பல்லினவிகுதி போன்றவையாகக் கருதப்பட்டு அர் விகுதிக்கு இணையாகக் கொள்ளப்பட்டன எனலாம்.

மேற் கூறியவற்றிலிருந்து இந்தத் தொடரியைபு பிற்காலத்தில் தான் முடிவு செய்யப்பட்டது என்பது தெளிவாகின்றது. பிரதிப் பெயர்களின் பொருத்தமில்லா விகுதிகளின் தொடர்பு மூலம் இது உறுதிப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, தெலுங்கின் முன்னிலை ஒருமையைக் குறிப்பாகக் கூறலாம்.

பழந்தமிழ் இலக்கியம் கூட ஒரு காலத்தில் பால் விகுதி இல்லாமல் இருந்தமைக்கு சான்று கூறுகிறது. இரு பகுப்பாக மட்டும் விளங்கும் வினைமுற்றுக்கள் பல்வேறு திராவிட மொழிகளில் பயின்று வருதலும் இம்முடிவுக்கு வரக் காரணமாகும். இறுதியாக மலையாளத்திலும் சான்று இருப்பதைச் சுட்டலாம். பிராகூய் மொழியிலும் பால் பகுப்பு வேறுபாடு இல்லை என்ற உண்மையையும் இங்கு கவனித்தல் வேண்டும்.

ஜூல்ஸ்ப்ளாக், முண்டா மொழியோடு தொடர்பு கொண்டமையாலேயே வினையில் பால்விகுதிகள் வளர்ச்சி பெற்றன என்று கருத்து

தெரிவித்துள்ளார். பிரதிப் பெயர்களில் ஒழுங்கின்மை இருப்பினும் இந்தப்பால் விகுதிகளை ஓர் அமைப்பாக்க முயல்கின்றனர். "சாந்தலியில் உயிருடையன எழுவாயாக இருப்பின் அவற்றைக் குறிக்க வினையோடு பிரதிப்பெயரை விகுதியாக்கிக் குறிப்பர். பிரதிப்பெயரே எழுவாயானால் வினைக்குப் பின்னர் விகுதி வடிவத்தில் அது மீண்டும் சேர்க்கப்பெறும். உயிரற்றவை எழுவாயானால் எந்தப் பிரதிப் பெயர் எழுவாயும் குறிக்கப்படமாட்டா. ஆயினும் சில முண்டா மொழிகளில் பிரதிப்பெயர் எழுவாயாக இருந்தும் விகுதி இல்லை. ஆனால் சில மொழிகளில் பெயர்ப்பதிலி விகுதிகள் காணப்படுவதில்லை என்பதை நோக்கவேண்டும்." எனவே ஜுல்ஸ் பிளாக்கின் கருத்துப்படியும் முண்டா மொழிகளிலும் பிறவற்றிலும் இணை வளர்ச்சிப் போக்கு உள்ளது என எவரும் கருதலாம்.

சங்க இலக்கியத்தில் "நோகோ யானே" என்ற தொடரில் (நற்றிணை 108.8) இப்பெயர் யானே, நோகோ வினைக்குப் பின்னர் வந்துள்ளது, செய்கு வடிவத்தினை ஒத்த நோகு எல்லா ஒருமைக்கும் பொதுவானதென்றால் தன்மை யொருமையைக் குறிக்க யான் என்பதைக் குறிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பின்னர் இந்த யான் என்பதின் திரிபு வடிவத்தைப் பிந்து அசை நிலையாகவும் பின்னர் தன்மையிடத்தில் என் விகுதியின் கடைசியிலும் பயன்படுத்தியிருக்கலாம். பிற எடுத்துக்காட்டுக்களாலும் இதனை உணரலாம். குறிப்பாக விளக்கத்திற்காகவும், தொடரியைபுக்காகவும் இந்நிலை தோன்றியிருக்க வேண்டும். பால் விகுதிகளின் வளர்ச்சியின் போது இத்தொடரியைபு தேவையாயிற்று.

இது திராவிட மொழிகளில் வினையிறுதியில் பால் விகுதிகள் வளர்ச்சி பெற்ற வரலாறே தவிர இதுவே பால் பற்றிய கருத்து என எண்ணல் வேண்டா.

## 21. பால் வளர்ச்சி – தென்திராவிடம்

இப்போது பால் வளர்ச்சியைக் காண்போம். மலையாள வினை முற்றுக்கள் பால் விகுதிகளைக் கொண்டிருக்கவில்லை யென்றாலும் பெயர்கள், ஐ வகை பால் அமைப்பைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகின்றன. பிராகூய் மொழியில் பால் வேறுபாடின்மை உண்

மையே. பால் வேறுபாடு சுட்டாத இரானிய பேச்சு மொழிகள் பிராகூய் மொழியைச் சூழ்ந்திருப்பதால், அவற்றின் பாதிப்பு இதற்குக் காரணமாயிருக்கலாம். எனவே இங்கு மேலும் விரிவான ஆராய்ச்சி செய்ய வேண்டியுள்ளது. முழுமையாக வளர்ச்சி பெற்ற ஐ வகை வேறுபாடு தமிழ், கன்னடம், மலையாள மொழிகள் மட்டுமே பெற்றுள்ளன என்பது மட்டும் தெளிவாக விளங்குகின்றது. இம்மொழிகளில் கூட அமைப்பில் சீரமைப்பு தேவைப்படுகின்றது. எடுத்துக்காட்டாக தமிழில் உயர்திணை, அஃறிணை காணப்படுகின்றது. இருதிணைகளிலும் ஒருமை பன்மைக்கிடையே வேறுபாடுள்ளது. சீரமைப்பு இத்துடன் நின்றுபோகின்றது. ஏனெனில் இலக்கண விகுதிகளின் வழிநோக்கினால் உயர்திணைப்பன்மையிலோ அல்லது அஃறிணை ஒருமை பன்மைகளிலோ பால் வேறுபாடு காணப்பெறவில்லை. பொதுவாக தொடக்கத்தில் பால்காட்டும் விகுதிகள் இல்லாமல் இருந்தன; பின்னர் உயர்திணையில் மட்டும் ஆண், பெண்பால்கட்கிடையே வேறுபாடு தோன்றியது என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன.

## 2.2 நடுதிராவிடம்

நடுதிராவிடத்தில் வேறுபட்ட வடிவம் நமக்குக் கிடைக்கின்றது எடுத்துக் காட்டாக, கோண்டி மொழியில் உயர்திணை, அஃறிணைக்கிடையே வேறுபாடுள்ளது. ஆனால் அவ்வேறுபாடும் உண்மையில் ஆண்பால், ஆண்பால் அல்லாதவை என்ற அடிப்படையில் எழுந்ததே. ஆனால் தெற்கில் உயர்திணை என்பது மனிதவகையையும், அஃறிணை என்பது மனிதவகையில்லாததையும் குறிக்கும். அதாவது மனிதருக்கும் மனிதரல்லாதாருக்குமிடையே உள்ள வேறுபாடாகும். கோண்டியில் அடிப்படை வேறுபாடாகத் தோன்றுவது ஆண்பால், ஆண்பாலில்லாதவைக்கிடையேயுள்ள வேறுபாடுதான். கோண்டி மொழிக் கட்டத்தைக் கடந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது குயி மொழி. வளர்ந்தநிலையில் குழந்தைகள் தத்தம் தாயரைப்பற்றிப் பேசும் போது முழுமையாக உணர்ந்து அஃறிணையாகக் கருதாமல் இருக்க இவ்வளர்ச்சி உதவுகின்றது. தெலுங்கு போன்ற மொழிகளில் உள்ள உள்ளார்ந்த கடினம் ஏதுமில்லை. குழந்தைகளும் சமுதாயமும் பெண்பாலையும் அஃறிணையையும் வேறுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றிருக்க வேண்டும். முதலில் பன்மையில் இது தோன்றியது; தாயும் பிற பெண்பால் உறவினரும் குழுவாக்கப்பட்டு

ஆண்பால் பன்மையோடு சேர்க்கப்பெற்று ஒரே குழுவாகப் பேசப் பெற்றனர். இதைத்தான் தெலுங்கில் நாம் காண்கிறோம். அங்கே பெண்பால் ஒருமை அஃறிணை வகையில் இருந்தாலும் பெண்பால் பன்மை உயர்திணைப்பன்மை அல்லது ஆண்பால் பன்மையில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆனால் தெலுங்கில் உள்ள இத்தகு முழு வளர்ச்சியை அடைவதற்கு முன் இடைப்பட்ட கட்டம் ஒன்று இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. ஆண்பால் பன்மையிலிருந்தும் அஃறிணைப் பன்மையிலிருந்தும் வேறுபட்டு பெண்பால் பன்மை இருந்திருக்கலாம். முன்னரே குறிப்பிட்டபடி ஆண்பால் பன்மையைக் குறிக்க அர் விகுதிபோல, பெண்பால் பன்மையைக் குறிக்க ஐ (ai) தோன்றி-யிருக்கலாம். பெண்கள் தங்களுக்குள் உரையாடும்போது குருக் மொழியில் பெண்பால் பன்மையைக் குறிக்க ஐ (ai) விகுதியைப் பயன் படுத்துவர். அம்மொழியில் இந்த ஐ முன்னிலைப் பன்மையின் வடிவத்தை ஒத்துள்ளது. இதனைக் குயி மொழியோடு ஒப்பிடும்போதும், அங்கும் ஐ விகுதி மனிதரல்லா பன்மைக்கும், பெண்பால் பன்மைக்கும் என்ற இரண்டுக்கும் பொதுவாக அஃறிணையில் பயின்று வருகின்றமையை அறியலாம். எடுத்துக் காட்டாக அனை (anai) என்பது இந்தப் பொருட்கள் என்ற பொருளை மட்டுமல்லாமல் இந்தப் பெண்கள் என்ற பொருளையும் சுட்டும். இன்னொரு சான்றுமுள்ளது. குயி மொழியில் ஆண்பால் பன்மைக்கு ரு (ru) விகுதியாக உள்ளது. ஒலித்துணைச் சேர்க்கையாக உயிரெழுத்து உ-வை எடுத்துக்கொண்டால் ர் விகுதி மட்டுமே எஞ்சும். நம்மிடம் abaru (தந்தையார்) என்ற சொல் உள்ளது. ஆனால் மனிதரல்லாத பன்மையைக் குறிக்க க் (அ) உள்ளது. koru என்பது எருமை; ஆனால் korka பன்மையாகும். எனவே பெண்பால் உறவினரைக் குறிக்கத் தனியான பன்மை விகுதி ஐ (ai) விகுதிக்கு மேலும் ஒன்று இருந்திருக்க வேண்டும். முன்னரே இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. aja அம்மாவைக் குறிக்கும். ajaska தாயர் என்ற பொருள் தரும். mrau மகளைக் குறிக்கும். mrauska' பெண்மக்களைக் குறிக்கும். ska வையும் koruka வையும் ஒப்பிடும் போது ka பொதுவாக இரண்டிலுமுள்ளது. இனி, பெண்பால் பன்மை sk விகுதியை பிராகூய் மொழியின் sk

விகுதியோடு ஒப்பிடலாம். முன்னரே கூறியபடி, பிராகூய் மொழி பால் வேறுபாடு சுட்டுவதில்லை. ஆனால் பன்மை விகுதியைக் (k) கொண்டுள்ளது.

xall – எனில் கால்

xalk – எனில் கற்கள்

ir – எனில் சகோதரி

irk – எனில் சகோதரிகள்

நம் தமிழில் காணும் உயர்திணைக்குரிய சொற்களான எமர் தமர் போன்றவற்றிற்கு இணையாக பிராகூய் மொழியிலும் மனிதக் குழுவிற்குப் பன்மையுள்ளது. இங்கு பன்மை விகுதி வெறும் k வாக அல்லாமல் sk வாக உள்ளது. bāzxānask basxans குழுக்கள் என்ற பொருள் தரும். bava ɣ ask என்பதற்குத் தந்தை வழி உறவினர்கள் என்ற பொருள் உள்ளது. ɣ விகுதியை s-க்கு இணை யானதாகக் கொண்டு ஜூல்ஸ் பிளாக் கருதுவது போல் sk என்பது தமிழின் அர்கள் போல எனக் கொள்ளலாம். எனவே குயி மொழியின் sk விகுதியை இந்த விகுதியோடு ஒப்பிடலாம். ɣ உயர்திணையையும் k அஃறிணையையும் சுட்டுகின்றன. இரட்டைப் பன்மை ஆண்பாலையோ, அஃறிணையையோ குறிக்காமல் பெண் பால் பன்மையையே குறிக்கின்றது என விளக்கலாம்.

## 2. 3. பெண்பால் வளர்ச்சி

அஃறிணைப் பன்மையிலிருந்து தானே பிரிந்து சென்ற பெண் பால் ஒருமையின் வளர்ச்சியையும் நாம் ஆராயவேண்டும். இந்த பிரிவு தமிழ் முதலிய மொழிகளில் முழுமையாக நடந்துள்ளது. ஆயினும் குயிமொழியில் குழந்தைகள் தம் தாயாரைப் பற்றியோ அல்லது பெண் உறவினரைப் பற்றியோ பேசும் போது இவ் வளர்ச்சி யின் கூறுகள் காணக்கிடக்கின்றன. ஓரிடத்தில் மட்டுமே பெண் வழி உறவைக் கூறும் பெயர்த்திரிபு வடிவத்தில் அஃறிணை ஒருமையிலிருந்து பெண்பால் ஒருமையை வேறுபடுத்தியுள்ளனர். நான்காம் வேற்றுமையுருபு இ உயர்திணை ஒருமையில் பெயர்ச் சொல்லோடு நேராகச் சேர்க்கப்படும். எடுத்துக் காட்டாக aba என்பது தந்தையைக் குறிக்கும். abaki என்பது தந்தைக்கு

என்பதைக் குறிக்கும். அஃறிணையில் நான்காம் வேற்றுமையுருபு ngi ஆகும். ஆயின் தமிழில் சாரியைக்கு நிகரான ஒரு சொற் பொருள் சேர்க்கை பெயர்ச்சொல்லுக்கும், நான்காம் வேற்றுமை யுருபுக்கும் இடையில் வருகின்றது. இச்சொற் சேர்க்கை ( +t ) தீ யாகும். koru-என்றால் எருமை நான்காம் வேற்றுமை உருபோடு korutingi எருமைக்கு எனவரும். ஆனால் தாய் போன்ற சொற்களில் ngi நான்காம் வேற்றுமையுருபாக இருந்தும் கூட அந்தச் சொற் சேர்க்கையைச் சேர்ப்பதில்லை. நோக்குக -ajangi- தாய்க்கு.

## 2.4 தொகுப்பு

இனி மேற்கூறிய வளர்ச்சிக் கட்டங்களைத் தொகுத்துரைப் போம்.

1. முதற்கட்டத்தில், ஒருமை, பன்மைக்கிடையே உள்ள வேறுபாடன்றி உயர்திணை அஃறிணைக்கிடையே கூட வேறுபாடு காணப்பெறவில்லை. பன்மையைக்காட்டும் விகுதி இருந்தது. ஆனால் மனித இனப்பன்மைக்கும் பிற பன்மைக்கும் இடையே வேறுபாடு அமைக்கப்பட்டது. பிராகூய் மொழிக்குள் sk இந்த அமைப்புக்குப் பன்மை விகுதியாக இருந்தது. ஆனால் முன்னரே குறிப்பிட்டபடி சாதாரண பன்மைக்கு, வேறு வகையாகச் சொன் னால் உயர்திணை, உயர்திணையல்லாத திணைக்கு k விகுதி பயன்பட்டது.

2. இரண்டாவது கட்டத்தில் ஆண்பாலுக்கும், ஆண்பால் அல்லாதவற்றுக்கு மிடையே வேறுபாடு ஏற்பட்டது. இதனைக் குருக் மொழியில் காண்கிறோம்.

3. மூன்றாவது கட்டத்தில், அஃறிணைப் பன்மையிலிருந்து பெண்பால் பன்மை பிரிக்கப்பட்டது. ஐ பெண்பால் பன்மையாக ஆண்பால் பன்மை அர் விகுதியிலிருந்து வேறுபடுத்தி வைத்திருக் கிறோம். கோண்டி அஃறிணைப் பன்மைக்குப் பன்மைவிகுதி எதுவும் இல்லை. (கோண்டி மொழியில் காணப்படும் [guṭṭhi] போன்ற சொற்களில் காணும் பன்மை விகுதி இதற்கு விதிவிலக்கு)

4. அடுத்த கட்டத்தில் பெண் பால் பன்மை தெலுங்கில் இருப்பது போல ஆண் பால் பன்மையோடு சேர்ந்து ஒன்றாகின்றது. அஃறிணை ஒருமைக்கும், பெண்பால் ஒருமைக்கும் இடையே இயைபு உள்ளது. இந்த வளர்ச்சி நிலையை பெண் பால் பெயர்ச் சொற்களின் திரிபு மூலம் அறியலாம்.

5. தமிழில் முழுமையாக வளர்ச்சி பெற்ற கட்டம் காணப்படுகின்றது. மலையாள, கன்னட மொழிகளில் பெண் பால் ஒருமை தனி விகுதி பெற்று, ஆண்பால் ஒருமை, அஃறிணை ஒருமை, ஆகியவற்றிலிருந்து தனித்து விளங்குகின்றது. இந்த நிலை விரிவாகப் பரவாவிட்டாலும் நடுதிராவிடத்தில் முற்றுப் பெறுகின்றது. al~ālu பெண்பால் ஒருமை விகுதிகளாக தெலுங்கு, பர்ஜி, நாயக்கி மொழிகளில் காணப்படுகின்றன. ஆனால் இந்த பெண்பால் ஒருமை விகுதிகள் அஃறிணை ஒருமை வினைகளில் பயனிலைகளில் மட்டும் பயின்று வரும்.

## 2.5. விகுதிகள்

பெயர்ப்பதிலி விகுதிகளையும், பிரதிப் பெயர்களையும் பற்றி விளக்கும் போது தரப்பட்டிருக்கும் எண் விகுதிகள் m, n, v, u, i, ar, l, k, s, ṭ, t ஆகியனவாகும். n, m இரண்டும் முறையே பழைய ஒருமைப் பன்மை விகுதிகளாக இருக்கக் கூடும். m மெலிந்து v - ai ஆகியது. தமிழில், எடுத்துக் காட்டாக (ṉ) ன் மூக்கினச் சாயலை இழந்து ல் ஆகியது. நோக்குக - அல். இப்போக்கு தமிழில் அன் முதலியவை அல் முதலியவையாக மாறுவதில் காணப்படுகின்றது. கோண்டி மொழியில் ஆண்பால் ஒருமை விகுதியாக இருக்கும் ல் தமிழில் ன் விகுதியாக இயைபுடையதாக உள்ளது. தமிழில் ஒரு வேளை ல் பேச்சு வழக்கும், ர் பேச்சு வழக்கும் இருந்திருக்கலாம். எடுத்துக் காட்டாக சாம்பல், சாம்பர் என்பனவற்றைக் காட்டலாம். ஆண்பால் ஒருமை ர் விகுதி கொண்டுள்ளது. கோண்டி மொழியின் வினை விகுதி வடிவங்கள் பெரும்பான்மையானவை தமிழின் வாழியர் போன்றேயுள்ளன. தமிழில் ர் பன்மையைச் சுட்டுவதில்லை. ஒருவேளை S விகுதி ர் விகுதியாக ஆக்கம் பெற்றிருக்கலாம். க் ஆக்க உருபாகவும், அஃறிணை ஒருமை விகுதி

யாகவும் கூடக் காணப்படுகிறது. தமிழில் பன்மை விகுதி கள். தெலுங்கில் அது லு வாக காணப்படுகின்றது. இது இரட்டைப் பன்மை (க் ள்) ஆக இருக்கக் கூடும். பல்வேறு விகுதிகளும் தொடக்கத்தில் பால் வேறுபாட்டினைத் தெளிவாகச் சுட்டாமல், பின்னர் படிப்படியே பல்வேறு வழிகளில் சிறந்து தென்திராவிடத்தில் ஐவகை அமைப்பில் வேறுபாட்டினைச் சுட்டும் வரை வளர்ந்தன என்பதை நம்மால் அறிய முடிகின்றது.

## 2. 6. எதிர்காலம்

கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் பொதுவான வளர்ச்சியைக் கண்டோம். எதிர்காலத்தில் ஆய்வாளர்கள் மேலும் விளக்கமாக ஆராயவேண்டிய சிக்கல் இதுவாகும்.

## துணை நூல்கள்


தொல்காப்பியம் – 1954 – சைவ சித்தாந்தசமாஜம் சென்னை – 1 (இரண்டாம் பதிப்பு)

நற்றிணை – 1959 – மர்ரே & கோ. சென்னை–1

புறநானூறு – 1958 – மர்ரே & கோ. சென்னை–1

*Caldwell Robert, R.T. Rev, 1961 D.D, LL. D. A Comparative Grammar of the Dravidian or South - Indian Family of Languages* Reprinted by the University of Madras (Third edition)

*Jules Block – 1954 – The Grammatical Structure of Dravidian Lauguages* Deccan College Hand – Book Series. Poona.

## எந்தன்

புணர்ச்சி அடிப்படையில் பெரிய விவாதத்திற்கு உள்ளான ஒரு சொல் **எந்தன்** என்பது. **எந்தன்** என்பதை **எம்+தன்** என்று பிரித்துக் காட்டி, பன்மையும் ஒருமையும் மயங்குவதால் தவறு என்பது சில இலக்கணப்புலவர்கள் வாதம். **என்+தன்** என்று பிரித்தால் **என்றன்** என்று புணர்ச்சியில் வரவேண்டும் என்பதும் ஒரு துணைக்காரணம். இன்றைய பேச்சு மொழியில் **நான்+தான் >நாந்தான்** என்று மாறுவது எல்லோருக்கும் பொதுவானது. எனவே, **என்+தன்>என்றன்** என்பது பழைய காலமொழிக்குப் பொருந்தும் இலக்கணம். இன்றைய மொழிக்கு **என்+தன்>எந்தன்** என்று மாறுவது இயல்பானது. மேலும் எம் என்பதே ஒருமைப் பொருளைக் குறிப்பதும் உண்டு. சிறப்பு ஒருமை (honorific singular) என்பது மட்டுமின்றி ஒருமையின் மாற்று வடிவமாகவும் கொள்ளவேண்டும்.

**என்தம்பி—என்னுடைய தம்பி**

**எங்கஅம்மா—என்னுடைய அம்மா**

(என் அம்மா என்றால் தவறாகும்)

என்று பேச்சுத் தமிழிலும் பன்மை ஒருமையின் மாற்றுவடிவமாக வருவதைக் காணலாம். மேலும், இலக்கியங்களில் **நிலம்—நிலன்; மரம்—மரன்** என்பது உறழ்ச்சியாக—இலக்கணப் போலியாக வருகின்றன. எனவே, **என்+தன்>எந்தன்** என்பது புதிய புணர்ச்சி என்று இலக்கணம் அமைத்துக் கொள்ளவேண்டும்.

டாக்டர் செ.வை. சண்முகம்.
எழுத்துச்சீர்திருத்தம். அண்ணாமலைநகர், 1978.

மொழியியல் 5, 1, (1981)

# மொழி வேறுபாட்டுக் கொள்கையின் சமூகக் காரணிகள்

**சி. ஏசுதாசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**1. 0. எடுப்புரை**

மனிதனின் நாகரிக வளர்ச்சியில் ஏற்பட்ட அரும் பெரும் ஆக்கமே மொழியாகும். காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன் நாகரிகம் பெற்று வளரத்தொடங்கிய ஆதிகாலத்தில் தன் மனத்தில் உதித்த எண்ணங்களைப் பிறர்க்கு உணர்த்த எழுந்த உத்தியே பின்னர் வளர்ந்து மொழியாக உருப்பெற்றது. உதட்டிற்கும், நாவிற்கும் உணவு உட்கொள்வதும், மூக்கிற்கும், நுரையீரலுக்கும் சுவாசிப்பதும்தான் முதல் வேலையாக இருக்கக் கண்ட மனிதன் அவைகளுக்கு இன்னொரு வேலையும் கொடுத்தான். அதுதான் எண்ணப் பிரதிபலிப்பு என்கிற பேச்சு மொழியாகும். பேச்சு வடிவில் மட்டுமே இருந்த மொழிகளை நிலைப்படுத்தி தாம் கண்ட உண்மைகளை வாழையடி வாழையாகப் பிறர்க்கு உணர்த்த எண்ணிய மனிதன் அவைகளுக்கு வரிவடிவம் கொடுத்தான். இன்றுத் தனக்கென ஒரு

மொழியில்லா மக்கட் குழுவே இல்லை என்பது தற்கால மொழியியலார் (linguists) கருத்தும் மானிடவியலார் (anthropologists) கருத்தும் ஆகும். இவைகளில் பல இன்னும் வரிவடிவம் எட்டா நிலையில் உள்ளன. சில அண்டை மொழிகளின் எழுத்துக்களின் உதவியோடு வரிவடிவம் பெற்றுள்ளன.

### 1. 1. சமூகக்கிளைமொழி வேறுபாடு

ஒரே மொழி பேசும் மக்களிடையே பலவாறான வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன. ஒரே மொழியே இடத்திற்கு இடம் (region to region) காலத்திற்குக் காலம் (time to time) வேறுபடுகின்றது, (differentiated) மாறுபடுகின்றது (change completely), திரிபு பெறுகின்றது (slightly change). ஒரே இடத்தில் வாழ்ந்து ஒரே மொழி பேசும் வேறுபட்ட சமூகங்களிடையும், ஒரே சமூகத்தினருள்ளும் கூட பலவாறான வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன (inter social and intra social differences). இன்னும் பார்ப்போமாயின் ஒரே இடத்தில் ஒரே சமூகத்தில் வாழும் பலதரப்பட்ட தலை முறையினர் (different age groups) பால் வேறுபாடு (sex diffrence), கல்வியின் ஏற்றத் தாழ்வு (literacy differnce), பொருளாதார ஏற்றத்தாழ்வு (economic difference), மேற்கொள்ளும் வேலை (occupational difference) ஏனைய சமுதாயத்தில் கொண்டுள்ள நட்புறவு (friendship relation) ஆகிய பல சமூகக் காரணிகளுக்குத் (social variable) தக்கபடி பயன்படுத்தும் மொழியில் வேறுபாடு இருக்கக் காணலாம். இன்னும் நுணுக்கமாகப் பார்ப்போமாயின் ஒரு தனிமனிதன் வாழ்விலேயே பலவாறான மொழி வேறுபாடுகளும் (language difference in apparent time), ஒரு தனி மனிதனே தருணத்திற்குத் தருணம் (situation to situation), சூழ்நிலை (setting to setting) பேசப்படும் பொருளுக்குப் பொருள் (topic to topic), தன்னுடைய மனோநிலை (mood), சமூகநிலை (social status) ஆகியவைகளுக்குத் தகுந்தவாறும்; பேச்சைக் கேட்போரின் சமூகநிலைக்குத் தக்கவாறும் தன்னுடைய மொழி நடையை மாற்றியமைக்கக் காணலாம்.

### 1.2 கிளை மொழி வேறுபாடு

பாரில் வழக்கிலிருக்கும் மொழிகளில் இடத்திற்கு இடம் வேறுபடாத மொழிகளே இல்லை எனலாம். ஒவ்வொரு மொழியும்

இடத்திற்கு இடம் மாறுபடும் அல்லது வேறுபடும் அல்லது திரியும் தன்மையின் அளவு (degree) கூடுதலாகவோ குறைவாகவோ இருக்க வாய்ப்பு உண்டு. எம்மொழியிலும் இருவிதமான வேறுபாடுகளில் வேறுபாட்டின் தன்மை காணப்படும்.

i) புதிய வேறுபாடுகள் மொழியில் புகுதல் (new innovation)

ii) பழைய மூல மொழியின் மாதிரிகளை நினைக்கச் செய்தல் retaintion of archaic forms) என்பனவாகும்.

இவ்வாறான வேறுபாடுகள் அம்மொழி பேசும் மக்களிடையே உள்ள தொடர்பில்லாத் தன்மையினால் ஏற்படலாம். அத்தொடர்பில்லாத் தன்மை, வாழ்விடத்தின் தூரம், இயற்கையாக அமைந்திருக்கும் ஆறு, மலைத் தொடர்கள், ஆட்சி எல்லை, அண்டை மொழியின் தாக்கம், சமூக அல்லது வட்டார அல்லது தனி மொழிகள் பேசுநரிடம் ஏற்படும் நட்புறவின்மை இன்ன காரணங்களால் ஏற்படுகின்றன எனச் சுருங்க எளிதாகக் கூறிவிடலாம்.

1.2.1.

இவ்வாறான வேறுபாடுகள் ஒரு மொழிச் சமூகத்தில், சமூகப் பாங்காகவும், தனிப்பட்ட முறையில், கிளை மொழிகளிலும் இருப்பினும் சில வட்டாரக் கிளை மொழி வழக்கு ஒழிய ஏனைய வற்றைச் சமூகத்தின் அங்கத்தினர் அனைவருமே புரிந்து கொள்ளும் நிலையைக் காண்கிறோம். இன்னும் சிலர் இடம், காலம், பேசும் பொருள் இவைகளுக்குத் தகுந்தபடி தங்கள் மொழிமாதிரியை மாற்றி யமைப்பதையும் நாம் காணலாம். எனவே மொழி என்பது பலதரப் பட்ட வேறுபாடுகள் உடைய ஒரு கோவை எனக்கொள்ள வாய்ப்புள் ளது. அக்கோவையில் காணவிருக்கும் வேறுபாடுகளிலும் சமூக உளப்பாங்கான ஒரு ஒழுங்குமுறை இருக்கிறது என்பது தெளிவு.

1 2 2,

காலத்திற்குக் காலம் ஏற்படும் மாறுபாடுகளை வரலாற்றுக் கணக்கிட்டு எளிதாக உணர்ந்து விட வாய்ப்புண்டு. அதைப் போன்று நில இடை வெளி (regional difference), சமூக ஆகியவைகளின் வறுபாட்டால் காணப்படும் மாற்றங்களையும், திரிபுகளையும் எளிய

வழிமுறைகளைக் கையூண்டு அறிந்து கொள்ள வாய்ப்புண்டு. ஆயின் இவ்வாறான மாற்றங்களுக்கு மத்தியில் மக்கள் ஒருவருடைய பேச்சு வழக்கை எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள், எவ்வாறு மொழியில் மாற்றங்களும், வேறுபாடுகளும், திரிபுகளும் எழுகின்றன, அவைகள் எழுவதற்குக் காரணமான தூண்டு கோலிகள், சமூகக்காரணிகள் யாவை என்பன பற்றிய கேள்வி நம்மிடம் எழாமலிருக்க வாய்ப்பு இல்லை. எவ்வகை வேறுபாடுகள் மொழிகளில் காணக்கிடக்கின்றன? தென்னாசிய மொழிகளில் அதிலும் குறிப்பாக இந்திய மொழிகளிலும், தமிழ் மொழியிலும், அதன் சமூகக் காரணிகள் யாவை? அவற்றிற்கு முன்னைய மொழியியலார் கொண்டுள்ள கருத்துக்கள் எவை? சமூக மொழி வேறுபாட்டின் சமூகக்காரணிகளான சாதி, வயது வேறுபாடு, பால் வேறுபாடு, கல்வியின் ஏற்றத்தாழ்வு, நட்புறவு, சமூகப்பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்ற காரணிகளைக் கொண்டு ஏன் தென்னாசிய மொழிகளில் குறிப்பாக இந்திய மொழிகளிலும் தமிழ் மொழியிலும் மொழி வேறுபாடு அடைகின்றது? சமூகச்சூழலில் அதன் காரணங் கள் யாவை? முதலிய கருத்துக்களைக் கீழே காண்போம்.

## 2.0. தென்னாசிய மொழிகளின் வேறுபாட்டுத் தன்மை

தென்னாசிய மொழிகளில், குறிப்பாக இந்தியத்துணைக் கண்டத்தில் வழக்கிலிருக்கும் மொழிகளில் தற்போது காணக்கிடக் கும் மொழிவேறுபாடுகள் இடம் (region), சாதி (caste), இனம் (related caste groups), நடை (style) ஆகியவைகளின் அடிப் படையிலேயே அமைந்துள்ளன என இதுகாறும் பல ஆய்வு அறிக்கை கள் இயம்பக்காணலாம். இவண், தென்னாசிய மொழிகளில், குறிப் பாக இந்தியாவின் வடமொழிகளிலும் தென்மொழிகளிலும் சமூக மொழியியல் ஆய்வுத் தொகுப்பின் கருத்துக்களைக் காண்போம்.

## 2.1.

இந்திய மொழிகளில் குறிப்பாகத் தமிழ் மொழியில் சமூகங்களுக் கிடையே காணக்கிடக்கும் மொழி வேறுபாட்டை முதன் முதலில் வெளிப்படுத்தியவர் ஜூல்ஸ் ப்ளாக் (Jules Block, 1910) என்ற மொழியியல் அறிஞராவார். அதன்பின்னர் இராமசுவாமி ஐயர் (L. V. Ramaswami Ayar, 1932) அவர்கள் துளு மொழியில் பிரா

மணர் பேச்சு வழக்கிற்கும் பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கிற்கும் உள்ள வேறுபாட்டை வெளிப்படுத்தினார். இதன் பின்னர் சிலகாலம் சமூக மொழியியல் ஆய்வு இந்தியாவில் நடக்காமல் இருந்தது. பின்னர் வட இந்திய மொழிகளில் குறிப்பாக கிராமப்புற இந்தி கிளை மொழிகளில் கும்பர்ஸ் (Gumpers, 1958) நடத்திய தொடர்ச்சியான ஆய்வுகள் பல தென்னாசியாவில் குறிப்பாக இந்தியாவில், சமூக வேறுபாட்டிற்கும் மொழி வேறுபாட்டிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை வெளிப்படுத்த ஏனைய ஆய்வாளர்களுக்குத் தூண்டு கோலாகவும் முன்மாதிரியாகவும் இருந்தது. இதனைத் தொடர்ந்து லெவின் (Levine, 1959) இந்தி மொழியில் செய்த ஆய்வும், ஆப்தே (Apte, 1962) சவுளத் வொர்த் (South Worth, 1921) ஆகியோர் மராத்தி மொழியில் செய்த ஆய்வுகளும் பண்டிட் [Pandit, 1963] மராத்தி, குஜராத்தி ஆகிய மொழிகளில் செய்த ஆய்வுகளும், வில்லியம் ப்ரைட் [William Bright, 1960, 1964] மா கொரோமாக் [Mc Cormack, 1960, 1968] ஆகியோர் கன்னட மொழியில் செய்த ஆய்வுகளும், வில்லியம் ப்ரைட்டும், இராமானுஜனும் [William Bright and A.K. Ramanujam 1962, 1968, சண்முகம் பிள்ளையும் [Shanmugam Pillai, 1965] தமிழ் மொழியில் செய்துள்ள ஆய்வுகளும், இன்னும் வில்லியம் ப்ரைட், இராமானுஜன் [1964] ஆகியோர் தமிழ் மொழியிலும் துளு மொழியிலும் செய்துள்ள ஆய்வுகளும் இந்திய சமூக மொழியியல் ஆய்வில் முக்கிய பங்கு வகிக்கும்.

2.2.

மேற்கூறிய ஆய்வாளர்களின் முடிவுப்படி இந்திய மொழிகளில் சாதியின் ஏற்றத் தாழ்வு [caste hierarchy], நட்புறவு [friendship network], வகுப்புப் பாகுபாடு [class division], கல்வி வேறுபாடு [educational difference] முதலாய சமூகக்காரணிகள் [social variable] மொழி வேறுபாட்டிற்குக் காரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன [Susan S. Bean 1974.278].

### 3.0. இந்தியாவில் சமூக மொழியியல் ஆய்வில் சாதியின் பங்கு

பல இனமக்களைத் தன்னகத்தே கொண்ட இந்தியா, மாறுபட்ட மொழிகளையும், வேறுபட்ட பண்பாட்டு நெறிகளையும், பல வகைப் பட்ட அரசியல் பாரம்பரியத்தையும் பற்பல வகுப்பினரையும் உடை

யது. இதை, 'மொழிக்குழப்பம் அடைந்த வீடு' ['linguistic mad house'], மிகுந்த மொழிகள் அடங்கிய பரப்பு [linguistic area], சமூகக்கிளை மொழிகள் மட்டு மீறிய நாடு [sociolinguistic giant], மொழிகளின் பொருட் காட்சி [museum of languages] எனப் பலவாறாக மொழியியல் அறிஞர்களால் விவரிக்கப்படுகின்றது. இங்கு சாதி இதுவரைக்கும் மொழியியல் வேறுபாட்டிற்கு மூல அளவு கோலாகத் [parameter] திகழ்கின்றது என இதுகாறும் இயம்பி வருகின்றனர். சாதி என்பது ஏனைய சமூகக் காரணிகளைப் [social variable] போலன்றி தனித்தியங்கும் காரணி [independent variable] என விவரிக்கக் காணலாம். பண்டிட் [Pandit, 1972:52] 'சாதி ஒன்று மட்டும் சமூக மொழியியல் ஆய்வுக்கு அளவு கோலாக [parameter] இருக்க வில்லை, அல்லது சாதி மட்டும் தான் சமூக மொழியியல் ஆய்வுக்குக் கட்டுப்பட்ட பிரிவு எனக் கூற முடியாது' எனக் கூறுகின்றார்[1].

3.1.

சூசன் எஸ். பீன் [Susan S. Bean] என்கிற மொழியியலார் தென்னாசிய வட்டாரக் கிளை மொழிகளையும் சமூகக் கிளை மொழிகளையும் தொகுத்து அளிக்கும் அறிக்கையொன்றில், 'தென்னாசியாவில் மொழி வேறுபாடும் சாதி நிலையும்' [Linguistic Variation and the Caste System in South Asia] என்ற தலைப்பின் கீழ், 'சாதியின் உறுப்பினர் நிலை [caste membership] ஏனைய சமூக மாறிகளைப் பார்க்கையில் ஒவ்வொரு சாதியிலும் ஆதிக்கம் உள்ள அல்லது மேம்பாடான மாறியாகத் தெ கின்றது', ........ என்றும் ஏனைய சமூக மாறிகளில் சாதியின் தகுதி நிலை (caste status) மொழி மாற்றத்திற்கு ஆதிக்கம் (dominent) வாய்ந்த சமூக மாறியாகத் தென்படுகின்றது' என்றும் பகர்கின்றார்[2].

3.2.

சூசன் எஸ். பீன் தன்னுடைய ஆய்வுத் தொகுப்பை வெளியிட்ட பின்னர் பட்டனாயக் [Pattnayak, 1974 : 97] என்ற மொழியியலாளர் சமூகக் கிளை மொழியியல் ஆய்வில் சாதியின் பங்கு கீழ்க்கண்டவாறு இருப்பதாகக் கூறுகின்றார்.

(i) சாதி வேற்றுமையால் ஏற்படும் மொழி வேறுபாடு தீர்மானம் பண்ண முடியாத ஒன்று. அவ்வாறு அது (சாதி) தீர்மானம் பண்ணக் கூடிய சமூக மாறியாயினும் நாட்டுப் புற (rural) துணை சாதி (subcaste) நிலையில் மட்டும் செயல் படுத்தக் கூடிய ஒன்று......

(ii) 'சாதி' அடிப்படையில் சமூகக் கிளை மொழி (வேறுபாடு) காணப்படுகின்றது என்பது அரிய கற்பனையே

(iii) இந்து சமூகத்தில் சாதியோடு சார்ந்த தனியான சமூகக் கிளை மொழி அறவே இல்லை

(iv) சாதி அடிப்படையான சமூகக் கிளை மொழி தேவையற்றதாகவும் விஞ்ஞான ரீதியான ஆய்வுக்கு ஒவ்வாததாகவும் உள்ளது[8]

3.2.1.

இவருடைய வாதங்கள், திவாரி [K. M. Thwari] கோபிநாதன் நாயர் [R. Gopinathan Nair] கருணாகரன் [K. Karunakaran] [I JDL, 1975, vol IV, No 2, P 361-78]; வில்லியம் ப்ரைட் [Willam Bright], சோமசேகரன் நாயர் [Somasekaran Nair], ராய் [VC J.Roy] ஜோஷி [D. M. Joshi], நீதிவாணன் [J. Neethivanan] உபாத்தியாய [U. P. Upadhyaya] (I. J. D. L. ,1975, Vol. v, No 1 P 65 - 81) ஆகியவர்களால் முழுமையாக மறுக்கப்பட்டுள்ளது. அண்ணாமலை [E. Annamali] (I J D L, 1975, vol V, No. 1, P, 72), பட்னாயக்குடைய கருத்துக்களை முழுமையாக மறுக்கவில்லை. இவர் மொழி மாற்றத்திற்குச் சாதி காரணமாக இருக்கின்றதா இல்லையா என்பதை அறிய புள்ளி விவர ஆய்வு மிகத்தேவை என்பதனை வற்புறுத்திக் கூறுகின்றார்,

3.3.2.

பட்னாயக்குடைய கருத்துக்களை மறுப்பவர்கள் அனைவரும் சாதியை மட்டும், மொழி மாற்றத்திற்கு தனியான மாறியாகக் கொள்ள இயலாது, ஆனால் மொழி மாற்றத்திற்கு ஒரு முக்கிய அளவு கோலாகக் கொள்ள வாய்ப்பு உள்ளது என்ற கருத்தை முழுமையாக ஒப்புக் கொள்கின்றனர்.

3, 2. 2.

மேற்கூறிய வாதப் பிரதி வாதங்களைப் பார்க்கையில், மொழி வேறுபாட்டிற்குச் சாதி ஒரு சமூகக்காரணியாக இல்லை என்று கூறும் கூற்று 'பிஞ்சில் புழுத்தப்பழம்' என்று எண்ணத் தோன்றுகின்றது. ஏன் எனில் சாதியின் நிலையும் சாதியின் அடிப்படையிலான மொழி வேறுபாட்டு நிலைப்புத் தன்மையும் ஒரு நிலையிலிருந்து அழிந்து கொண்டிருக்கின்றது என்பதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ இயலாது. சாதியின் அடிப்படையிலான மொழிவேறுபாட்டுத் தன்மைக்கு அழிவுறு நிலை தொடங்கியிருக்கக் காரணம் பொதுப் பேச்சு மொழியையும் (Standard spoken language) பொது எழுத்து மொழியையும் (Standard liteary language) பேச்சு வழக்கில் ஏற்றுக் கொள்வதினால் இருக்கலாம் எனத் தோன்றுகின்றது. பேசுநர் ஏன் அவ்வாறு செய்கின்றனர் என்பதற்கு, பேசுநரது வட்டாரம், இனம் அல்லது சாதிப்பேச்சு வழக்குகளைக் கேட்குநருக்குத் தெளியப்படுத் தாமலிருக்கவும், கேட்குநருக்கு நன்றாக விளங்கும் வண்ணமும், தன்னுடைய சமூக நிலையை உயர்த்திக் காட்டவும் இன்னும் பல காரணங் களைக் காட்டலாம். இவை எல்லாவற்றிற்கும் கல்வியின் தாக்கம் மிக அதிகமாகவுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று.

சாதிகளின் அடிப்படையில் மொழிவேறுபாடு எவ்வாறு, ஏன் என்ற கேள்விகள் நம்மில் எழாமல் இல்லை, மொழிவேறுபாடுகளைச் சில மொழிகளிலும், வட்டாரக்கிளை மொழிகளிலும் சமூகக்கிளை மொழிகளிலும் பார்ப்போமாயின், அது மூலமொழியிலிருந்து பாது காக்கப்பட்ட பாகமாகவும் (preservation of archaic forms) சில வேறுபாடுகள் புதியதாக உருவாகிய அல்லது உருவாக்கிய வேறு பாடாகவும் தெரிய வருகின்றது. எனவே ஒரு குறிப்பிட்ட மொழியில் அல்லது கிளைமொழியில், மூல மொழியின் பாகங்கள் பாதுகாக்கப் பட்டும், புதிதாக மாறிகள் சேர்க்கப் பட்டிருப்பதும் நமக்குத் தெரிய வருகின்றது. ஸ்சோகட் (Schoget, 1961:91) என்கிற மொழியியல் அறிஞர், பிரஞ்சு சமூகக்கிளை மொழிகளை ஆய்வு செய்து, 'மொழியில் புதிய மாறிகள் சமூகத்தின் தாழ்த்தப்பட்டோரிடத்தி லிருந்து பிறக்கின்றன' என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்'[4]. இக் கருத்துக்கு நேர்மாறாக ஜோஸ் (Joos 1952:229) என்கிற மொழி

யியல் அறிஞர், பொதுவாக மொழியில் எல்லா நிலைகளில் (level உள்ள திரிபுகள் குறிப்பாக ஒலியன் திரிபுகள் சமூகத்தின் மேல் மட்டத்து மக்களால் உருவாக்கப்படுகின்றன என்வும், இதற்குக் காரணம் அவர்கள் தங்கள் கீர்த்தியை (prestige) நிலைநிறுத்தி, ஏனைய தாழ்ந்த சமூகத்துடன் வேறுபடுத்திக் காட்ட நினைக்கின்றனர் (to maintain a prestige – marking difference) எனவும் கூறுகின்றார். சமூகத்தில், மேல்மட்டத்தினரைப் பின்பற்றிக் கீழ் மட்டத்தினரும் தங்கள் இரு கூட்டத்தினருக்கும் இடையிலான பேச்சின் இடைவெளியை, மேல்மட்டத்தினரின் பேச்சைத் தழுவலின் மூலம் குறைக்கப் பார்க்கின்றனர். மேல் மட்டத்தினர் இன்னும் கீழ் மட்டத்தினரை விட்டு அகன்றுபோக எண்ணுகின்றனர் [Joos, 1952: 229]. மேற்கூறிய இக்கருத்தையே 'சமூகத்தின் கீழ் மட்டத்தினர் உயர்மட்டத்தினரைப் பின் தொடர்வதினால் - உயர் மட்டத்தினர் விலகி முன் செல்லும் செயல் மீண்டும் மீண்டும் சுழன்று வருவதால் ஏற்படும் விளைவு' என ஃபிஸ்சர் [Fischer, 1958:52] கூறுகின்றார்.

இம்மூவரின் கருத்துக்களையும் சுருங்கக் கூறின், ஸ்சோக்ட் சமூகத்தின் தாழ்த்தப்பட்டோர் மொழிமாற்றத்திற்குக் காரணமாக இருப்பதாகக் கருதுகின்றார். ஏனைய இருவரும் உயர்மட்டத்தினர் காரணமாக இருப்பதாகக் கருதுகின்றனர். இவர்களுடைய கூற்றுகள் தென்னாசிய மொழிகளுக்குக் குறிப்பாக இந்திய மொழிகளுக்கு அதிலும் குறிப்பாக தமிழ்மொழிக்கு ஒவ்வாததாக இருக்கின்றது. மனிதனின் தேவைகள் மொழிமாற்றத்திற்கு மட்டுமல்லாது ஏனைய பண்பாட்டின் மாற்றங்களுக்கும் வழி வகுக்கின்றது. தேவைகள் கீழ்மட்டத்தினருக்கு மட்டுமல்ல, மேல் மட்டத்தினருக்கும் உகந்தது. எனவே புதிய மாறிகள் ஒரு மொழியில் அல்லது ஒரு கிளை மொழியில் புக மேல்மட்டத்தினர் மட்டுமல்ல, கீழ்மட்டத்தினரும் காரணமாக இருக்கலாம். ஆயின் மொழி வேறுபாட்டை மொழியில் புகுத்துவதின் அளவு (degree) ஒரு வகுப்பினருக்கும் இன்னொரு வகுப்பினருக்கும் குறையவோ கூடவோ செய்யலாம். மேல்மட்டத்தினரிடம் பிறக்கும் புதிய மொழியியல் மாறிகளை கீழ்மட்டத்தினர் கூடுதலாகவும் கீழ்மட்டத்தினரிடம் பிறக்கும் புதிய மொழியியல் மாறிகளை மேல்மட்டத்தினர் குறைவாகவும் பின்பற்றுவதை நாம் கண்கூடாகக் காணலாம்.

## 4.0. தமிழ் மொழியில் சமூகக்கிளைமொழி ஆய்வு

## 4.1. பண்டைத் தமிழ் மொழியில் சமூகக்கிளைமொழி ஆய்வு

தமிழ் மொழியில் கிடைக்கப் பெறும் பழம் பெரும் இலக்கண மான தொல்காப்பியம் அக்கால சமூகக்கிளைமொழி வேறுபாடுகளின் சிலபகுதிகளை மூன்று சூத்திரங்களில் சுருங்கக் கூறிச் செல்கின்றது [சூத்திரங்கள் 444 முதல் 447 வரை][5]. அது, ஈ, தா, கொடு, என்கிற மூன்று சொற்களும் ஒரே பொருளில் தமிழ்ப்பேச்சுச் சமூகத்தின் வேறுபட்ட துணைச் சமூகத்தினரால் பேசப்பட்டு வருகின்றது எனப்பகர்கின்றது. இம்மூன்று சொல் மாறிகளையும் யார் யார் பயன்படுத்துகின்றார்கள் எனத் தொல்காப்பியம் உரைக் கின்றதே ஒழிய, அச்சொற்கள் யாரிடத்தில் பேசப்படுகின்றது - அதாவது கேட்குநர் யார் எனச் சரியாக அதில் இயம்பவில்லை. எனவே இச்சூத்திரங்களைக் கீழ்க்கண்ட மூன்று விதமாக விவரிக்கத் தோன்றுகின்றது.

### 4.1.1. முதல் விதம்

ஈ, என்ற சொல் சமூகத்தில் இழிந்தோன் உயர்ந்தோனிடத் திலும், தா என்பது சமூகத்தில் ஒப்புமை நிலையுள்ள இருவரால் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும் போதும், கொடு என்பது சமூகத் தில் உயர்ந்தோன் இழிந்தோனிடத்தில் கூறும் போதும் பயன்படுத் தப்படுகின்றது. மேல்வாரியாகப் பார்ப்போமாயின் தமிழ்ச் சமூகத் தில் மூன்று வகுப்புக்கள் இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோன் ஆகியோர் - இருந்ததாகத் தெரியவருகின்றது. பக்கம் 43-ல் காணும் விளக்கப்படம் மூன்று வகுப்பினருள் யார் யாரோடு எவ்வித மான மாதிரியைப் பயன்படுத்துகின்றார்கள் என்பது பற்றி விளக்கும். (இவ்விளக்கப் படத்தில் பேசுநர், மாறிகள், கேட்குநர் என்ற முப் பகுப்பு இடைக்கோட்டிலும் (horizontal line), பேசுநர், கேட்குநர் என்ற பகுப்பு இடைக்கோட்டின் கீழும், இழிந்தோன், ஒப்போன் உயர்ந்தோன் என்ற வகுப்பின் பிரிவு நிலைக் கோட்டிலும் (vertical line), மாறிகள் என்ற பகுப்பு, இடைக் கோட்டிலும், ஈ, தா, கொடு என்ற மாறிகள் நிலைக் கோட்டிலும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ் வொரு வகுப்புப் பாகுபாட்டின் முன்னரும் காணவிருக்கும் '+' என்ற குறி பேசுநர் அல்லது கேட்குநர் யார் என்பதையும் — அதாவது '+ இழிந்தோன்' என இருப்பின் பேசுநர் அல்லது கேட்குநர் இழிந்தோன்

என்றும் '—' குறி வரின் மேற்கூறியவற்றிற்கு எதிர்மறைப் பொருளை யும உணர்த்தும். அதாவது '—உயர்ந்தோன்' என வரின் பேசுநர் அல்லது கேட்குநர் உயர்ந்தோன் அல்லன் என்ற பொருளை உணர்த்தும்.)

| பேசுநர் | மாறிகள் | கேட்குநர் |
|---|---|---|
| + இழிந்தோன்<br>— ஒப்போன்<br>— உயர்ந்தோன் | ஈ | — இழிந்தோன்<br>— ஒப்போன்<br>+ உயர்ந்தோன் |
| — இழிந்தோன்<br>+ ஒப்போன்<br>— உயர்ந்தோன் | தா | — இழிந்தோன்<br>+ ஒப்போன்<br>— உயர்ந்தோன் |
| — இழிந்தோன்<br>— ஒப்போன்<br>+ உயர்ந்தோன் | கொடு | + இழிந்தோன்<br>— ஒப்போன்<br>— உயர்ந்தோன் |

**4.1.2.**

முதல் விதத்தில் குறிப்பிட்டது போல் தமிழ்ப்பேச்சுச் சமூகத் தில் மூன்று வகுப்பினர் இருந்தார்கள் என எண்ணுகையில் 'ஒப் போன்' என்பது ஒரு சமூக வகுப்பா இல்லையா என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது. இழிந்தோனுக்கு இழிந்தோன் ஒப்போனாகி விடுகிறான். அவ்வாறே உயர்ந்தோனுக்கு உயர்ந்தோன் ஒப்போ னாகிவிடுகிறான். எனவே மேலோட்டமாகப் பார்க்கும்போது முதல் விதம் சரியாகத் தென்படவில்லை. எனவே கீழே கொடுத்துள்ள இரண்டாவது விதத்தைப் பார்ப்போம்.

**4.1 2. இரண்டாவது விதம்**

ஈ என்ற சொல் இழிந்தோன் உயர்ந்தோனிடமும் தா என்பது இழிந்தோன் தன்னைப் போன்ற இழிந்தோனிடமும், [illegible]ன்னும்

உயர்ந்தோன் தன்னைப் போன்ற உயர்ந்தோனிடமும் கொடு என்பது உயர்ந்தோன் இழிந்தோனிடமும் பயன்படுத்தப்படுகின்றது எனக் கொள்ளத் தோன்றுகிறது. இதைக் கீழ்காணும் விளக்கப்படம் விவரிக்கும்.

| பேசுநர் | மாறிகள் | கேட்குநர் |
|---|---|---|
| + இழிந்தோன்<br>— உயர்ந்தோன் | ஈ | — இழிந்தோன்<br>+ உயர்ந்தோன் |
| + இழிந்தோன்<br>+ உயர்ந்தோன் | தா | + இழிந்தோன்<br>+ உயர்ந்தோன் |
| — இழிந்தோன்<br>+ உயர்ந்தோன் | கொடு | + இழிந்தோன்<br>— உயர்ந்தோன் |

இரண்டாவது விதம் தமிழ்ப் பேச்சுச் சமூகத்தில் இருவகுப்பினர் இருந்தனர், அவர்களுக்குள் ஒருபொருள் கொடு 'give' என்பதனை உணர்த்த மூன்று மாறிகள் பயன்படுத்தப்பட்டன எனத் தெளிவுற விளக்குகின்றது.

### 4.1.3. மூன்றாவது விதம்

இம்மாறிகளை இக்கால சமூக மொழியியல் கண் கொண்டு பார்ப்போமாயின், இழிந்தோன் எப்போதும் இழிந்தோனாக இருப்பதில்லை. தன்னைவிட உயர்ந்தோனை நோக்குகையில் அவன் இழிந்தோன், தன்னைவிட இழிந்தோனை நோக்குகையில் அவன் உயர்ந்தோன் ஆகிவிடுகின்றான். இவ்வாறே உயர்ந்தோனும் எப்போதும் உயர்ந்தோனாக இருப்பதில்லை. தன்னை விட உயர்ந்தோனை நோக்குகையில் அவன் இழிந்தோன் ஆகிவிடுகின்றான். எனவே கேட்குநரின் சமூக நிலையைப் பொறுத்து பேசுநர் பயன்படுத்தும் மாறிகள் மாறிவிடுகின்றன எனலாம். மேற்

கூறிய இரண்டாவது விதத்தைப் பின்பற்றி வேற்றுமை தவிர்க்கும் (distinctive feature) அமைப்பு மூலம் இம்மாறிகளை கீழ்க்காணும் விதி முறையின் (rules) கீழ் கொண்டு வரலாம்.

1. $\begin{bmatrix} + \\ - \end{bmatrix}$ உயர்ந்தோன் → தா / — $[+]$ உயர்ந்தோன்

2. + உயர்ந்தோன் → கொடு / — — உயர்ந்தோன்

3. — உயர்ந்தோன் → ஈ — — + உயர்ந்தோன்

மேற்கூறிய மூன்று விதங்களில் முதல்விதம் வெளிப்படையாகத் தொல்காப்பிய சூத்திரங்களில் தோன்றுவது. இரண்டாவது விதம் தொல்காப்பிய சூத்திரங்களில் புதைந்து கிடப்பது. மூன்றாவது விதம் இக்கால சமூக மொழியியல் கண் கொண்டு இரண்டாவது விதத்தை மாற்றியமைத்துக் கூறுவது.

### 4.3. தமிழில் தற்கால சமூக மொழியியல் ஆய்வு

இதுவரையிலும் தமிழ் மொழியில் சமூகக்கிளை மொழியாய்வு செவ்வனே செய்யப்படாத நிலையிலேயே உள்ளது. தமிழ்ப்பேச்சுச் சமூகத்தை ஜூல்ஸ் ப்ளாக் 1910-இல் பிராமணர் பேச்சுவழக்கு, பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கு, தாழ்த்தப்பட்டோர் பேச்சு வழக்கு என்று பகுத்த முப்பெரும் அகன்ற பாகுபாட்டை இன்னும் பலர் கையாளக் காண்கின்றோம். அவர்களில் கமில் சுலாபில் (Kamil Zvelabil] வில்லியம் ப்ரைட் (William Bright) இராமானுஜன் (Ramanujan A.K) ஆகியோர்கள் முக்கியமானவர்கள். இராமானுஜன் அவர்கள் பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கிற்குள்ளும் பலவாறான வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன என்றும், பேச்சுப் பொதுத்தமிழ் (Standard Spoken Tamil) பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கிலிருந்து உருவாகிக் கொண்டிருக்கின்றது என்றும் கூறுகின்றார் (Ramanujan 1965 : 475). இதற்குப் பிராமணர் அல்லாதார் தமிழ்ப் பேச்சுச் சமூகத்தில் கூடுதலாக இருப்பதால் இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. வில்லியம் ப்ரைட்டும் இராமனுஜனும் பிராமணர் பேச்சு வழக்கில் கடன் வாங்கிய சொற்களில் உள்ள புதிய ஒலியன் ஏற்கனவே தமிழ் மொழியில் உள்ள ஏனைய சொற்களில் கட்டுப்படுத்த முடியாத இடங்களில் பிழைத்திருத்தமாக (hypercorre

ction) புகுத்தப்படுவதாகவும், பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கில் கடன் வாங்கிய சொற்களில், தாங்கள் பேசும் தமிழ் மொழியின் ஒலியன்களைக் கடன் வாங்கிய சொற்களின் புதிய ஒலியன்களுக்குப் பதிலாக புகுத்தப்படும் நிலையையும் காண முடிகின்றது என்கின்றனர் (Bright and Ramanujan, 1964 : 1110).

4.2.1.

கமில் சுலாபில், பேச்சுச் சமூகத்தை பிராமணர் பேச்சு வழக்கு, பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கு, தாழ்த்தப்பட்டோர் பேச்சு வழக்கு என அடிப்படையாகப் பிரிக்க முடியும் என்ற திடமான நம்பிக்கையுடையவராக செயலாற்றுகின்றார். தமிழ் சமூகக்கிளை மொழியாய்வில் பல ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்துள்ள சண்முகம் பிள்ளையவர்கள், தற்போதைய இளைய தலை முறையி னர் பேச்சுப் பொதுத் தமிழில் (பே. பொ. தமிழ்) பேசுவதாகவும், அவர்களில் சிலர் தங்கள் சாதி அடிப்படையிலான பேச்சு வழக்கை அறியாதவர்களாகவும், இன்னும் பல இடங்களிலும் சில குடும்பங்க ளிலும் கூட பே. பொ. தமிழும், வட்டார பேச்சு பொதுத்தமிழும், சாதி அடிப்படையிலான பேச்சு வழக்கும் கலந்து பேசப்படுகின்றது என்கின்றார் [Shanmugam Pillai, 1972 : 67-71]. மேற்கூறிய ஆய்வு அறிவிப்புக்கள் எல்லாம் புள்ளிவிவரமாக செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஏதோ ஊகத்தின் அடிப்படையிலேயும் இரண்டு மூன்று தகவாளிகளின் (informants) பேச்சுப்படியும் கொடுக்கப் பட்டுள்ளது எனலாம்.

4.2.2.

உண்மையில் பிராமணர் பேச்சுவழக்கு, பிராமணர் அல் லாதார் பேச்சுவழக்கு, தாழ்த்தப்பட்டோர் பேச்சுவழக்கு என்று பிரிப்பது ஒரு அகன்ற பாகுபாடே தவிர, சரியாகப் பிரிக்கப்படாத ஒன்று எனலாம். ஏனெனில் பிராமணர் அல்லாதார் பலதரப்பட்ட சாதியையும், பலதரப்பட்ட வட்டாரத்தையும் சார்ந்தவர்களாக உள்ள னர். இப்பிராமணர் அல்லாதார் என்றப் பாகுபாட்டுக்குள் காணப் படும் ஒவ்வொரு சாதியினருக்குள்ளும் காணப்படும் வேறுபாடு பிராமணர் பேச்சு வழக்கு, பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கு எனப் பகுக்கும் பாகுபாட்டுக்குள் காணக்கிடக்கும் வேறுபாடுகளை

விட அகன்று இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. தற்போதைய அரசுகளாலும் (Governments) ஏனைய சமூகத்தினராலும் ஏற்படுத்தப்பட்ட அழுத்தம் காரணமாக பிராமணர் பேச்சு வழக்கு பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கை நோக்கி வளைந்து கொண்டிடிருக்கின்றது எனலாம் (Shankaranarayanan, 1975: Upadyaya, 1976).

ஆயின், தமிழ்ப்பேச்சுச் சமூகத்தில் பிராமணர் பேச்சுவழக்கு மட்டும் (பிராமணர் தங்களுக்குள் பேசும்போது மட்டும்) வட்டாரக் கிளை மொழிகளுக்கு அதிகம் கட்டுப்படாமல் இருக்கக் காணலாம். ஆனால் பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கும், தாழ்த்தப்பட்டோர் பேச்சுவழக்கும் வட்டாரக்கிளை மொழிக்கும் கட்டுப்பட்டு ஒவ்வொரு சாதியினருக்கும், இது இச்சாதி பேச்சு வழக்கு எனப் பிரித்துக் கூறும் அளவிற்கு, தங்களின் சிறப்பற்ற (informal) பேச்சு நடையில் வேறுபாடு அல்லது மாறுபாடு அல்லது திரிபு காணக்கிடக்கின்றது. ஒரே இடத்தில் வாழும் பல தரப்பட்ட சாதியினருக்குள் மொழியில் ஒற்றுமையும் அதேசமயம் வேற்றுமையும் காணலாம். அதேபோல் ஒவ்வொரு வட்டாரத்தில் பேசப்படும் சமூகக்கிளை மொழிகளுக்குள் ஒரு வட்டாரப் பொதுத்தமிழ் உருவாகி வருவதையும் காணலாம். இவ்வாறே மலையாளமொழியில் உருவாகி வருவதாக ஆர். கோபிநாதன் நாயர் [R. Gopinathan Nair 1975] அவர்கள் கூறுகின்றார். மேற்கூறிய பலவாற்றால் தமிழ்பேச்சுச் சமுகத்திற்குப் புள்ளிவிவர வட்டாரக்கிளை மொழி ஆய்வும் சமூகக்கிளை மொழி ஆய்வும் தேவை என்பது வெளிப்படையாக தெரிய வருகின்றது.

## 5. 0. வயது வேறுபாடும் மொழிவேறுபடும் தன்மையும்

பல மொழிகளின் பேச்சு சமூகத்தில் இளைய தலைமுறையினர் (younger generation) பேச்சுவழக்கு, முதிய தலைமுறையினர் (older generation) பேச்சு வழக்கிலிருந்து வேறுபடுவதாகத் தெரிகின்றது. அதாவது, இளைய தலைமுறையினர் பேச்சு வழக்கிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது எனக்கூறவியலாது. ஒரு சில மொழிக் கூறுகளில் (linguistic form) வேறுபாடு காணக்கிடப்பதைப் பார்க்கலாம். சில மொழிக் கூறுகள் முதிய தலைமுறையினரிடம் மட்டுமே காணப்படலாம், அல்லது முதிய தலைமுறையினர் அம்மொழியின் சில

மொழிக் கூறுகளை இளைய தலைமுறையினரைவிடக் கூடுதலாகப் பயன்படுத்துவதாக இருக்கலாம். அதாவது அதை இளைய தலைமுறையினர் பயன்படுத்துவதின் எண்ணிக்கையின் அளவு (frequency) குறைவாக இருக்கலாம். இதைப்போன்று இளைய தலைமுறையினரிடத்தில் சில மொழிக்கூறுகள் அதிகமாகப் பயன்படுத்தும் நிலையும், அம்மொழிக் கூறுகள் முதிய தலைமுறையினரிடத்தில் அதிகம் வழக்கில்லாமலும் இருக்கக் காணலாம். (Platt J. J. and Platt H, 1945) இவ்வாறு ஒரே நேரத்தில் ஒரே பேச்சு சமூகத்தில் இரண்டு அல்லது மூன்று தலைமுறையினரின் ஏறத்தாழ வேறுபட்ட வய்து வரம்புகளை உடையவர்களை ஒரே சமயத்தில் (apparent time) காணக் கிடக்கும் மொழி வேறுபாடுகளை ஆய்வு செய்வதற்கு 'நிலையற்ற போக்கையுடைய ஆய்வு' (pseudo-trend-study) என வில்லியம் லெபாவ் (William Labov 1966:319) என்பவர் கூறுகின்றார்.

5. 1.

இந்திய மொழிகளில் இம்மாதிரியான ஆய்வு இன்னும் செய்யப்படாத நிலையைக் காண்கிறோம். ஆயின் சண்முகம் பிள்ளையவர்கள் தமிழ்ப்பேச்சுச் சமூகத்தில் இளைய தலைமுறையினர் பேச்சு முதிய தலைமுறையினர் பேச்சிலிருந்து மாறுபடுவதாகவும், சில இளைய தலைமுறையினர் தங்களது சமூகக்கிளை மொழியை (social dialect) முற்றிலும் அறியாதவர்களாகவும் இருக்கின்றனர் என்ற கருத்தையும் வெளிப்படுத்துகின்றனர் (Shanmugam Pilli 1942:64-41) ; சாதி வழக்குகளில், வயது வேறுபாட்டின் அடிப்படையில் காணக்கிடக்கும் மொழி வேறுபாடுகளைப் பார்ப்போமாயின், ஒவ்வொரு சாதியிலும் வயது வேற்றுமையின் அடிப்படையில் மொழிவேறுபடும் தன்மை வேறுபடுகின்றது. அதன் காரணம் அச்சாதியின் ஏனைய சமூகக் காரணிகள் எனலாம் (C. Yesudhason 1977). இம்மாதிரியான ஆய்வு தமிழ்ப் பேச்சுச் சமூகத்திற்கு மட்டும் அன்றி ஏனைய இந்திய மொழிகள் பேசும் பல சமூகங்களுக்கு மிக்க பலனை அளிக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. எவ்வாறு ஒரு தலைமுறையினர் பேச்சு வழக்கிலிருந்து அடுத்த தலைமுறையினர் பேச்சு வழக்கு வேறுபடுகின்றது என்பதனை விளக்கப்படம் மூலம் மொழிவேறுபாட்டின் கோட்பாடுகள் என்ற தலைப்பில் (Vol 3No.4, 1980) '4.3 குழந்தைகள் மொழியும் மொழி மாறுபடும் தன்மையும்' என்ற பகுதியில்

முன்பே இங்கு எவ்வாறு ஏன் இளைய தலைமுறையினர் பேச்சு வழக்கு முதிய தலைமுறையினர் பேச்சு வழக்கிலிருந்து வேறு படுகின்றது என்பதனைப் பொதுவான சில கருத்துக்கள் கொண்டு பார்ப்போம்.

5.2

இளைய தலைமுறையினர் தங்களது பேச்சு வழக்கு 'சிறப்பற்றது' என்ற தாழ்வு மனப்பான்மையோடு செயல்படுவதாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. அவர்களை அவ்வாறு எண்ண வைக்கும் காரணங்களாக (i) ஏனைய சமூகத்தோடு அவர்கள் கொண்டுள்ள தொடர்பு (contact with other speech community), (ii) கல்வியின் தாக்கம் (literacy), (iii) அவர்களது மனப்பான்மை (attitude of the community) முதலிய கருத்துக் களைக் கொள்ளலாம்.

5.2.1. ஏனைய சமூகத்தினரது தொடர்பு

ஒரே பேச்சு மொழி சமூகத்தில் உள்ள, ஒரு சமூகக்கிளை மொழியைப் பேசும் ஒருசாரார், ஏனைய சமூகத்தினருடன் தொடர்பு கொள்கையில் சில மொழியியல் கூறுகள் பொதுவாக இரு சமூகத்திற்கும் ஒன்றாகவும், ஒரு சில மொழியியல் கூறுகள் வேறுபட்டும், அல்லது மாறுபட்டும் அல்லது திரிபு பெறுவதையும் காணலாம். அவ்வாறான வேறுபாடுகளைப் பேச்சுத் தொகுப்பில் கூறுகையில் பொது மொழி (standard language) பேச்சுப் பொது மொழி (standard spoken language) அல்லது அம்மாறிகளுக்கு இணையான ஆங்கிலச் சொற்களை இடும் கட்டாயத்திற்கு உட்படுகின்றனர். இம்மாதிரியான செயல் கற்றவர்களிடையே அதிகமாகக் காணப்படுவதைக் காண லாம்.

5.2.2. கல்வியின் தாக்கம்

முதிய தலைமுறையினரை விட இளைய தலைமுறையினர் கல்வி கற்கும் எண்ணிக்கையும், கல்வியில் நாட்டமும், கல்வியின் தரமும் அதிகம் கொண்டவராகக் காணப்படுகின்றனர். இளைய தலைமுறையினருக்குப் பொது மொழி (standard language) பயிலும்

முதன் மொழியாகவும், சில பாடங்களுக்குப் பயிற்று மொழியாகவும் இருப்பதால் தங்களின் சமூக, வட்டார வழக்குகள் தரத்தில் குறை வானது என்ற குற்ற உணர்வான எண்ணம் எழுகின்றது. எனவே: தங்கள் பேச்சு வழக்கில் காணவிருக்கும் பேச்சு வேறுபாட்டைப் பொது மொழிகளின் கூறுகளைக் கொண்டோ, ஆங்கிலச் சொற் களைக் கொண்டோ மாற்ற முற்படுகின்றனர்.

**5.2.2.1.**

தமிழ் நாட்டில் பயிற்று மொழி முக்கியமாக ஆங்கிலமாக இருப்பதாலும், பயில்வோருக்கு இரண்டாவது மொழியாக (second language) இருப்பதாலும், முதிய தலைமுறையினரை விட இளைய தலைமுறையினர் தங்கள் பேச்சு வழக்கில் அதிக ஆங்கிலச் சொற் களைச்சேர்த்துக் கொள்ளும் தன்மையைக் காணமுடிகின்றது. ஆங் கிலத்தைப் பயன்படுத்தும் தன்மை இளைய தலைமுறையினரிடம் மட்டும் இருக்கின்றது எனக் கூறவியலாது, முதிய தலைமுறைகளிடம் அம்மாதிரி செயல் இருக்கின்றது. ஏன் ஆங்கிலத்தை பயன்படுத்து கின்றனர் என்ற கேள்வி நம்மில் எழலாம். ஆங்கில அறிவை வெளிப்படுத்த வேண்டும் என்ற மனப்பான்மையோ, ஆங்கிலச் சொற் களுக்கு ஈடான தமிழ்ச் சொற்கள் இல்லை என்ற நிலைமையிலோ, எளிதாக ஆங்கிலச் சொற்களில் விளங்க வைக்க முடியும் என்ற எண்ணமோ, பேசுபவருடைய சமூகக் கிளை மொழியையோ வட்டாரக் கிளை மொழியையோ மறைக்க வேண்டும் என்ற எண்ணமோ, பேசும் பேச்சிற்கு இடையில் தன்னையறியாமல் ஆங்கிலம் புகுந்து விடுகின்றது (spontanious flow) எனப் பலவாறாக கொள்ள வாய்ப்பு உண்டு. இன்றும் இழிவு சொற்களைக (taboo words) கூறுமிடத்தும் எண்களை (numerals) குறிப்பிடும் போதும் - குறிப்பாகப் பேருந்து களின் எண்கள், நேரப்பாகுபாடுகள் (like nine thirty) முதலிய வற்றை எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம். இழிவுச் சொற்களைப் பயன்படுத்துமிடத்து ஆங்கிலச் சொற்களை சேர்த்துக் கொள்வதின் காரணம் கீழ்கண்டவாறு எண்ணத் தோன்றுகின்றது. ஒரு மொழியை தாய் மொழியாகக் கொண்டவர் இன்னொரு மொழியை இரண்டாவது மொழியாகக் கொண்டுள்ளாராயின் அவ்விரண்டாவது மொழியில் பொருள் கொள்ளுந் தன்மை (understanding the semantic value) த ய் மொழியைவிடச் சற்று குறைவாகவே காணப்படும். எனவே

தான் சிலர் கோபத்தால் திட்டும் போதும் ஆங்கிலத்தை உபயோகிக்கக் காணலாம். அவ்விரண்டாவது மொழியின் புலமை கூடக்கூட அம்மொழியில் பொருள் கொள்ளும் தன்மை (understanding the semantic value) கூடுவதை நாம் காணலாம். தற்போது கற்றோர் பேசும் தமிழ் மொழியைப் பொருத்தவரையில், ஆங்கிலச் சொற்களோ சொற்றொடர்களோ இல்லாத தமிழ் வாக்கியங்கள் இல்லை எனலாம்.

### 5.2.3. மனப்பான்மை

பொதுவாக இளைஞர்களது மனப்பான்மையைப் பார்ப்போமாயின் புதியவைகளை அதாவது புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தும் தன்மையும் முழுமனதாக ஏற்றுக்கொள்ளும் தன்மையும் முதியவர்களைவிட அதிகமாக இருக்கக் காணலாம். குறிப்பாக சமூகத்தின் பண்பாட்டு நிலைகளாகிய புதிய கண்டுபிடிப்புகள், உணவு முறையில் மாற்றம், உடையணிவதில் மாற்றம் இன்னும் பலவகைகளை இளைய தலைமுறையினர் பின்பற்றுவதைக் கண்கூடாகக் காணலாம். அதிலும் குறிப்பாக சாதி என்னும் சமூக விரோதியையும் இன்னும் சமூக மூட நம்பிக்கைகளையும் தற்கால விஞ்ஞான உடன்பாட்டிற்கு ஒவ்வாத கருத்துக்களை மீறும் தன்மையையும் முதலியவர்களை விட இளைய தலைமுறையினரிடையே அதிகமாகத் தென்படுவதை நாமறிவோம். இவ்வாறே தேவைக்கு தகுந்த மொழி வேறுபாடும் இளையதலைமுறையினரிடம் மிகுந்த வரவேற்பைப் பெறுகின்றது. இவ்வகையதான மனப்பான்மைக்கு முன்னர்கூறிய கல்வி, ஏனைய சமூகத்தினரது தொடர்பு இன்னபிற சமூகக் காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## 6.0. கல்விவேறுபாடும் மொழி வேறுபடும் தன்மையும்

உலகில் உள்ள அனைத்து மொழிகளின் வேறுபாட்டிற்கும் கல்வி முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதை புளும்பீல்ட் (Bloomfield 1964 391) உரைக்கின்றார். குறிப்பாக இருமாதிரி மொழிகளில் (diglossic languages) கல்வியின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது[6]. இதற்குத் தமிழ் மொழி ஒரு தனி எடுத்துக்காட்டாகும். தமிழ்போல் இரு மாதிரி மொழிகளில் பொதுமாதிரி (standard variety) எழுதுவற்கும் இன்னும் சிறப்பு பேச்சு அம்சங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பொதுப்பேச்சு மாதிரி (stanadard spoken variety) சாதாரணப் பேச்சுவழக்கிற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஆயின் சில குறிப்பிட்ட

விவாதப் பொருளுக்கு (toipic of discussion) தகுந்தபடியும், கேட்கு நருக்குத் தகுந்தபடியும், இன்னும் பல சமூக சூழ்நிலைக்குத் தகுந்த படியும், பேச்சு வழக்கிலும் பொதுத்தமிழ் மாதிரி புக வழியுண்டு. பொதுமாதிரி மட்டும் பேச்சு மாதிரியில் கலக்கும் அல்லது புகும் எனக் கூறமுடியாது. பேச்சுமாதிரியும் அதிகமாகப் பொதுமாதிரியில் புகுந்த வண்ணமாக இருக்கலாம். சில மொழிகளில் குறிப்பாக, தமிழ் மொழி யில் பொதுமாதிரி பேச்சுப் பொதுமாதிரியில் கலப்பதைவிட, பேச்சு மாதிரி பொதுமாதிரியில் கலந்து வருவதை நாம் காணலாம். இவ்வாறு இருமாதிரிகளும் ஒன்றாகக் கலக்கும் தன்மை (tendency of convergence) பல இருமாதிரி மொழிகளில் (diglosic languages) உருவாகிக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

6. 1.

பேச்சு மொழி வேறுபடுவதற்கு கல்வி எவ்வாறு வழிவகுக் கின்றதோ அதுபோன்றே வட்டார, சமூகக்கிளை மொழியனைத்தும் ஒன்றுபடுவதற்கும் கல்வி முக்கிய பங்கு வகுக்கின்றது. ஏனெனில் ஒவ்வொரு பேச்சுக்கிளை மொழியும் கல்வியின் தாக்கத்தால் வேறு படும் தன்மையும் (– அதாவது அதை விவரித்துக் கூறுவோமாயின் கற்றோர் பொதுமாதிரியைக் கற்பதால் சமூகப்பேச்சு வழக்கையும் வட்டாரப் பேச்சு வழக்கையும் விட்டுப் பொது மாதிரியை நோக்கி நடைபோடும் தன்மை), அதே சமயம் பல சமூக வட்டாரக் கிளை மொழிகளைப் பேசிக் கொண்டிருக்கும் பல சமூகத்தைச் சார்ந் தோர் ஒரேமாதிரியான பொது மாதிரியைக் கற்பதால் தங்கள் சமூக வட்டாரக்கிளை மொழி வழக்கை விட்டுவிட்டுப் பொது மாதிரியை நாடுங்கால் இருவகையான கலப்பு (அதாவது பேச்சு மாதிரியும் பொது மாதிரியும் கலந்து பேச்சுப் பொதுமாதிரி என்கிற மாதிரி) மாதிரி பேசு வதற்கு என்று பேச்சுச்சமுகத்தில் உருவாகுவதைக் காணலாம். இவ் வாறு கல்வியினால் உயர் மட்டத்தில் அதாவது மொழி பேசும் சமூகத் தில் ஒரு இணைப்பும் கீழ் மட்டத்தில் அதாவது சமூக வட்டாரக் கிளை மொழிகளில் வேறுபாடும் தோன்றுவதாகத் தெரிய வருகின்றது. மேற்கூறிய உயர்மட்ட ஒற்றுமையும் கீழ் மட்ட வேறுபாடும் தமிழ்ப் பேச்சுச் சமூகத்திற்கு மிகவும் பொருந்தும். கல்வியின் தாக்கத்தால் ஆங்கில மொழித்தாக்கம் எவ்வாறு ஏன் நிகழ்கின்றது என்பதனை '5.0 வயது வேறுபாடும் மொழி வேறுபாடும் தன்மையும்' என்ற

பகுதியில் '5.2.2. கல்வியின் தாக்கம்' என்ற தலைப்பில் கொடுத்துள்ளோம்.

## 6.2.

கற்றோர் மட்டும்தான் தாங்கள் பேசும் மொழியை மாற்றிக் கொள்கின்றனரா? இந்நிலையில் கல்லர்தார் வட்டாரக் கிளைமொழி வழக்கையும் சமூகக் கிளைமொழி வழக்கையும்தான் பேசிவருகின்றனரா, கல்வியின் தாக்கம் கல்லாதார் மாட்டு ஏற்படாதா? என்கிற பல கேள்விகள் நம்மில் எழாமலிருப்பதில்லை. உண்மையில் கல்வியின் தாக்கம் கல்லாதவர் நடுவில் ஏற்படத்தான் செய்கின்றது. கல்வியின் தாக்கம் கல்லாதவர் நடுவில் நேரடியாக ஏற்படாவிட்டாலும் மறைமுகமாக அரசியல் அல்லது மதச் சொற்பொழிவுகள், சினிமா, நாடகங்கள், பாட்டுகள், வானொலி செய்திகள், கற்றாரோடு கொண்டுள்ள தொடர்பு இன்ன பிற வழிகளிலும் ஏற்பட வாய்ப்புக்கள் பல உண்டு.

## 6.3.

எனவே கற்றார் பேச்சு வழக்கில் இம்மாதிரியான மாதிரியைப் பயன்படுத்துகின்றனர் அல்லது கல்லாதார் இம்மாதிரியான பேச்சு வழக்கு மாதிரியைப் பயன்படுத்துகின்றனர் எனக் குறிப்பிட்டுப் பிரித்துக் கூற முடியாவிட்டாலும், இவ்விரு சாராருக்குள்ளும் வேறுபாட்டின் மனப்பாங்கு இருக்கின்றது என்ற கொள்கையை மறுக்க முடியாது.

## 7.0. பால் வேறுபாட்டில் மொழி வேறுபடும் தன்மை

உலகின் பல மொழிகளிலும், பல மொழிகளின் சமூக வட்டாரக் கிளை மொழிகளிலும் ஆண், பெண் இருபாலார் பேச்சு வழக்குகளில் மொழி வேறுபடும் தன்மையைக் காணலாம். சில மொழிகளில் ஆண்பாலார் பேச்சு வழக்கின் சில மொழிக் கூறுகளைப் பெண்பாலார் பேசுவதில்லை. அதேபோல் பெண்பாலார் பேச்சு வழக்கின் சில மொழிக் கூறுகளை ஆண்பாலார் பேசுவதில்லை. இவ்வாறு சில மொழிகளில் சில குறிப்பிட்ட மொழி மாறிகள் (linguistic variables) ஆண்பாலார் பேச்சு மாதிரிகள் அல்லது பெண்பாலார் பேச்சு மாதிரிகள் என வெளிப்படையாக பிரித்துக் கூறும் வண்ணம் பேச்சு வழக்கில்

வேறுபாடுகள் அல்லது மாறுபாடுகள் அல்லது திரிபுகள் காணக் கிடக்கின்றன,

குறிப்பாகப் பார்ப்போமாயின் டோமினிக்கா என்கிற இடத்தில் சேவேஜ் என்கிற இனத்தாரின் (savage natives of Dominica) பேசும் மொழியிலும் (Milhelm Bretons : 1664) முஸ்கோஜியனின் (Muskogeon) கிழக்குப் பாகத்தில் உள்ள மொழிகளாகிய கோசாத்தி (Koasatti) கிரீக் (Creek), முஸ்கோஜி (Muskogee) ஹிட்ஸிதி (Hitchiti) ஆகியமொழி களிலும் (Mary R. Hass, 1964), லூஸியானா விலுள்ள றியூனிகா (Tunica) என்ற மொழியிலும், பிலோக்ஸி (Biloxi) டிராக்ஹார்ட் மன்காலில் (Darkhart Mongal) உள்ள தைய் (Thai) என்ற மொழியிலும், சக்கி (Chakchi) என்ற மொழியிலும் (Capell, 1966), வடதிராவிட மொழியாகிய குருக் (Kurukh) மொழியி லும், (Francis Ekka, 1972) இம்மாதியான மொழி வேறுபாடுகள் காணக்கிடைப்பதாக ஆய்வு அறிக்கைகள் பல இயம்புகின்றன.

உலகின் ஒவ்வொரு மொழியிலும் முதியோரை எவ்வாறு குறிப்பிட வேண்டும் இளையோரை எவ்வாறு குறிப்பிடவேண்டும் பெண்கள் எவ் வாறு ஆண்களைக் குறிப்பிடவேண்டும், ஆண்கள் எவ்வாறு பெண் களைக் குறிப்பிடவேண்டும் என்ற நியதி உண்டு. முதிய அண்மை உற வினர் எவர்எவர் பெயரைப் பெண்கள் குறிப்பிடக் கூடாது, அவ்வாறே ஆண்கள் எவர் எவர் பெயரைக் குறிப்பிடக் கூடாது, எவர் எவர் பெயரைக் குறிப்பிடலாம் என்ற விதி முறைகள் ஒவ்வொரு மொழியி லும் தம் தம் சமூகக் கட்டுப்பாடு முறையில் வழக்கத்திலிருப்பது நாம் கண் கூடாகக் காணும் உண்மை. இவ்வாறு சமூகக் கட்டுப்பாட்டு முறையில் வழக்கத்திலிருக்கும் மொழி வேறுபாட்டுக்கு டு திருவிதாங்கூரில் (Central Travaencore ழக்கிலிருக்கும் மலையாள கிளை மொழிக் கூறுகளை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இங்கு ஆங்ஙளா (a : ṅṅaḷa : < a : ṇ + kaḷ) என்ற சொல் உயர்வுமனப் பான்மையில் (honorific sense) ஆண் உடன்பிறப்புக்கள் (brothers (hon) ) என்ற பொருளில் பெண் உடன் பிறப்புகளாலும், பெங்ஙள் (peṅṅaḷ < peṇ + kaḷ) என்ற சொல் பெண் உடன்பிறப்புகள் (sisters (hon)) என்ற பொருளில் ஆண் உடன்பிறப்புக்களாலும் குறிப்பிடப்படும்.

7.1.

சில மொழிகளில் ஆண்பாலார் பேச்சு பெண்பாலார் பேச்சு எனக் குறிப்பிட்டுப் பிரித்துக் கூற முடியா வண்ணம் இருப்பினும், இருபாலர் பேச்சுவழக்கிலும் மொழி வேறுபடும் தன்மை (rtendency of linguistic deviation) காணக்கிடைக்கலாம். இவ்வாறான வேறு பாட்டை அமெரிக்காவில் ஆப்பிரிக்கர் பேசும் ஆங்கில மாதிரிகளிலும் (Black English varieties) குறிப்பாக டிட்ராயிட் நீகிரோக்கள் (Detroit Negro) பேசும் ஆங்கில மாதிரிகளிலும் (Wolfram, 1969), அமெரிக்கா வில் வழக்கிலிருக்கும் ஏனைய சில கிளைமொழிகளிலும் (Levine crockett, 1969), நியூ யார்க் (New York) கிளை மொழியிலும் (William Labov, 1966), சில பிரிட்டிஷ் (British) ஆங்கில மாதிரி களிலும் (Fisher J. L., 1958), குறிப்பாக நார்விச் (Norwich) கிளை மொழியிலும் (Peter Trudgill, 1972) ஆய்வாளர்கள் பலர் கண்டறிந் துள்ளனர். இன்னும் இம்மாதிரியான வேறுபாடு ருஷிய (Russion) மொழியிலும், காஸ்வன்டையின் (Gasvantine) மொழியிலும் இருப்ப தாக செப்பல் (Capell, 1966) என்பவர் உரைக்கக் காணலாம். இன்னும் லோவர் பேராக்கில் (Lower Perak) பேசப்படும் தமிழ்க் கிளை மொழிகளில், வீட்டில் பயன்படுத்தப்படும் பொருட்களின் பெயர் களில் ஆண்பாலார் பேச்சிலும் பெண்பாலார் பேச்சிலும் வேறுபாடு இருப்பதாக இராம. சுப்பையா (Rama Subiah, 1966) அவர்கள் கூறக்காணலாம்.

7. 2.

இரண்டாவதாகக் கூறப்பட்ட வேறுபாட்டுத் தன்மையில் இரு பாலாருக்கும் இடையே உள்ள சமூக தூரம் (social distance), சமூக வேறுபாடு (social diffrence) என்ற முறையில் இருபாலாரையும் பிரிக்க முடியாதாகையால், சரியான புள்ளிவிவர ஆய்வின்றி இரு பாலாரிடமும் உள்ள மொழி வேறுபாட்டை வெளிக்கொணர இயலாது என வெளிப்படையாகத் தெரிகின்றது.

7. 3.

இரண்டறக் கலந்து பழகும் ஒரே சமூகத்தின் இருபாலாருள்ளும் ஏன் எவ்வாறு மொழி வேறுபாட்டுத் தன்மை ஏற்படுகின்றது என்ற

கேள்வி நம்மில் பலருக்கு எழ·வாய்ப்பு இல்லாமல் இல்லை. சேவேஜ் இனத்தாரின் இருபாலார் பேச்சும் வேறுபடக் காரணம் கரிப் (Carib) அரவாக் (Arawek) ஆகிய இரு இனத்தாரின் கலப்பு எனலாம்.[8] முஸ்கோஜியன் (Mushogeon) மொழிகளிலுள்ள இருபாலார் மொழி வேறுபாடு பெண்பாலார் கொண்டுள்ள பழைமையைப் பாதுகாக்கும் தன்மையால் (conservative habit) உருவாகியுள்ளது என மேரி ஆர் ஹஸ் (Mary R. Hass) அவர்கள் கூறக்காணலாம்.[9] குருக் மொழியில் இருபாலார் பேச்சு வழக்கிலும் ஏற்பட்டுள்ள வேறுபாட்டிற்குக் காரணம் அவ்வினத்தாரில் ஆண்வழி குடும்ப ஆட்சி (Patriarchical system) நடைபெறுவதால் இருக்கலாம் என பிரான்ஸிஸ் எக்கா (Francers Ekka) அவர்கள் நம்புகின்றார்கள்.[10] தை (Thai) தர்காட் மங்கல் (Dharkhart Mongal), சக்சி (Chakchi), கம்சத்கா (Kamchtka), யுகா ஹீர (Yukahir) ஆகிய மொழிகளில் ஆண் பெண் ஆகிய இருபாலர் பேச்சு வழக்கும் வேறுபட இருபாலாருடைய வேறு பட்ட தொழிலே (dision of labour) காரணமாக இருக்கும் என செப்பல் என்பார் நம்புகின்றார்[11]. நடு திருவிதாங்கூரில், மலையாளக் கிளை மொழியில் இருபாலார் பேச்சு வழக்கிலும் காணவிருக்கும் மொழி வேறுபாட்டிற்குச் சமூகப் பண்பாட்டின் நிலைகள் (sociocu-ltural system) காரணமாக இருக்கும் என பாலகிருஷ்ணன் அவர்கள் நம்புகிறார்கள்[12].

7.4.

மேல் நாட்டு மொழிகளில், ஆண், பெண் ஆகிய இருபாலார் பேச்சு வழக்கும் வேறுபடுவதற்குக் காரணம் பெண்பாலார் பேச்சு வழக்கில் காணக்கிடைக்கும் நிலைப்பில்லாத் தன்மை (linguistic insecurity) எனவும், இந்நிலைப்பில்லாத்தன்மைக்குக் காரணம் அந்தஸ்து மனப்பான்மை (status conciousness) என்றும் மேல் நாட்டு சமூகமொழியியலார் காரணம் பகர்கின்றனர்.[13] இராம. சுப்பைய்யா அவர்கள் ஆண், பெண் இருபாலார் பேச்சும் சமையல் வேலை துடைப்பம், பானை, முறம், அம்மி, உரல், உலக்கை ஆகிய பொருள் களின் - பெயர்கள் வேறுபடுவதாகக் கூறுகின்றார்.[14]

7.5.

மேற் கூறிய பல ஆய்வு அறிக்கைகளை நோக்குகையில் ஆண் பெண் ஆகிய இருபாலார் பேச்சு வழக்கிலும் வேறுபாடு தென்படப்

பலவகையான சமூகக்காரணங்கள் இருப்பதாகத் தெரிகின்றது. அவையாவன:

1. இருமொழியினத்தார் கலப்பால் பெண்கள், தங்கள் இனத்தாரின் மொழியைப் பின்பற்றுவது (Hybridization of two linguistic groups). இது ஒருவிதமான பழமையைக் காக்கும் நிலை (conservatism) எனலாம்.

2. பெண்களிடம் குடி கொண்டுள்ள பழமையை பாதுகாக்கும் தன்மை (conservatism).

3. சமூகத்தில் அல்லது குடும்பத்தில் ஆண்பாலார் அல்லது பெண்பாலார் வகிக்கும் பங்கு (Patriarchical or matriarchical system in the society).

4. இருபாலாரும் மேற்கொள்ளும் வேறுபட்ட தொழிலினால் ஏற்படும் வேறுபாடு (division of labour among men and women in the society).

5. பெண்பாலாரிடம் குடிகொண்டுள்ள உயர்வு மனப்பான்மை (prestige conciousness among ladies) எனப் பலவாகும்.

7.6.

எவ்வாறாயினும் இருபாலாருள் ஏதேனும் ஒருபாலார் தங்கள் சமூகத்தில் வழங்கிவரும் பேச்சு வழக்கிலிருந்து அதிகமாக வேறுபடும் தன்மையை நாம் காணலாம். எல்லா மொழிகளிலும் அல்லது கிளை மொழிகளிலும் ஒரேவிதமான திக்கில் வேறுபாடு நிகழ்வதில்லை. சில மொழிகளில் அல்லது சில கிளை மொழிகளில் ஆண்பாலாரிடம் மொழி வேறுபடும் தன்மை அதிகமாகவும் சில மொழிகளில் அல்லது சிலகிளை மொழிகளில் பெண்பாலாரிடம் வேறுபடும் தன்மை அதிகமாகவும் இருப்பதை நாம் காணலாம். இவ்வாறான வேறுபாட்டை முன்னர் கூறியதுபோல் இரு பகுப்பாகப் பகுக்கலாம். அவை

1. மொழியில் பழமையைக் கூடுதலாகக் காக்கும் தன்மை (linguistic conservative tendency)

2. மொழியில் புதுமையைக் கூடுதலாக ஏற்றுக் கொள்ளும் தன்மை (linguistic adoptive tendency).

7.7.

மேற்கூறியவற்றால் ஏதேனும் ஒருபாலார் முற்றிலும் பழமையைக் காக்கின்றனர், ஒருபாலார் முற்றிலும் புதுமையை ஏற்றுக்கொள்கின்றனர் எனக் சொள்வதற்கு இடமில்லை. மொழி வேறுபாட்டில் ஒருபாலார் கூடுதலாகப் புதுமையை ஏற்றுக்கொள்ளும் தன்மையும் ஒருபாலார் அவ்வாறு ஏற்றுக்கொள்ளாத் தன்மையும் தெரியவருகின்றது எனக் கொள்ளலாம். சில சமூகங்களில் பெண்கள் பழமையைக் கூடுதலாகக் காக்கும் தன்மையும், சில சமூகங்களில் பெண்கள் புதுமையைக் கூடுதலாக ஏற்றுக்கொள்ளும் தன்மையும் தெரியவருகின்றது. இன்னும் சில சமூகங்களில் மேற்கூறிய இரு தன்மைகளும் ஆண்பாலாரிடம் இருக்கக்காணலாம். எவ்வாறு இரு தன்மைகளும் ஏற்படுகின்றன என்பதற்குச் சமூகரீதியான காரணங்களைப் பார்ப்போமாயின் அவைகள் கீழ்க்காணும் சமூகக் காரணிகளின் அடிப்படையினால் எனலாம்.

1. சமூகத்தில் இருபாலாரில் எப்பாலார் நிலை (status) உயர்வு பெற்று விளங்குகின்றது என்பதைப்பொறுத்தது. அதாவது, ஆண்பாலார் நிலை உயர்வு பெற்றிருப்பின் மொழி அல்லது ஏனைய சமூகப் பழக்கவழக்கங்கள் வேறுபடும் தன்மை ஆண்பாலாரிடம் கூடுதலாகவும், பெண்பாலார் நிலை உயர்வு பெற்றிருப்பின் மேற்கூறிய தன்மை பெண்பாலாரிடம் கூடுதலாகவும் இருக்க வாய்ப்பு உண்டு எனக் கொள்ளத் தோன்றுகின்றது.

2. மேற்கொள்ளும் வேலையால் ஏற்படும் ஏனைய சமூகத் தொடர்பு முக்கிய காரணியாகப் பங்கேற்கின்றது. (எடுத்துக் காட்டாக, மீன் பிடிப்பவர்களை எடுத்துக் கொள்வோமாயின் அவர்களில் ஆண்கள் மீன் பிடிப்பதும் பெண்கள் மீனை விற்பதுமாகிய வேறுபட்ட தொழிலைச் செய்கின்றனர். எனவே ஆண்பாலாருக்கு ஏனைய சமூகத்தினரது தொடர்பு குறைவாகவும், பெண்பாலாருக்கு ஏனைய சமூகத்தினரது

தொடர்பு அதிகமாகவும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இவ் வாய்ப்புத் தன்மை பெண்பாலார் தங்கள் மொழி வழக்கை அதிகமாக மாற்ற உதவுகின்றது (Yesudhason 1977

3. பேசுநரின் கௌரவ உணர்வும், தன்னுடைய சமூக நிலையை மறைக்கும் தன்மையும், அதாவது தன்னுடைய வட்டார அல்லது சமூகக்கிளை மொழியானது தரத்தில் ஏனையோரது பேச்சு வழக்கை விடத் தாழ்வானது என மனத்திற் கொண்டு ஒரு உயர்வு மனப்பான்மையுடன் ஏனைய சமூக வழக்குகளைக் கையாள்வது.

மேற்கூறிய கருத்துக்களில் முதல் இருகருத்துக்களும் முக்கிய மாக இருபாலார் பேச்சு வழக்கிலும் வெளிப்படையான மொழி வேறு பாடு உள்ள சமூகங்களிலும், எல்லாக்கருத்துக்களும் சரியாக ஆண்பாலார் பேச்சு பெண்பாலார் பேச்சு வழக்கு எனப் பிரித்துக்கூற முடியாமல் மொழிவேறுபாட்டின் தன்மை காணப்படும் மொழிகளிலும் காணக்கிடைக்கும்.

## 8.0. நட்புத் தொகுப்பினால் மொழி ஒன்றுபடும் தன்மை

சில சாதியினரது நட்புத் தொகுப்பின் காரணமாக அவர்கள் பேச்சு வழக்கில் சில ஒற்றுமை காணக்கிடைக்கின்றது. என்பதை கும்பர்ஸ் (Gumperz) வடஇந்திய மொழிகள் குறிப்பாக இந்தி (Hindi) மொழியில் பல சாதியினர் பேசும் சமூகக்கிளை மொழிகளை ஆயு மிடத்து வெளிக் கொணர்ந்து காட்டுகின்றார். அவர் சில ஒலியன்கள் தான் அந்த மூன்று தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு ஒன்றாக இருப்பதாக வும், அவ்வாறே சில ஒப்புமையுள்ள மூன்று உயர் சாதிகளுக்குள் ஒலியன்களுக்குள் ஒற்றுமை இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் முடிப்புரையாக மொழிப் பரிமாற்றத்திற்குத் தேவையான மொழியியல் கூறுகளை வேறுபடுத்திக் காட்ட வேண்டிய தேவை, எல்லா மொழி வேறுபாட்டு மாறிகளும் (linguistic variables) ஒரே முறையிலான வேறுபாட்டை உணர்த்தாத நிலை, இன்னும் இவ்வாய் வில் சமூகக் காரணியாக நட்பின் தொடர்பு மொழி வேறுபாட்டைத் தீர்மானிக்கும் காரணி ஆகியவை அமைந்துள்ளன எனப்பலவாறு கூறிச்சென்றுள்ளார். (Gumperz 1958:681).[15] இந்நாள்வரைக்கும்

வெளிவந்துள்ள ஆய்வு அறிக்கைகளில் நட்புறவு மொழி ஒருமைப் பாட்டிற்கோ, அல்லது வேறுபாட்டிற்கோ காரணியாக அமைந்து உள்ளது என்பதை கும்பர்ஸைத் தவிர வேறுயாரும் எம் மொழியிலும் உணர்த்தியதாகத் தெரியவில்லை.

**8.1.**

இம்மாதிரியான மொழிவழக்கின் ஒற்றுமை ஒரே இடத்தில் வழக்கிலிருக்கும் கிராமப்புற சில துணை சாதி சமூகக் கிளைமொழிகளிடம் இருக்க வாய்ப்பு உண்டு. இதற்குக் காரணம் கிராமப்புற துணை சாதியினர்களிடையே உள்ள 'பேச்சுத்தொடர்பு' எனச் சுருங்கக்கூறலாம். இவ்வாறு இருக்கும் சாதிகளிடையே சில சமயங்களில் மொழி வேறுபாடுகளும் (linguistic diversity) காணலாம். எனவே அவர்களது பேச்சு வழக்கில் மட்டுமல்ல ஏனைய பிற பண்பாட்டு நிலைகளிலும் ஒற்றுமையில் சில வேற்றுமையும் காணலாம். இவ்வாறு ஒரே இடத்தில் சில வேறுபட்ட சாதி மக்களிடையே வழக்கிலிருக்கும் ஒன்றுபட்ட பேச்சு வழக்கத்தைத் துணைவட்டாரக் கிளை மொழி எனக் கொள்ளவும் வாய்ப்பு உண்டு.

**9.0.**

**பொருளாதார வகுப்பு வேறுபாடும் மொழிவேறுபடும் தன்மையும்**

மேல் நாடுகளில் பொருளாதார வேறுபாட்டால் மொழியின் அமைப்பு வேறுபடுகின்றது என்பதனைப் பல வழிமுறைகளைக் கையாண்டு வெளிக்கொணர்ந்துள்ளனர். பொருளாதார ஏற்றத் தாழ்விற்கும் மொழியமைப்பின் வேறுபாட்டிற்கும் நல்லதொரு தொடர்பு இருக்கின்றது என்பது அவர்கள் கண்டறிந்த உண்மை. இடத்திற்கு இடம் நில அமைப்புத் தடைகள் (geographical barriers) மொழிவேறுபாட்டிற்கு (அதாவது வட்டாரக்கிளை மொழிகளுக்கு எவ்வளவு தூரம் துணை நிற்கின்றதோ அதேபோன்று சமூகத்தில் உண்டாகும் பண்பாட்டின் வேறுபாடாகிய சமூகத்தடைகள் (social barriers) மொழிவேறுபாட்டிற்கு மட்டுமன்றி ஏனைய நாகரிகங்களின் வேறுபாடுகளாகிய, உணவு உட்கொள்வதில் வேறுபாடு, உடை அணிவதில் வேறுபாடு, ஏனைய பழக்க வழக்கங்களின் வேறுபாடு முதலிய பல பண்பாட்டின் நிலைகளை நிறுத்தவும் (halting), துரிதப்படுத்தவும் (accelarating) செய்கின்றது. பொருளாதார

வேறுபாடும் மொழிவேறுபாடும் என்ற பகுதி மிகக் குழப்பம்வாய்ந்த பகுதி (Trudgill:1974:32)[16]. பொருளாதார நிலை அல்லது பொருளாதார எல்லை (class boundaries) என்பது முற்றிலும் நிலையற்றதும், மாறும் தன்மையும் வாய்ந்தது ஆகும். குறிப்பிட்ட குறுகிய காலஅளவுக்குள் பொருளாதார நிலைமாறும் தன்மை வய்ந்தது ஆயினும் மொழிவேறுபாடு, பண்பாட்டின் இதர வேறுபாடுகள், பொருளாதர நிலை போன்று நிலையற்றது எனக்கூற இயலாது. மேலை நாடுகளில் சமூகங்கள் சமூக ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் வகுப்பு (class) என்று பகுக்கப்படுகின்றது. ஆனால் இந்திய சமூக நிலையானது சாதி என்கிற குறுகிய அளவையால் இதுகாறும் பகுக்கப் படுகின்றது என்பதனைப் பல மேலைநாட்டு சமூக மொழியியலார் கூறிப்போந்துள்ளனர் (Labov 1966; Trudgill 1974; Woltram etal, 1974). இனி சமூகப் பொருளாதார வகுப்பு என்ன என்பதுபற்றி சமூகமொழியியலார் கொடுக்கும் விளக்கங்களை இவண் நோக்குவோம்.

## 9.1. சமூகப்பொருளாதார வகுப்பின் விளக்கங்கள்

சமூகப்பொருளாதர வகுப்பிற்குப்பல விளக்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அவைகளில் முந்தியதும், ஒருவாறு எல்லோராலும் ஒத்துக்கொள்ளக் கூடியதுமான விளக்கங்கள் சிலவற்றை காண் போம்.

### 9.1.1.

ரீடிங் (Reading) என்பவர், 'சமூக பொருளாதார வகுப்பு என்பது முக்கிய பெரிய சமூகக்குழுவில் (major social group) அங்கத்தினர் அனைவருக்கும் சுமாரான ஒரே பொருளாதார நிலை இருக்கும்' என்கின்றார் (Reading 1963:27.)[17]. இவர் சமூகப் பொருளாதார வகுப்பை வெறும் பொருளாதார நிலை கொண்டு அளப்பதைக் காண லாம். லபாவ் (Labov), 'சமூக பொருளாதார வகுப்பை ஆக்கவள முள்ள நோக்குடைய சமூகநிலை' (The productive aspect of social-rank i. e., social class) எது என்றால், 'ஒருவனுடைய சொத்து (wealth) அறிவு (knowledge), திறமை அல்லது ஆற்றல் (power), அதே சமூகத்தின் அங்கத்தினருடன் சம அதிகாரம் என்பவற்றைப் பொறுத்தது' என்கிறார் (Labov1966:212)[18]

**9. 1. 3.**

லபாவ் கூறியதையே டிரட்கில் (Trudgill) 'ஒரு பெரிய முக்கிய சமூகக்குழு, அதன் அங்கத்தினர் அனைவருக்கும் ஏற்றத் தாழ்வற்ற பொருளாதார நிலை, ஒரே சிறப்பு, ஒரே பதவிநிலை, ஒரே அதிகாரம், ஒரே எண்ணம் ஆகியவைகளைக் கொண்டது என்கிறார் (Trudgill) 1974:32).[19]

**9.2.**

இந்திய சமூக நிலையானது முற்றிலும் சாதி அடிப்படையிலான சமூக நிலையைக் கொண்டது எனக் கூறுவது பொருந்தாத ஒன்றாகும். இதையே முன்னர்க் குறிப்பிட்டோம் (பகுதி 3.2. 3பைப் பார்க்க). இன்னும் பொருளாதாரச் சூழ்நிலையும் மொழி வேறுபாட்டைக்கட்டுப்படுத்தும் பல சமூகக் காரணிகளில் ஒரு காரணியாக அமைந்துள்ளது எனக்கொள்ள வாய்ப்பு உண்டு. ஒரேசாதி மக்களிடையே காணப்படும் வெவ்வேறு பொருளாதாரச் சமூகப்பிரிவும் மொழி வேறுபாட்டில் முக்கிய பங்குவகிக்கின்றது என எண்ணத் தோன்றுகின்றது. இவ்வகையிலான ஆய்வு இந்திய மண்ணில் இன்னும் தொடங்கப்படாத நிலையைக் காண்கிறோம்.

**10. 0. நடை வேறுபாடும் மொழி வேறுபடும் தன்மையும்**

**10. 1.**

உலகில் இருமாதிரிகளுடன் செயல்படும் மொழிகள் (diologssic languages) அனைத்திற்கும், குறிப்பாகத் தென்னாசிய மொழிகள் அனைத்திற்கும் 'பல நடைகள் (குறைந்தது இருநடைகளாவது) இருப்பதாக மொழியியலார் பகர்கின்றனர். இவண் தமிழ் மொழியில் காணக்கிடக்கும் மொழிநடைகளைப் பார்ப்போம். தமிழ் மொழியின் நடைகள் ஆறுவிதமான வேறுபாடுகள் கொண்ட மாதிரிகளாகச் செயல்படுவதாகத் தெரியவருகின்றது. அவையாவன:

1. பழந்தமிழ் மாதிரி (Old Tamil Variety)
2. பொதுத்தமிழ் மாதிரி (Standard Tamil or Literary Variety)
3. பேச்சுப்பொதுத் தமிழ் மாதிரி (Standard Spoken Tamil)
4. வட்டாரக்கிளை மொழி மாதிரி (Regional dialect)

5. துணைவட்டாரக்கிளை மொழி மாதிரி (Subregional dialect)

6. சாதி வகை மொழி மாதிரி (Local Sociolect)

மேற்கூறிய ஆறு மாதிரிகளுள் முதல் இருமாதிரிகளும் சிறப்பு நடை (High Variety) ஆகும். ஏனெனில் இவ்விரு மாதிரிகளில் முதல் மாதிரி சிலரால் எழுதுவதற்கு மட்டும் பயன்படுத்தப்படுகின்றது. இரண்டாவது மாதிரி எழுதுவதற்கும் சிலசிறப்பு பேச்சு அம்சங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பின்னர் உள்ள நான்கு மாதிரி களும் சிறப்பற்ற நடை (Low Variety) எனக் கூறலாம். ஏனெனில் அம்மாதிரிகள் சாதாரணமாகப் பேச்சு வழக்குகளில் மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 10.1.1 பழந்தமிழ் மாதிரி

இம்மாதிரி இன்றும் பழந்தமிழில் பற்றுக்கொண்ட சிலரால் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதைப் பண்டிதர் நடை எனக் குறிப்பிடுகின்றனர். இம்மாதிரி, முற்றிலும் பழந் தமிழ்க்கூறுகள் நிறைந்தது எனக் கூற இயலாது. தற்கால பொதுத் தமிழும் பழந்தமிழ் மாதிரியில் கலந்து வருவதைக்காணலாம். குறிப் பாக இம்மாதிரி பழைய இலக்கண இலக்கியங்களுக்கு உரை எழுதும் போது பயன்படுத்தப்படுகின்றது எனத் தெரிய வருகின்றது.

### 10.1.2. பொதுத் தமிழ் மாதிரி

பொதுத்தமிழ் மாதிரி என்பது தற்காலத்தில் எல்லா இலக்கியப் படைப்புக்கள் உருவாக்கப்படுவதும், பள்ளி பாடநூல்கள் வழியாகப் பயிற்றுவிக்கப்படுவதும், கற்றுக்கொள்ளும் மாதிரியுமாகும். மைக்கேல் சி. ஷேப்பிரோவும் (Michal C. Shapiro) ஷிப்மெனும் (Shiffman) இம்மாதிரி தற்கால பேச்சு மாதிரிகளில் இருந்து உருவாக்கப்பட்டது அல்ல என்றும், சுமார் 13 – ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற நன்னூல் ஆகிய இலக்கணங்களில் விவரிக்கப் பயன்படுத்தப்பட்டி ருக்கும் மொழி நடையை ஒத்தது என்றும் எண்ணுகின்றனர் (Michal C. Shapiro etal, 1977 : 2). ஆயின் பத்து அல்லது இருபது

ஆண்டுகளுக்கு முன்பு, தற்போது இருப்பதைவிடப் பொதுத்தமிழில் நிறைய சமஸ்கிருத சொற்கள் இருந்தன என்பது தெள்ளத் தெளிவு. தற்போது இவ்வாறான சமஸ்கிருத சொற்களைத் தன்மயமாக்கும் தன்மை (nativisation attitude) மிக வேகமாத் தமிழ் மொழியில் நடந்து கொண்டிருக்கின்றது.

### 10.1.3. பேச்சுப் பொதுத்தமிழ் மாதிரி

பேச்சுப் பொதுத்தமிழ் மாதிரி என்பது எந்த வட்டாரத்திலும் எச்சாதி மக்களாலும் முழுமையாகப் பேசப்படாததும், ஒரு குறிப்பிட்ட குழு, அல்லது பொதுவாகக் கூறினோம் என்றால் கல்வி, அரசியல், வியாபாரம் ஆகியவற்றில் திளைத்தோங்கும் பிராமணர் அல்லாத வகுப்பினர் பேசிவரும் பேச்சுமொழியில் இருந்து உருவாகிவரும் ஒரு பொது பேச்சு மொழி எனலாம். சுலாபில் இது கற்ற நடுத்தர வகுப்பைச் சார்ந்த வெள்ள ளர், செட்டியார், முதலியார் பேச்சு வழக்கிலிருந்து உருவாகி வரும் மாதிரி என்கின்றார் (Zvelabil 1964 : 261). பேராசிரியர் செ. வை. சண்முகம் அவர்கள் இம்மாதிரி சோழமண்டல வட்டாரத்திலிருந்து உருப்பெறுகிறது என நம்புகின்றார் (Class room Lectures by S. V. Shanmugam, 1975).

### 10.1.4. வட்டாரக் கிளை மொழிகள்

வட்டாரக் கிளை மொழிகள் என்பது தமிழ் மொழிப் பேச்சுப் பரப்பில் இடத்திற்கு இடம் காணக் கிடக்கும் வேறுபாடுகளைக் குறிப்பிடுவது எனலாம். ஆந்திரநோ (Andronov) சுலாபில் (Zvelabil) இன்னும் பல மொழியியல் அறிஞர்கள் தமிழ்ப்பேச்சுப் பரப்பில் காணக் கிடக்கும் மொழி வேறுபாடுகளைக் கொண்டு தமிழ்ப் பேச்சு பரப்பை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, இலங்கை எனப் பல வட்டாரக் கிளை மொழிப் பரப்பாகப் பிரிப்பர். சுலாபில் நாஞ்சில் நாட்டு கிளை மொழியைத் துணை வட்டாரக் கிளை மொழிப் பரப்பாகக் கொள்ள வாய்ப்பு உள்ளது எனக் கூறுகின்றார் (Zvelabil, 1964). ஆயின் நமக்கு நாஞ்சில் நாட்டு (அதாவது கன்னியாகுமரி மாவட்ட) கிளை மொழியை ஒரு தனி வட்டார வழக்காகக் கொள்ள போதிய ஆதாரம் இருக்கின்றது (Yesudhason, 1977), தொல் இலக்கணமாகிய தொல்காப்பியம் தற்போதைய மலையாள மொழிப் பரப்பையும்

சேர்த்துப் பன்னிரெண்டு வட்டாரக் கிளை மொழிகள் தமிழ் மொழிப் பரப்பிலிருந்ததாகப் பகர்கின்றது (தொல். சொல். சூத்திரம் 400). தொல்காப்பியத்தில் கூறப்பட்ட கிளை மொழிகள் கூட்டலினால் (Convergence) குறுகி நான்காகத் திகழ்கின்றனவா என்ற கேள்வி எழ வாய்ப்புள்ளது. இக்கேள்விக்கு விடையளிக்க போதிய அறிவியல் முறையிலான தமிழ் மொழிபரப்பு ஆய்வு மிகத் தேவைப்படுகின்றது.

## 10.1.5. துணை வட்டாரக் கிளை மொழி:

துணை வட்டாரக் கிளைமொழி என்பது தமிழ் பேச்சுப் பரப்பில் காணவிருக்கும் வட்டாரக் கிளைமொழி பரப்புக்கள், பல சிறு துணை வட்டாரக் கிளை மொழிப் பரப்புகளைத் தன்னகத்தே கொண்டது எனலாம்.

## 10.1.6. சாதி கிளை மொழிகள்:

சாதி கிளைமொழி என்பது பொதுப்படையாக ஒரே சீரான பேச்சுத் தொகுப்பை உடைய சாதியினர் (Caste) அல்லது சாதிக் குழுவினரது (Caste Group) பேச்சைக் குறிப்பது எனலாம். சாதி வாரியான பேச்சு தற்போது அழிந்து கொண்டிருக்கின்றது எனக் கொள்ள வாய்ப்பு உண்டு.

## 10.2.

தற்போது தமிழ்ப் பேச்சுப் பரப்பில் சாதிகிளை மொழி வழக்கு களும துணை வட்டார கிளை மொழி வழக்குகளும், அழியத் தொடங்கும் தருவாயில் இருக்கின்றன. இன்னும் வட்டாரக் கிளை மொழிகளிலும் சில மொழிக் கூறுகள் அழியும் தன்மை தொடங்கி யிருப்பது கண்கூடாகத் தெரிகின்றது. பேச்சுப் பொதுத் தமிழ் மாதிரியில் பொதுத் தமிழ் மாதிரியின் கூறுகளும் பல கலந்த வண்ண மாகவே இருக்கின்றன. இன்னும் பொதுத்தமிழ் மாதிரியிலும் பேச்சுப் பொதுத்தமிழின் மொழிக் கூறுகள் கலந்து கொண்டிருக்கின்றன. பொதுத்தமிழ் மாதிரியின் மொழிக் கூறுகள் பேச்சுப் பொதுத் தமிழ் மாதிரியில் கலப்பதை விட பேச்சுப் பொதுத் தமிழ் மாதிரியின் மொழிக் கூறுகள் கூடுதலாக பொதுத் தமிழில் கலப்பதைக் காணலாம்.

## 11. 0. முடிவுரை

எவ்வகையிலான சமூகக்காரணிகளும் மொழி வேறுபாட்டை இரு திசைகளில் (two dimensions) இட்டுச் செல்வதை நாம் காணலாம். 1. புதிய வேறுபாடுகள் மொழியில் புகுந்துகொள்ளுதல் அல்லது புகுத்திக் கொள்ளுதல், 2. பழைய மூல மொழியின் பாகங்களை நிலைக்கச் செய்தல் என்பனவாகும். புதிய வேறுபாடுகள் மொழியில் புகுந்து கொள்ளக் காரணமாக இருக்கின்ற 'ஆதாரம்' (source) அல்லது 'மாதிரி' (Model) என்னவென்பதை அறிதல் வேண்டும். இன்னும் புதிய வேறுபாடுகளை மொழியில் பயன்படுத்துதல் அல்லது பழைய மூலமொழியின் கூறுகள் பாதுக்கப் படுவற்கான 'நோக்கமும் பயனும்' (motivation for the utilization) அறியப்படவேண்டும். மேற்கூறிய (i) ஆதாரம் (source) அல்லது மாதிரி (model), (ii) பயன்படுத்துவதின் நோக்கமும் பயனும் (motivation for the utilization) மொழி வேறுபாட்டுக் கொள்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இங்கு முடிப்புரையில் மேலே தரப்பட்ட விளக்கங்களின் சாரம் தரப்பட்டுள்ளது.

1. மொழி என்பது வேறுபாடுகளும், மாறுபாடுகளும், திரிபுகளும் நிறைந்த மண்டலம். அதை பேசுநர் தருணம், இடம், பொருள் இவைகளுக்குத் தகுந்தவண்ணம் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

2. தென்னாசிய மொழிகளில், குறிப்பாக இந்திய மொழிகளில் சாதி என்பது மொழி வேறுபாட்டின் மூலக் காரணியாக விளங்குகின்றது.

3. தமிழ் சமூக மொழியியல் ஆய்வில் பிராமணர் பேச்சுவழக்கு பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கு, தாழ்த்தப்பட்டோர் பேச்சுவழக்கு எனப் பிரிப்பது ஒரு அகன்ற பாகுபாடு.

4. வயது வேறுபாட்டினால் மொழி வேறுபடும் தன்மைக்கு காரணமாக இளைய தலைமுறையினர்பால் கல்வியின் தாக்கம், இளைய தலைமுறையினர் ஏனைய சமூகத்தோடு

கொண்டுள்ள தொடர்பு, அவர்கள் மனப்பான்மை இன்ன பிற கருத்துக்கள் தெரிய வருகின்றன.

5. கல்வியினால் முழு பேச்சு சமூகத்தில் ஒரு இணைப்புத் தன்மையும் சமூக வட்டாரக்கிளை மொழிகளில் வேறு பாட்டுத் தன்மையும் வளர்ந்து வருவது தெரிய வருகின்றன.

6. பால் வேறுபாட்டினால் மொழி வேறுபடுவதற்குக் காரண மாக சமூகத்தில் ஆண் பெண் ஆகியோர் நிலை (status), அவர்கள் மேற்கொள்ளும் வேறுபட்டவேலை (division of labour), இன்னும் பேசுநரின் கௌரவ உணர்வும், தன்னு டைய சமூக நிலையை மறைக்கும் தன்மையும் இன்ன பிற கருத்துக்கள் தெரிய வருகின்றன.

7. நட்புறவின் காரணமாக கிராமிய துணை சாதி மட்டத்தில் மட்டுமே வேறுபாடும் ஒற்றுமையும் கிடப்பது தெரிய வரு கின்றன.

8. பொருளாதார வகுப்பு, மொழி வேறுபாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பது தெரியவருகின்றது.

9. தமிழ் மொழியில் ஆறுவிதமான மொழி மாதிரிகள் தெரிய வருகின்றன எனவும், அவ்வாறு மாதிரிகளும் இரு நடை களில் (styles) அடங்கும் என்றும், வட்டார சமூகக் கிளை மொழியாய்வு தமிழ்ப் பேச்சுச் சமூகத்திற்கு மிகத் தேவை என்பனவும் தெரியவருகின்றன.

### பின்குறிப்புக்கள்

1 "... the caste is not the only parameter for a socio linguistic inquiry, not should caste be interpreted as a closed group" [Pandit, 1972 : 58].

2 "Caste membership in each of these cases appears ho be the dominant variable ... ... ... caste status appears to be

the dominant social variable connected with linguistic variation" [Susan S. Bean 1974 : 281]

3 "Caste difference in dialects may be marginally determinant variable only at the rural subcaste level ... ..., it would be tenous assumption that this group can always be identified with a caste ..., further there are no social dialects associated exclusively with caste system of Hindu society. ... ... . The burden of argument of this presentation is that the notion 'caste dialect' is unscientific and unncessary" [Pattanayak, 1945 : 94].

4 This portion of translation has been taken from Baright-and Ramanujan's article 'Sociolinguistic variation and language change', in proceedinges of 9th International Congress of Linguistics, (1964 : 1110.)

5 Tol. Col. Su : tram

444 ஈ, தா, கொடு வென் கிளக்கும் மூன்றும் இரவின் கிளவியாகிடனுடைய

445 ஈ யென் கிளவி இழிந்தோன் கூற்றே

446 தா வென் கிளவி ஒப்போன் கூற்றே

447 கொடு வென் கிளவி உயர்ந்தோன் கூற்றே

6 இருமாதிரி மொழி (diglossia), ஒரு மொழியிலும் (— அதாவது ஒரு மொழியின் இருமாதிரிகள் வெவ்வேறு பயன்களுக்கு பயன் படுத்தப்படும் தன்மை), இரு வெவ்வேறு மொழிகளிலும் (— இரு வேறுபட்ட மொழிகள் வெவ்வேறு பயன்களுக்கு ஒரு சமூகத்தாரால் பயன்படுத்தப்படும் தன்மை), கல்வியின் பங்கு மொழி வேறுபாட்டிற்கு முக்கிய பங்கு வகிக்கின்றது.

7 இக்கருத்து டாக்டர் B.C. பாலகிருஷ்ணன் (1981) அவர்களால் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் மொழியியல் உயராய்வு துறையில் work - shop cum seminar on Lexicography — இல் நடத்திய சொற்பொழிவிலிருந்து கூறக் கேட்டது.

8 "... the men have a great many expressions peculiar to them , ...... The savage natives of Dominica say that the reason for this is that when the Caribs came to occupy the island, these where inhabited by an Arawak tribe which they exterminated completely, with the exception of women, whom they married in order to populate the country. Now, these women kept their own language and taught it to their daughters... But though the boys understand the speech of their mothers and sisters they nevertheless follow theirs fathers and brothers and conform to their speech from at the age of five or six. ... It is asserted that there is some similarity between the speech of of continental Arawaks and that of the Carib women. But the Carib men and women on the continent speek the same language, as they have never corrupted their natural speech by marriage with strange women" (Botterdam, 1665). This passage is quoted in Otto-Jesperson's book *Language*. [Otto Jesperson 1922 : 237— 38].

9 "In a few istances, however, the speech of women is seem to be some what achaic than that of men and to this extent it is possible to justify the procedure on historical grounds" [Mary R Hass, 1964 : 228].

10 "It is difficult, at this movement to cite any relevent sociological reason ... ... It may, however, be mentioned that Kurukh community is 'patriarchical' where men enjoy the higher social status than women" [Francis Ekka 1972 : 31].

11 "... but it is interesting that these people are all nomads with marked sex division of lalour" [Capell 1966 : 101].

12 பின் குறிப்பு 9-ஐப் பார்க்கவும்

13 "... on every count, women show much quarter linguistic insecurity than men' [Labov 1966 : 495] ..., "Women in our society are more status conscious than men, generally speaking and are aware of the social significance of linguistic variable" [Peter Trudgill, 1972:182]

14 Rama subbiah states that men and women tend to differ in their speech especially in using words for cooking, sweeping broom, pots, pan and motar used in kitchen [Rama Subbia, 1966:31].

15 "It becomes necessary to distinguish between several forms of communication. Not all of them have the same effect on linguistic diversity. In the present study, the determining factor seems to be informal friendsihp contacts" [Gumperz 1958 : 681].

16 "The social barriers are as important as geographical barriers in halting or accelerating the diffusion of non - verbal activities like dress fashions, food habits etc. as well as verbal activites, which have orginated in a particular social group. Class variation is a complicated topic rather than any other social parameters" [Trudgill, 1974 : 32].

17 "Social class is a major social group, members of which are of having approximately the same economic position' [Reading 1963 : 77].

18 "The productive aspect of social rank (i.e., social class) involves the degree to which an individual possess wealth, knowledge, power and authority relative to other members of this society" [Labov 1966 : 212].

19 "A major social group, the members of which are appro ximately of the same economic position, prestige, occupati

onal rank, power value orientation, charaterised by interaction and class consciousness" [Trudgill, 1974 : 32].

**நன்றியுரை :**

எனக்கு சமூக மொழியியலைப் பொறுமையுடன் பயிற்றுவித்து மொழியியலில் குறிப்பாக சமூக மொழியியலில் என் எண்ணங்களைத் திருப்பி, பல அரிய கருத்துரைகள் வழங்கி, மொழியியல் ஆக்கப் பணியில் தூண்டும் என் ஆசிரியர் டாக்டர் செ. வை. சண்முகம் அவர்களுக்கும் இக்கட்டுரையைப் படித்து பல திருத்தங்களையும் தவறுகளையும் சுட்டிக்காட்டிய அன்பர் திரு. எஸ். வளவன் அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி.

**துணை நூல்கள்**

1 Apte, Mahadeo. L. 1962, "Linguistic acculturation and its relation to urbanization and socioeconomic factors', Indian Linguistics, 23. P. 5-25.

2 Block, Jules. 1910 "Castes et dialects en-Tamoul memorie de-la Societe de Linguistique" 16, P 1-30.

3 Bloom Field. 1964, "Literate and Iliterate Speech" *Langauage in Culture and Society* (ed) by Dell Hymes New York, Haper and Row.

4 Bright, William. 1960, "Social dialects and language history" *Current Anthropology* Vol. 1, P. 424-6.

5 ———. 1960 b, "Linguistic change in some South Indian dialects", In Ferguson and Gumperz (ed) *Linguistic diversity south Asia IJAL* 26.

6 ———. 1968, "Social dialect and semantic structure in South Asia". In Singer and Cohn(ed) 1968, *Structure and change in Indian Society*, New York; Werner-Gern Foundation for Anthropological Reserach Institute

7 ——— and Ramanujan A.K. 1962, "A study of Tamil dialects", University of Chicago (mimeo)

8 ———, and Ramanujam A. K. 1962, "Socio linguistic variation and language change", *In the Proceedings o f the 9th International congrees of Linguistics*, 1964. The Hague Mouton.

9 Bright, William. etal. 1975, "Comments on D.P, Patta nayak's caste and language", *IJDL.* Vol V, No.1.

10 Capell. 1966, *Studies in Sociolinguistics*. The Hauge Mouton.

11 Fischer. J.L. 1958, "Social influences in the choice of Linguistic variant", *Word,* Vol. 14. p. 47.

12 Francis Ekka. 1972, "Men's Women's speech in Kurukh" *Liniguistics*, Vol. 88, P. 81.

13 Gopinathan Nair. 1975, "Comments D. P. Pattanayak's paper", *IJDL,* Vol. V. No.1.

14 Gumperz. J.J. 1958, "Dialect difference and Social Stratification in a North Indian village", *American Antro pologist*, 60, p. 668–82.

15 Joos, Martin. 1952, "The medieval sibilants", *Lauguage*, 28, P. 222–31

16 Labov William, 1966, *Social Stratification of English in New York*, C.A.L, Washingtion.

17 Levine, Lewis. 1959, *Speech variation and social structure in group of North Indian villages*, Columbia University Ph.D Disseartaion.

18 Mary R, Hass, 1964, "Man's and Woman's speech in Koasati" in *Language Culture aud Society*, p.28, (ed) Dell Hymes, New York. Happer and Row.

19 Mc Cormark William, 1960. "Social dialects in Dharwar Kannada", In Ferguson and Gumperz (ed) 1960 *Linguistic diversity in South Asia*. IJDL. 26.

20 ———, 1968. "Social dialects in Dharwar Kannada" In Sebek T. (ed) 1969, *Linguistics in South Asia, Current Trends in Linguistics* 5, The Hague Mouton.

21 ——— 1968. "Occupation and residenec in relation to Dharwar dialects" In Singer and Chon B.S. (ed) 1968 *Structure and change in Indian Society*, New York.

22 Otto, Jesperson, 1962. *Language : Its Nature and* Development and orgin

23 Pandit P.B. 1963. "Sanskritic clusters and caste dialects I L, 24, 70 - 80.

24 ———, 1972. *India as a Sociolinguistic Area* University of Poona, Poona.

25 Pattanayak D. P. 1975. "Caste and Language", *I J D L* Vol IV, NO. 1.

26 Peter Trudgill, "Sex covert prestige and linguistic change in Urban British English in Norwich" in *Language and Society*, I, P. 176 - 195.

27 ———, 1974, *The Social differentiation of English in Norwich*, London, Cambridge University Pess.

28 Platt, J.T. and Platt, H. K. 1975, *Social Significance of Speech*, NH Publishing Company, Amsterdam.

29 Ramanujan, A. K, 1968. "The structure of variation : A Study in caste dialects", In Singer and Chon (ed) 1968, *Structure and Change in Indian Soeicty, Mo'' '.*

30 Rama Subbiah, 1966, *A Lexical Study of Tamil Dialects in Lower Perak*, P. 31, Dept. of Indian Studies, University of Malaya, Kulalampur.

31 Ramaswami Ayar, L. V., 1932, "Tulu Prose Texts in Two dialects', in Bulletin of the School of Oriental and African Studies, London University, Vol. 22, P. 259-73.

32 Shankaranarayanan. G, 1975, "Social change and Linguistic change", The Proceedings of 7th all India University, Tamil Teachers' conference, Nagercoil.

33 Shanmugam Pillai, M. 1965, "Caste isogosses in kinship terminology" *Anthropological Linguistics* Vol. 7. 59-69

34 ———, 1972, "Tamil-Literary and Colloquial", Linguistics, 81, 83-91.

35 South Worth F.C, 1971. "Detecting Prior Creolization An Analysis of the Historical Orgins of Marathi", In Hymes(ed), 1971 Piedginization and creolization of languages, Cambridge.

36 Susan S. Bean 1974, "Linguistic variation and the caste system in South Asia" I L, Vol. 35, No. 4 p. 244-293

37 Tiwari K. M etal., 1975. "Comments on D. P. Pattanayak's Paper on caste and language" IJDL, Vol. V,No. 1.

38 Upadhyaya, U.P, 1976, "Comments or Pattanayak's caste and langu age" IJDL, Vol V, No.1 p. 80.

39 Wolfram, walter, 1974, *The study of Social Dialect in American English*, Prentice Hall.

40 Yesudhason C, 1977. Tamil Dialects of Kanyakumar District (with special reference to Vilavencode Talu ph. D. Thesis submitted to A.U.

41 Zvelebil kamil, 1964. 'Spoken Language of Tamil Nadu" *Archiv orientalni*, Vol. 32.

42 Tol, Col. Ce:na:vavaiyam Suttiraṅkal 400, and from 444 to 447 Kalakam, Madras

## இலக்கியம் வழங்கும் சொற்கள்

இன்றைய ஆட்சிக்குரிய அழகு அழகான சொற்கள் நம் இலக்கியங்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன. "இப்போது வழங்கும் அயல்மொழிச் சொற்களை அப்படியே வைத்துக கொள்ளமாட்டாமல், ஏன் இறந்துபோன தமிழ்ச் சொற்களுக்கு இலக்கியங்களில் தேடி அலையவேண்டும்?" என்று சொல்லுகின்ற தமிழர்களையும் காண்கிறோம்! ஆனால், அவர்கள் மிகமிகச் சிலரேயாவார் என்பது அமைதி அளிக்கிறது. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் காணும் சொற்கள் சிலவற்றைக் கொண்டு அமைத்த உருவங்களை இங்கே பட்டியிட்டுப் பார்ப்போம். அவற்றைப் படிக்கும் போதே அவற்றின் செவ்விய வடிவமும் நிரம்பிய பொருத்தமும் மகிழ்ச்சி பொங்கச் செய்யும்.

Abolish-கட்டழி
Warden-காப்பாளர்
Bonus-நன்னர்
Connoisseur-நயவர்
Projection-பிதிர்வு (encroachment)
Removing encroachment-பிதிர்வு பெயர்த்தல்
Junior-பின்னன் (பின்னவர்)
Junior to me-எனக்குப் பின்னவர்
Produce-முந்துறுத்து
Produce before the Judge-நடுவரின் முந்துறுத்து
Produce, production-விளையுள்
Conversation-சொல்லாடல்
An able lady conversationalist-சொல்லாட்டி
Tribunal-அவையம்
Dancers-ஆடுநர்
Resignation-ஒருவல்

Senior-முன்னன் (முன்னவர்)
Senior to me-என் முன்னவர்
Strangers-புதுவோர்
Spare axle-சேம அச்சு
Spare (Tyre & Tube inflated)
Stepney-சேமச்சக்கரம்
Advice-மதிமொழி
Conviction-மனக்கோள்
Second Crop-மறுகால்
Refuge-புக்கில்
Circus Arena, Circus-வட்டு வட்டில்
Hired Person-விலைவன்
Cooking utensils-அடுகலம்
Dried up tank அறுகுளம்
Drinking water tank-உண் குளம்
Cloth business – அறுவை வணிகம்
Machine-எந்திரம்
Impregnable bouleward-ஆர் அரண்
Spokes- ஆரை, ஆரம்
At that time-அக்கால்
Retinue-உழையோர்
Bottle-மணிக்கலம்
Estuary-புகார்

Resign-ஒருவு
Weak mind-ஓட்டை மனம்
Quick-ஒல்லை
Last days-கடைநாள்
Cancel-உலை, உலைத்துவிடு
Cancellation-உலைவு, உலைத்து விடல்
Players of musical instruments – இயவர்
Maternity home-ஈனில்
Bathing dress-ஈரணி
Swimming dress-நீச்சலுடை
Nadhaswaram-ஏழில்
Survey -புலவரை
Kindergarten teacher – பாலாசிரியர்
Devastating Rains-அழி பெயல்
Dramatic stage-ஆடுகளம்
Forest bouleward-அருப்பு
Fort having forest bouleward அருப்புக்கோட்டை
Selfless-என் இன்றி
Light grey Hair-அரிநரை
To stand before a person to curry his favour-முகம் புகுதல்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் இங்கும் அங்கும் கண்ணிற்பட்ட சொற்களே இவை.

கீ. இராமலிங்கனார்
தமிழில் எழுதுவோம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
சென்னை, 1978.

# 1800-க்கு முன்னர் ஐரோப்பியக் கண்டத்தில் மொழி ஆய்வு*

**ஆட்டோ ஜெஸ்பர்ஸன்**

தமிழாக்கம்: **எம். சுசீலா**

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

## 1.1. முன்னைப் பழமை

மனித ஆய்வுத்திறன்கள் கீழ்வரும் பிரச்சனைகளை நோக்கித் திரும்பத் தொடங்கிய போதிலேயே மொழி ஆய்வு தோன்றியது எனலாம் — உலகெங்கும் உள்ள மக்கள் ஏன் ஒரே மொழியைப் பேசுவதில்லை? முதன்முதலில் சொற்கள் எவ்விதம் தோன்றின? ஒரு சொல்லிற்கும் அது சுட்டி நிற்கும் பொருளுக்கும் இடையே உள்ள உறவு என்ன? ஏன் ஒரு மனிதனோ, ஒரு பொருளோ குறிப்பிட்ட ஒரு சொல்லைக் கொண்டு மட்டுமே குறிக்கப் படுகின்றனர்? உலகில் ஏனைய விளங்காத புதிர்களுக்குத் தெய்வீகக்

[*Otto Jespersen-இன் *Language, Its Nature, Development And Origin* என்ற நூலின் முதல் அத்தியாயத்தில் 1. 1, 1. 2 ஆகிய பிரிவுகளின் தமிழாக்கம்]

காரணத்தைக் கற்பிதம் செய்வது போன்றே மேற்கண்ட வினாக்களுக்கும் முதன் முதலில் தெய்வீக ரீதியிலேயே விடைகாண முயன்றனர். உலகனைத்திற்குமான ஒரே இறைவனால் அல்லது ஒரு குறிப்பிட்ட தெய்வத்தால் மொழி தோற்றுவிக்கப்பட்டது அல்லது இறைவன் ஆதி மனிதனிடம் அனைத்து உயிர்களையும் கொண்டு வந்து அவற்றிற்கு பெயரிடச் செய்தார்; பின்னரே பலவேறு மொழிகளும் அவற்றிடையே வேறுபாடுகளும் தோன்றின; அவை மனிதன் இழைத்த குற்றங்களுக்குத் தண்டனையாக இறைவன் விதித்ததே என்று பைபிள் பழைய ஏற்பாட்டில் விளக்கப்படுகிறது. இவை பெரிய பொதுமையான மனித அறிவிற்கு எட்டாத பிரச்சனைகள். ஆனால் மிகப் பழங்காலத்திலேயே யூதர்கள் சில சிறிய ஆனால் குறிப்பிடத்தக்க விசேஷ மொழிப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முயன்றனர். சொல்லின் வடிவமும் ஒலியுமே அதன் பொருளை உணர்த்துவதாக சில சொற்கள் உள்ளன. அவ்விதம் வடிவமும் ஒலியுமே பொருளை உணர்த்துவதாக இல்லாத சொற்களின் மூலத்தை விளக்க அவர்கள் முயன்றனர்.

சொற்களின் ஒலிக்கும் பொருளுக்கும் இடையே காணப்பட்ட தற்செயலான ஒற்றுமையின் அடிப்படையிலான சொல்மூல ஆய்வு, பொருளுக்கும் ஒலிக்கும் இடையே ஒரு கற்பிதமான உறவு கண்டு திருப்தி அடைந்து விடும் போக்கு கிரேக்க அறிஞர்களிடமும் அவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றிய லத்தீன் அறிஞர்களிடமும் பெருமளவில் காணப்படுகிறது, ஆனால் சில கூரிய கிரேக்க சிந்தனையாளர்களுக்குச் சொற்கள் இயற்கையானவையா அதாவது அடிப்படையான பொருளின் இன்றியமையாத வெளிப்பாடுகளா அல்லது அவை தன்னிச்சையானவையா அதாவது பொருளைக் குறிக்கும் வெறும் சம்பிரதாயமான குறியீடுகளா (வெறும் சம்பிரதாயமான குறியீடுகள் எனில் வேறு ஒலிகளாலும் அந்தப் பொருளைக் குறிக்கமுடியும் என்றே ஆகும்.) என்றே வினாவே முக்கியமான ஒன்றாக விளங்கியது. இக் கேள்விக்கு விடை காணும் முயற்சியில் முடிவில்லாத விவாதங்கள் நடத்தப்பெற்றன என்பதை நாம் பிளேட்டோவின் க்ருத்யுலோஸ் என்னும் கட்டுரைகளிலிருந்து அறிகிறோம். ஆனால் எந்தத் தீர்மானமான முடிவும் எட்டப்படவில்லை; ஒரே ஒரு மொழியை மட்டும் விவாதத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டு செயல்படும் வரை

ஒரு தீர்மானமான முடிவை எட்டுவது இயலவும் இயலாது. இன்றும் கூட, ஒரு நூற்றாண்டுகால ஒப்பியல் ஆய்விற்குப் பிறகும் கூட இந்த வினா விடை காண முடியாத ஒன்றாகவே உள்ளது. கிரேக்க நாட்டில் பல நூற்றாண்டு காலமாக பூசி (இயற்கையின் படியே) தேசி (மரபுமுறைப்படியே) ஆகிய இரு சொற்களும் மிக அதிகமாக விவாதிக்கப்பட்டு கவனத்தைக் கவர்வனவாக இருந்தன. இவ்விரண்டு சொற்களும் தத்துவ அறிஞர்களையும், இலக்கண அறிஞர்களையும் இரு பெரும் குழுவினராகப் பிரித்து வைத்தன. சாக்ரடீஸ் போன்ற சில அறிஞர்கள் பொருளுக்கும் சொல்லுக்கும் இடையே இயற்கையான உறவு இல்லை என்று ஒத்துக் கொண்டாலும், பொருளும் சொல்லும் முற்றிலும் அறிவுபூர்வமான முறையில் பின்னிப் பிணைந்த சிறந்ததொரு மொழி உருவாக்கப்படல் வேண்டும் என விரும்பினர். இவ் விருப்பமே பிஷப் வில்கின்ஸ் மற்றும் இன்றைய தத்துவமொழி அமைப்பாளர்களுக்கு வழி அமைத்துக் கொடுத்தது.

பிரத்யக்ஷமாக நிரூபிக்க இயலாத இத்தகைய ஆய்வுகள், எவ்வளவுதான் அறிவுபூர்வமாகவும் தீவிரமாகவும் நடத்தப்படினும், விஞ்ஞான ஆய்வுகள் என்று சொல்வது கடினம். ஆயினும் இன்று அவை விஞ்ஞான ஆய்வுகள் என்றே அழைக்கப்படுகின்றன. மிக எச்சரிக்கையான ஆய்வு நோக்கும், விவரங்களின் முறையான பகுப்பும் விஞ்ஞான ஆய்வுக்கு இன்றியமையாதவை. பண்டைய கிரேக்க மொழி ஆய்வாளர்களிடம் இவ்விரண்டும் மிக அரிதாகவே காணப்படுகின்றன. மொழியியல் ஆய்வு நோக்கிலும், பகுப்பிலும் பண்டைய இந்திய இலக்கணிகளே மிகச் சிறந்து விளங்கினர். அன்றைய காலகட்டத்தில் பாரதநாட்டின் பழமையான புனிதம் வாய்ந்த வேதகானங்களின் மொழி பல்வகையானும் நடைமுறைக்கு அப்பாற்பட்டதாகிவிட்டிருந்தது. மிகுந்த மதிப்பிற்குரிய இந்நூல்களின் மொழியில் அணுவளவு மாற்றமும் ஏற்படக்கூடாது என்பது விதியாக இருந்தது. மிக விழிப்பான வாய்மொழிப் பாட பரம்பரை தலைமுறை தலைமுறையாக ஒரு அணுவளவு மாற்றமும் நேராது இவ் வேதகானங்களை பாதுகாத்து வந்தது. இது பேச்சு ஒலிகளின் மிகத் துல்லியமான ஆய்வுக்கு வழி கோலியது; உச்சரிப்பின் ஒவ்வொரு அம்சமும் எச்சரிக்கையாக விவரிக்கப்பட்டது. இலக்கணக் கூறுகளும் பாராட்டத்தக்கவகையில் ஆராயப்பட்டன. அவை முறையாக வகுக்கப்பட்டு சுருக்கமான ஆழம் செறிந்த கலைச்

சொற்களால் விவரிக்கப்பட்டன. இந்த இலக்கணிகளின் அணுகு முறை மேற்கத்திய இலக்கணிகளின் அணுகுமுறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் முதன்முத லாக பாணினி மற்றும் இதர சமஸ்கிருத இலக்கணிகளின் ஆக்கங் கள் ஐரோப்பிய அறிவியலாளருக்கு தெரியவந்தபோது, அவை ஐரோப்பிய மொழியியல் ஆய்வில் தாக்கத்தை ஏற்படுத்தின. இன்றும் கூட சில இந்தியக் கலைச்சொற்கள் மிகுதியான அளவில் ஐரோப்பிய மொழியியல் ஆய்வில் காணப்படுவதே இதற்குச் சாட்சி எடுத்துக்காட்டாக, பலவேறுபட்ட கூட்டுப் பெயர்களை விவரிக்கும் கலைச் சொற்கள் இந்தியக் கலைச்சொற்களே.

கிரீஸிலும், பின்னர் ரோமிலும் மெதுவாகவும், விரிவான அளவி லும் இலக்கண ஆய்வு வளர்ச்சி பெற்றது. சொல் கூறுகள் என சொற்களை வகைப்படுத்தும் பாகுபாட்டுக்கு அரிஸ்டாட்டில் அடி கோலினார். இவரே 'வேற்றுமை' என்னும் இலக்கணக்கூறையும் அறிமுகப்படுத்தினார். இது தொடர்பாக அவருடைய ஆய்வுகளை ஸ்டோயிக்ஸ் தொடர்ந்து செய்தனர். இவர்களில் பலருடைய இலக்கணப் பாகுபாடுகளும், பயன்படுத்திய சொற்களும் இன்றும் நடைமுறையில் வழக்கிலுள்ளன. இச்சொற்கள் லத்தீன் மொழிப் போர்வையில் சில தவறுகளுடன் உபயோகத்திலுள்ளன, எடுத்துக் காட்டாக, ஜெனிகெ 'வகை வேற்றுமை' என்ற சொல் 'தோற்றுவாய் வேற்றுமை' என்று பொருள்படும் ஜெனிடிவஸ் என்ற சொல்லாக மாறியுள்ளது; ஐதியதிகெ 'செயப்படு பொருள் வேற்றுமை' ஐதியோமை 'நான் குற்றம் சாட்டுகிறேன்' என்ற சொல்லிலிருந்து வருவிக்கப்பட்டது போல அக்யுஸேடிவஸ் என்று மாறியுள்ளது. பிற் காலத்தில் அலெக்ஸாண்டிரியாவின் மொழிக்கல்வி நிறுவனம் முக்கிய மானதாக விளங்கியது. எளிதில் பொருள் விளங்காத பண்டைய கவிஞர்களின் மொழியை விளக்குவதே இங்கு முக்கியமான ஆய்வுப் பொருளாக இருந்தது. சொற்திரிபுகளும், சொற்பொருளும் முறை யானவை, முறையற்றவை என்ற இரண்டு பாகுபாட்டின் கீழ் விவரிக்கப்பெற்றன. ஆனால் அலெக்ஸாண்டிரிய அறிஞர்களாலும், அவர்கள் பின் வந்த ரோமானியர்களாலும் மிகச்சிறிய அளவிலேயே மொழியின் இயற்கை பற்றிய அறிவாராய்ச்சி வளர்ச்சி பெற்றது. செயல் மூல ஆய்வு அதன் குழந்தைப் பருவத்திலேயே இருந்தது.

## 1.2. இடைக்காலமும், மறுமலர்ச்சியும்*

இடைக்காலத்திலும் மொழியியல் அறிவு வளர்ச்சியுறவில்லை. அன்றைய நாகரிகத்திற்கும், சர்ச்சுக்கும் பொதுமொழியான லத்தீன் மொழியைக் கற்பதே முக்கியமானதாக இருந்தது. ஆனால் லத்தீன் மொழியோ இலக்கிய மொழிகளாக மலர்ந்து கொண்டிருந்த மேலும் பல உள்நாட்டு மொழிகளோ ஆய்வு நோக்கோடு பயிலப்படவில்லை.

மறுமலர்ச்சி இதில் ஒரு மாற்றத்தைக் கொணர்ந்தது. கிரீக் மொழியையும் அறிமுகப்படுத்தி இம் மறுமலர்ச்சி கல்வியின் எல்லையை விஸ்தரித்தது. மேலும் கிரீக், லத்தீன் மொழி இலக்கியங்களின் பொற்காலத்தில் வழங்கிய திருத்தமான லத்தீன் மொழியைப் பயில்வதற்கு முக்கியத்துவம் கொடுத்து இலக்கணக் கல்வியையும் வளர்ச்சிபெறச் செய்தது. இந்தக் காலக்கட்டத்தில் சிசிரோவைப் போல் லத்தீன்மொழியை எழுதுவதே நாடெங்குமிருந்த இலக்கிய, மொழி அறிஞர்களின் பேரார்வமாக இருந்தது. அடுத்து வந்த நூற்றாண்டுகளில் ஐரோப்பிய கண்டத்தின் வழக்குமொழிகளை ஆராய்வதில் அறிஞர்களின் ஆர்வம் மிகக் காண்கிறோம். மிக வேகமாக வளர்ந்து வந்த உள்நாட்டு மொழி இலக்கியங்களும், போக்குவரவு, தகவல் தொடர்பு வசதிகளில் ஏற்பட்டு வந்த வளர்ச்சியும் இதற்குக்காரணங்களாய் அமைந்தன. அச்சுக்கலை கண்டுபிடிக்கப்பட்டது மிக முக்கியமான முன்னேற்றம். இதன் காரணமாக அயல் நாட்டு மொழிகளைப் பயில்வது முன்னை விட எளிதாக இருந்தது. (கிருத்துவ வேதமான) பழையஏற்பாடு முதன்முதலில் இயற்றப்பட்ட மொழியான ஹிப்ரூ மொழியைப் பயில்வதில் கல்வியாளர்களின் நாட்டம் மிகுந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

---

* நான்காம் நூற்றாண்டிலிருந்து பதினான்காம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவில் கிறித்துவசபை ஆட்சி ஓங்கியிருந்த காலம் இடைக்காலம் எனக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து தோன்றிய மறுமலர்ச்சி ஐரோப்பிய வரலாற்று நிகழ்ச்சிகளுள் தலைசிறந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் அரசியல், சமூகம், கலை, விஞ்ஞானம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஐரோப்பியநாடுகள் அனைத்திலும் ஒரு மறுமலர்ச்சி தோன்றி பதினாறாம் நூற்றண்டுவரை நிலவியது. இதுவே மறுமலர்ச்சி இயக்கம் என அறியப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் வழங்கிய மொழிகளினின்றும் முற்றிலும் வேறுபட்ட ஒரு மொழியின் பரிச்சயம் மொழிக்கல்வியைப் பெரிதும் ஊக்குவித்தது. ஆனால் அதுவே ஒரு தவற்றிற்கு மூலகாரணமாக வும் அமைந்தது. உலக மொழிக் குடும்பங்களில் செமிட்டிக் மொழிக் குடும்பத்தின் ஸ்தானம் அன்று புரிபடாத நிலையில் இருந்தது ஹிப்ரூ சொர்க்கத்தில் பேசப்படும் தேவ மொழி எனவும், இதிலிருந்தே உலகில் மற்ற எல்ல மொழிகளும் தோன்றின எனவும் நம்பப்பட்டு வந்தது. ஆகையால் ஹிப்ரூ மொழி அறிவு ஏற்பட்டவுடன், ஹிப்ரூ மொழியிலிருந்தே ஐரோப்பிய மொழிகள் தோன்றின என்ற கருத் துக்கு ஆதாரமாக எல்லா வகையான ஒற்றுமைகளும் கற்பிதம் செய் யப்பட்டன. இரு சொற்களின் பொருளில் சிறிதளவு உறவு இருந்தா லும் அதையே ஆதாரமாகக் கொண்டு ஒலிகள் அல்லது எழுத்துக்கள் எப்படி யெல்லாம் நிலைபெறும் என்று கற்பனை செய்ய முடியுமோ அவ்வளவு கற்பனைகளும் செய்யப்பட்டன. இவ்விதம் சொற்களின் மூலத்தை ஆராய்கையில் ஹிப்ரூ மொழி வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாகவும், ஐரோப்பிய மொழிகள் இடதுபக்கத்திலிருந்து வலது பக்கமாகவும் எழுதப்படுதலே சொற்களின் எழுத்துகளின் நிலை பெயர்ச்சிக்கு காரணம் என்றும் கருதப்பட்டது. இன்று இது மிக அசா தாரணமானதாகத் தோன்றினாலும் அன்று இக்கருத்தும் ஒப்புக் கொள்ளப்பட்டது ஆயினும் மனம் போன போக்கில் செய்யப்பட்ட இந்த ஒப்புமைகள் ஏராளமான சொற்களைச் சேகரித்துத் தருவதின் மூலம் முறையான ஒரு சொல் ஆய்வுக்குப் பாதை அமைத்தன. ஆய் வாளர்கள் இவற்றிலிருந்து நிச்சயமாக உறவுச்சொற்களைக் கண்டறி யவும் இறுதியாக சிறந்ததொரு வேர்ச்சொல் ஆய்வை அமைக்கவும் இச் சொற்கள் பெரிதும் உதவிசெய்தன.

பழைய கோதானிக் (ஜெர்மானிக்) மொழி நூல்களைக் கண்டு பிடித்துப் பிரசுரித்ததும், முக்கியமாக வுல்ஃபிலாவின் பைபிள் கோதிக் மொழிபெயர்ப்பும் (இவற்றுடன் ஒப்பிடும்போது பழைய ஆங்கில (ஆங்கிலோ-சாக்ஸானிக்), பழைய ஜெர்மன், பழைய ஐஸ்லாண்டிக் நூல்கள், மதிப்பில் குறைந்தவையாக இல்லாவிட்டாலும், அளவில் குறைவாக இருந்தன). பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டு களில் இந்த மிக முக்கியமான மொழிக்கூட்டத்தின் வரலாற்று ஆய்வுக்கு வழிகோலின. ஆனால் முழுமையான அளவில் நோக்கு

கையில் அக்காலத்தில் மொழிவரலாற்றில் அறிஞர்களின் ஆர்வம் குறைவாகவே இருந்தது. மொழி அறிஞர்கள் நூற்றாண்டு நூற்றாண்டாக ஒரு மொழி வளர்ந்த வளர்ச்சியைக் காண்பதைவிட நடைமுறைவழக்கிலிருந்த மொழிகளுக்கு மிகப்பெரிய கருவூலங்கள் அமைப்பதை அதாவது அவை பற்றிய அறிவை வளர்ப்பதை அவசியமானதாகக் கருதினார்கள். இவ்விதம் மிகப்பெரும் தத்துவ அறிஞரான லெப்னிஸ், மொழி ஆய்வில் பேரார்வம் கொண்டவர், உலகப்பொதுமொழி ஒன்று காண்பதற்கான சாத்தியக்கூறினை நமக்குத் தரும் கருத்துகளைக் கூறியவர், பீட்டர் மாமன்னனை அவனுடைய பரந்த சாம்ராஜ்யத்தின் பல்வேறு மொழிகளிலிருந்து சொற்களையும், வாக்கியங்களையும் சேகரிக்கத் தூண்டினார் எனக் காண்கிறோம். லெப்னிஸ் தொடங்கிவைத்த இந்தத் தொடக்கத்தின் காரணமாகவும், இரண்டாம் கேதரின் அரசி இவ்வகை ஆய்வுகளில் காட்டிய ஆர்வத்தினாலும் அன்று தெரியவந்திருந்த எல்லா மொழி களினின்றும் மிகப் பெரிய அளவில் சேகரிக்கப்பட்ட சொற்தொகுப்பு கள் நமக்குக் கிடைக்கின்றன - பல்லஸின் 'லிங்குவரம் தொட்டியல் ஆர்பிஸ் வொகாபுலரியா கம்பரேடிவா' (1786 - 87), 'ஹெர்வாஸின் கேட்லாகோ தெலாஸ் லெங்குவாஸ் தெ லாஸ் நஸி யோன்ஸ் கொனோஸி டாஸ்', (1800 - 5), இறுதியாக எடெலங்கின் 'மித்ரிடேட்ஸ் ஆடெர் அல்கொமெய்ன் ஸ்ப்ரொஷன்குந்தெ'(1806-17) மொழிகளை சமநோக்குடன் அணுகாமை, இலக்கண ஆய்வை விட சொல்லாய்விற்கு முக்கியத்துவம், பைபிள் நூலிலிருந்தே எல்லா உதாரணங்களையும் எடுத்தாளுதல் போன்ற தவிர்க்க இயலாத குறை கள் இருப்பினும் இந் நூல்கள் அன்றைய மொழியியல் நோக்கிலும், ஆய்விலும் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தின. பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழியியல் அறிவின் தோற்றத்தில் இவற்றுக்குப் பெரும் பங்கு உண்டு. மொழிகளுக்கு இடையில் உள்ள உறவைக் குறித்து எழும் வினாக்களுக்குத் தீர்வு காண்பதில் சொற்களை விட இலக்கணமே சிறந்தது என்பதை உணர்ந்த முதல் அறிஞர்களில் ஹெர்வாஸும் ஒருவர் என்பதை நாம் மறக்க இயலாது.

இங்கு, ஒப்புமை மொழியியலின் தோற்றத்திற்கு முந்தைய நூற்றாண்டுக் காலங்களில் மொழிகளும், மொழிகளைக் கற்பித்தலும் எவ்விதக் கண்ணோட்டத்துடன் நோக்கப்பட்டன என்பதைக் காண்

பது நல்லது. லத்தீன்மொழியே முதன்மையாகக் கற்பிக்கப் பட்டது. லத்தீன்மொழி இலக்கணத்தையே முதன்மையாக பெரும்பாலும் மொழியியலாளர் பயின்றனர். இந்நிலையில் இலக்கணம் என்றால் லத்தீன் இலக்கணமே என்று பெரும்பான்மையானோர் கருதியதில் ஆச்சரியமில்லை. இளைஞர்களின் (மாணவர்களின்) கல்வியில் மிக முக்கியமானதாக இன்று நாம் கருதும் தாய்மொழி, விஞ்ஞானம், வரலாறு போன்ற பல கல்வித்துறைகளையும் புறக்கணித்து லத்தீன் இலக்கணமே முதன்மையாகக் கற்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் உயர்நிலைப் பள்ளியைக் குறிக்கும் பழமையான பெயர் 'இலக்கணப் பள்ளி'; டென் மார்க்கில் 'லத்தீன் பள்ளி'. பொதுவாக மொழிக்கல்வி யில் லத்தீன் இலக்கணத்தின் செல்வாக்கை நாம் இங்கு காண்கி றோம். ஒரு வகையில் அல்ல, பலவகையிலும் அது மொழிக் கல்வி யில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

லத்தீன் மொழி திரிபுச் சொற்கள் செறிந்த மொழி. ஒரு மொழி யில் காணப்படும் திரிபுகள் லத்தீன் மொழியில் காணப்படும் திரிபுக் கூறுகளுக்கு இணையானவையாக இல்லாவிடினும் அம்மொழியை விவரிக்கும்போது லத்தீன் மொழி திரிபுக்கூறுகளையே அந்த மொழிக்கும் இலக்கணிகள் பயன்படுத்தினர். செயப்படுபொருள் வேற்றுமை, குறிவேற்றுமை, நீக்கவேற்றுமை ஆகிய வேற்றுமைகளின் பெயர்த் திரிபுகளுக்கு தனிச் சொற்கள் பல ஆங்கில, டேனிஷ் இலக்கணங்களில் இல்லாவிடினும் தனிச் சொற்கள் தரப்பட்டன. விரிவான லத்தீன் காலப் பிரிவுகளின் அடிப்படையில் எல்லா மொழி களிலும் வேற்றுமையின்றி ஒரே வகையான செய்யப்பட்டன. இவ் வகை அணுகு முறையின் காரணமாக பல மொழிகளின் அமைப்புகள் சீர்குலைக்கப்பட்டன. உண்மையில் விதிவிலக்காகக் கருதப்பட வேண்டாத சொற்கள் லத்தீன் மொழி அடிப்படையில் விதிவிலக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. உண்மையில் விதிவிலக்கான சொற்கள் இருப்பினும் லத்தீன் மொழியில் அவை அவ்விதம் இல்லாவிடில் அவை புறக்கணிக்கப்பட்டன. லத்தீன் இலக்கணத்தின் அடிப்படையில் மற்ற இலக்கணங்களையும் அளவிடும் இந்தத் துரதிருஷ்டகரமான போக்கினால் விளைந்த தீங்கின் சுவடு இன்னும் முற்றிலுமாக மறையவில்லை. இன்றும் கூட லத்தீன் தாக்கம் சிறிதும் அற்ற ஒரு இலக்கணத்தைக் கூட நாம் காண்பது கடினம்.

லத்தீன் முக்கியமாக எழுத்து மொழியாகவே கற்பிக்கப்பட்டது. (நாட்டுக்கு நாடு முற்றிலும் வேறுபட்ட உச்சரிப்புக்ளோடு லத்தீன் மொழி பேசப்பட்டுவந்தது. இதன் விளைவாக பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பிரஞ்சு அறிஞர்களும் ஆங்கில அறிஞர்களும் ஒருவர் மற்றொருவர் பேசும் பேச்சுமொழி லத்தினைப் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று.) லத்தீன் எழுத்துமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்ததன் காரணமாக ஒலிகளுக்குப் பதில் எழுத்துக்கள் முக்கிய இடம் பெற்றன. மொழிகளில் முதல் இடம் வகிப்பது பேச்சே, எழுத்து இரண்டாம் இடமே வகிக்கிறது என்ற உண்மையும், மொழியின் ஜீவன் வாயினால் பேசப்பட்டு செவிப் புலனால் கிரகிக்கப்படுவதிலேயே உள்ளது, எழுதுகோலினால் எழுதப்பட்டு கண்களினால் பெறப்படுவதில் அன்று என்பதும் புறக்கணிக்கப்பட்டது. இதனால் ஒருமொழியின் சாரத்தைப் புரிந்துகொள்வதும், மொழியியல் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டன. பதினாறாம் நூற்றாண்டில் பலவகை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இன்றைய ஒலி ஆய்வு தோன்றும் வரை பேச்சு மொழியின் முக்கியத்துவத்தை மொழியியலார்கள் முழுதும் உணரவில்லை. இன்றும் கூட பலமொழிக் கல்வியாளர்கள் எழுத்துக்களையும், குறியீடுகளையுமே நினைப்பவர்களாகவும், ஒலிகளைக் குறித்து நினையாதவர்களாகவும் இருக்கிறார்கள். தங்கள் எழுதுகோலிலிருந்து உருண்டோடிவரும் சொற்கள் அனைத்தையும் உச்சரிக்கவேண்டி வரின் அவர்களே திகைக்க நேரும். 1877-இல் ஸ்வீட் தன்னுடைய 'ஹேண்ட்புக் ஆஃப் ஃபொனட்டிக்ஸ்' என்ற புத்தகத்திற்குத் தந்துள்ள முன்னுரையில் சில உண்மைகள் பொதிந்துள்ளதைக் காணலாம். "ஆய்வாளரின் ஒலியியல் பயிற்சிக் குறைவு காரணமாக மிக முக்கியமான சில மொழிவிதிகள் புறக்கணிக்கப்பட்டும் தவறுதலாக வளர்க்கப்பட்டும் இருப்பதை பல இடங்களில் காணலாம். ஷ்லீஷர் லிதுவானியன் உச்சரிப்புக்களைக் கவனிக்கத் தவறியதும், குர்ஷத் அவற்றைச் சுட்டிக் காட்டியும் உணராததும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு". பல நூற்றாண்டு காலமாக மொழியியல் பயிற்சிக்கு லத்தீன் மொழியே அடிப்படையாக இருந்ததே ஐரோப்பிய மொழியியல் வரலாற்றில் செவி-மொழி ஆய்வை விட கண்-மொழி ஆய்விற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதற்குப் பெரிதும் காரணமாய் அமைந்தது.

நாம் அடுத்து என் கருத்தில் மிக முக்கியமானதாகத் தோன்றுகிற ஒரு விஷயத்திற்கு வருகிறோம். ஏனெனில் இவ் விஷயம் மொழியும் இலக்கணமும் நோக்கப்படும், கற்பிக்கப்படும் முறைகளில் இன்றுவரை நீடித்திருக்கும் ஒரு தாக்கத்தோடு தொடர்புடையது. இடைக்காலத்திலும், பின்னரும் லத்தீன்மொழி கற்பிக்கப்பட்டதின் நோக்கம் என்ன? நிச்சயமாக அறிவதில் உள்ள ஆனந்தத்தைப் பெறுவதும் அறிவின் எல்லைப் பரப்பை விஸ்தரிப்பதும், அறிவுக்காகவே அறிவைப் பெறுவதும் அல்ல. இவ்வகை நோக்கங்களுடன் இங்கும் அங்கும் சிலர் வழக்கொழிந்த ஆப்பிரிக்க, அமெரிக்கச் சொற்றொடர்களை ஆராய்ந்து கொண்டிருந்தனர். ஆனால் லத்தீன் மொழி இவ்வகை லட்சியங்களோடு கற்கப்படவுமில்லை; கற்பிக்கப் படவுமில்லை. பழமையான சிறப்பு மிக்க இலக்கியங்களைக் கற்றறியும் நோக்குடனோ, லத்தீன்மொழியில் உள்ள மதச்சம்பந்தமான நூல்களைக் கற்கும் நோக்குடனோ கூட லத்தீன்மொழி கற்பிக்கப் படவில்லை. கற்றவர்களிடையே தொடர்புமொழியாக லத்தீன் விளங்கியதே லத்தீன்மொழிக் கல்விக்கு முக்கிய காரணம். அரசியலிலோ, சர்ச்சிலோ, மிகச் சிறிய இடம்பெற விரும்பினும் லத்தீன் மொழியைப் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்வது அவசியமாக இருந்தது. இதன் விளைவாக, பண்டைய ரோமானியர் மொழியில் சொற்களில் திரிபு ஏற்படும் வகைகளையும், சொற்கள் பயன் படுத்தப்படும் வகைகளையும் அறிவது இலக்கணம் என்பதற்கு மாறாக லத்தீன்மொழியை பிழையின்றி எழுத விரும்பும் ஒருவன் சொற்திரிபுகளையும் சொற்களையும் புயன்படுத்தும் கலையே இலக்கணம் என்று ஆயிற்று. எந்தத் தவறுகளைத் தவிர்க்கவேண்டும் என்றே பள்ளிகளில் கற்றுக்கொடுக்கப்பட்டது. இலக்கணம் என்பது ஆய்ந்தறிந்த விஷயங்களின் தொகுப்பு என்பதற்கு மாறாக மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பு என்று கருதப்பட்டது. சில சமயங்களில் இவ்விதிகள் மனப்பாடம் செய்ய வேண்டிய சூத்திரங்களாகத் தரப்பட்டன. இந்நிலையில் இலக்கணம் விவரணமுறையில் (descriptive) அமையாது விதிமுறையில் (prescriptive) அமைந்ததாக விளங்கியது.

பிழையின்றி பேசும், எழுதும் கலையே இலக்கணம் என்பது இலக்கணத்திற்கு அன்றைய வரைவிலக்கணமாக இருந்தது. பிழை

யற்ற மொழிநடையைப் (அதாவது சிறந்த இலக்கணம்) பெறுவதும் பிழையான மொழிநடையைத் (அதாவது மோசமான இலக்கணம் தவிர்ப்பதுமே இலக்கணம் பயில்வதின் இரு குறிக்கோள்கள் என ஜே. ஸி. ஷாலிகர் குறிப்பிடுகிறார். இப்போது 'கலை' 'பிழையின்மை' என்ற இரு அம்சங்ளையும் வலியுறுத்தும் நோக்கோடு லத்தீனோடு கூட மற்றமொழிகளும் அணுகப்பட்டன.

சொற்களும் மேலே கண்ட நோக்கிலேயே அணுகப்பட்டன. பிரெஞ்சு, இத்தாலி மொழிக்கழகங்கள் வெளியிட்ட சொல் அகராதிகளில் இதனைத் தெளிவாகக் காணலாம். இன்று சொல் அகராதி ஆசிரியர்கள் எடுத்துக்கொண்ட மொழியில் கிடைக்கும் எல்லாச் சொற்களையும் தொகுப்பதைக் காண்கிறோம். இவ்விதமின்றி மிகச் சிறந்த எழுத்தாளர்கள் உயரிய இலக்கியங்களில் எடுத்தாளத் தக்க சொற்களை மட்டும் தேர்ந்தெடுத்து இச்சொல் அகராதிகள் தொகுக்கப்பட்டன. சொல் அகராதிகள் சாதாரண வழக்கில் உள்ள சொற்களின் விவரணநூல் என்பதற்குப் பதிலாக சிறந்த சொற்களைத் தெளிவு செய்து உபயோகிக்கப் பயன்படும் விதிமுறை நூலாகவே கருதப்பட்டது.

நிர்ணயித்த ஒரு விதிமுறையின் படியே மொழிகளை அணுகி ஆராய்வதில் தீங்குகள் பல உள்ளன மொழிவளர்ச்சியின் வரலாறும், மொழியியல் மனோதத்துவமும் அறிந்திருந்தால் மட்டுமே இவற்றைத் தவிர்க்க இயலும் இல்லாவிடில் எது பிழை, எது சரி என்று குறுகிய எல்லை கோடுகளுக்குள் நின்று நிர்ணயிக்கநேரும். பலசமயங்களில் பேச்சுவழக்கில் இரண்டு அல்லது அதிகமான வடிவங்கள் இருப்பினும் ஒரு வடிவமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது; மற்றவை புறக்கணிக்கப்படுகின்றன. எந்த வடிவத்தை சிறந்ததாகத் தெரிவு செய்வது என்ற வினாதான் இங்கு எழுகிறது. இதுவும் அறிவியல் நோக்கில் தெரிவு செய்யப்படாமல் தனிப்பட்ட மனிதர்களின் விருப்பத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறது. இவ்விதம் பல சமயங்களில் ஒரு சொல் ஒரு குறுகிய கண்ணோட்டத்துடன் நடைமுறை இலக்கணம் அல்லது சொல்லகராதியிலுள்ள சொல்லைக் காட்டிலும் உயர்வானது என்று விதிக்கப்பட்டது. வேறு சில சமயங்களில் இரண்டு வடிவங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் இரண்டிற்கு

மிடையே வேறுபாட்டுக்கு புதிய இலக்கண விதி வகுப்பார்; இவற்றை மிகுந்த சிரமத்துடன் பள்ளிமாணவர்கள் கற்க நேரும். இவ்வகையான வேற்றுமைகளைப் பிரெஞ்சு இலக்கணிகள் மிக அதிகமாக செய்தனர். மொழியை ஒழுங்குபடுத்தி அமைக்க அகாடெமி எதும் அமைக்கப் பட்டிராத இங்கிலாந்தில் இலக்கணிகளின் மொழித்தலையீடு குறை வாகவே இருந்தது. இங்கிலாந்திலும் பள்ளிகளிலும் செய்திப் பத்திரிகை அலுவலகங்களிலும் குறுகிய கண்ணோட்டத்துடனும் அவசரமாகவும் செய்யப்பட்ட சில விதிகள் அவ்வப்போது திணிக்கப் படாமல் இல்லை. இன்றும் கூட 'காமன் ஃபால்ட்ஸ் இன் ரைட்டிங் அண்டு ஸ்பீக்கிங் இங்கிலீஷ் (பேச்சிலும் எழுத்திலும் எழும் பொது வான பிழைகள்) போன்ற நூல்கள் ஒப்புமை வரலாற்று மொழியியல் கண்ட உண்மைகளை கடைபிடிக்கவில்லை என்ற நிலையில் பதினேழு பதினெட்டாம் நூற்றண்டு இலக்கணிகள் திருத்தமான பேச்சை நிர்ணயிப்பதில் குறுகிய கண்ணோட்டங்களையே கொண் டிருந்தனர் என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

லத்தீன்மொழி விதிகளுக்கு மாறான விதிகளைப் பின்பற்றும் மொழிகளுக்கும் லத்தீன்மொழி விதிகளின்படி தீர்வு கண்டது தீங்காகவே முடிந்தது. லத்தீன் இலக்கணத்தைக் கற்பது தருக்க நூலைப் பயில்வதை ஒத்திருந்தது. இதன் விளைவாகத் திருத்தமான இலக்கணத்தை அமைக்கும் போது பல சமயங்களில் தருக்க விதி களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. லத்தீன் வழக்கை ஒத்திருக் கிறதா? இல்லையா? என்ற அடிப்படையில் மொழியியல் தருக்க விதியை நிர்ணயிக்கக்கூட இலக்கணிகள் முயன்றனர். இத்தகைய மனப்போக்கும், மனித இனத்தின் விசேஷமாக ஆசிரிய இனத்தின் தவிர்க்க இயலாத பழமை வாதமும் இயற்கையான பேச்சு மொழி வளர்ச்சியில் தடை செய்வனவாகும்.

# தமிழில் வேற்றுமைகள்*

**ஆதித்தன்**
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

இக்கட்டுரையின் முதற்பகுதி தொல்காப்பியர் தரும் எட்டு வேற்றுமைகளையும் மொழியியலார் குறிப்பிடும் வேற்றுமை இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனை செய்கின்றது. இரண்டாவது பகுதி இக்காலத் தமிழிலுள்ள வேற்றுமைகளையும், மூன்றாவது பகுதி வேற்றுமைகளின் எண்ணிக்கை வளர்ந்து வந்துள்ள நிலையினையும் நான்காவது பகுதி வேற்றுமைகளின் முந்தைய நிலையினையும் சுட்ட விழைகின்றன.

தொல்காப்பியர் வேற்றுமை எட்டெனக் குறிக்கின்றார். இவ் வேற்றுமைகளை இவர் வடிவ அடிப்படையிலும், எண் அடிப்படையிலும் பெயரிட்டழைக்கின்றார். (தொ. சொ. 63, 64, 65, 70, 107; 66, 64, 119, 72, 74, 78, 80, 82; 72, 75, 78, 80, 82). எழுவாய் வேற்றுமை, விளி வேற்றுமை ஆகிய இரண்டையும் இவர் வடிவ

* இக்கட்டுரை 1977 - ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழக வட்டக் கருத்தரங்கில் படிக்கப்பட்டது.

அடிப்படையில் மட்டுமன்றி பயன் வகையிலும் பெயர் சுட்டுகின்றார் (தொ. சொ. 63, 115). வேற்றுமை உருபுகளாக ஆறனைக் கூறும் தொல்காப்பியர் இவ்வுருபுகள் பெயருக்குப் பின்னிடத்தனவாக அமையும் என்றும், அவ்வாறு பெயரொடு இணையுங்கால் இவற்றிடையே சாரியை வரப்பெறுதலும் உண்டு என்பதனையும் கூறுகின்றார்.

தொல்காப்பியர் வேற்றுமைக்கு வெளிப்படையாக இலக்கணம் கூறவில்லை. எனினும் அவர் வேற்றுமைகளுக்குரிய பண்புகளாகச் சுட்டுகின்ற அனைத்தினின்றும் வேற்றுமையின் இலக்கணத்தினைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. தொல்காப்பியர் தரும் செய்தியினை அடிப்படையாகக் கொண்டு இக்கால மொழியியலார் பெரும்பான்மையோர் பின்வருமாறு வேற்றுமை இலக்கணத்தினைக் குறிக்கின்றனர்.

“தொடரில் ஒரு பெயர்ச் சொல்லுக்கும் ஒரு வினைச் சொல்லுக்குமிடையேயுள்ள பொருட் தொடர்பாகிய இலக்கண உறவே வேற்றுமை எனப்படும். இவ்வுறவு சில ஒட்டுக்களால் (வேற்றுமை உருபு) வெளிப்படுத்திக் காட்டப் பெறுதலும் உண்டு”.

ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ள வேற்றுமை இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியர் கூறும் எட்டு வேற்றுமைகளையும் ஆய்ந்து காணலாம்.

**எழுவாய் வேற்றுமை**

பெயருக்கும் அது கொண்டு முடியும் வினைக்குமிடையே காணப்படும் உறவு எழுவாய் பயனிலை உறவாக அமையும் நிலையில் அது எழுவாய் வேற்றுமை எனக் குறிக்கப் பெறுகின்றது. ‘எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே’ (தொ. சொ. 66) என்று குறிப்பிட்டு எழுவாய் வேற்றுமையின் வடிவம் பெயராய் நிற்றலே என்பதனைத் தெரிவிக்கின்றார் தொல்காப்பியர். இதனைத் தொடர்ந்து இவ்வேற்றுமையினது பயனிலைப்பாடு தோன்றும் நிலையினை விளக்கும் வாயிலாக இதனது புறநிலை வழக்குகளை இவர் சுட்டுகின்றார். (தொ. சொ. 67).

உருபின்மை காரணத்தான் எழுவாய் வேற்றுமை இல்லை என்பாரும் உண்டு. வேற்றுமை உறவு நிலையினை வெளிப்படுத்திக்

காட்டும் வடிவுதான் வேற்றுமை உருபேயொழிய உருபுதான் வேற்றுமை எனவும் உருபின்மையான் வேற்றுமை அன்று என்பதும் ஏற்கத்தக்கதன்று. எழுவாய் வேற்றுமை ஒரு வேற்றுமைதான் என்பதில் எத்தகைய கருத்து வேறுபாடுகளுக்கும் இடமில்லை. ஈண்டு வினைக்கும் பெயருக்கும் இடையே காணப்பெறும் உறவு எழுவாய் பயனிலை உறவாக அமைந்திருக்க இவ்வுறவினை வெளிப்படுத்திக் காட்டும் ஒட்டுக்கள் இல்லை.[1]

### ஐயெனப் பெயரிய வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை எனச் சுட்டப் பெறும் இவ்வேற்றுமையினது உருபு 'ஐ' எனவும் அது வினை, வினைக்குறிப்பு அடிப்படையில் தோன்றுமெனவும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (தொ. சொ. 79). மேலும் இவர் உயர்திணையில் வேற்றுமை உருபு வெளிப்பட்டு வருமெனக் குறிக்கின்றார் (தொ. சொ. 155).

உயர்திணையில் வேற்றுமை உருபு வெளிப்பட்டு வாரா நிலையினைச் சங்ககால இலக்கியங்களிலும் பதினெண்கீழ்க்கணக்கின் கண்ணும் காண முடிகின்றது.

இரண்டாம் வேற்றுமையில் பெயருக்கும் வினைக்குமிடையே காணப்படும் உறவு செயப்படுபொருள் பயனிலை உறவாக அமைந்து காணப்படுகின்றது. இவ்வுறவு 'ஐ' யெனும் ஒட்டால் வெளிக்காட்டப் பெறுகின்றது.

### ஒடுவெனப் பெயரிய வேற்றுமை

தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமை உருபு 'ஒடு' எனவும் அது வினை முதல், கருவி ஆகியவற்றினடிப்படையில் தோன்றுமென்றும் குறிப்பிடுகின்றார் (தொ. சொ. 74). இவர் வேற்றுமை மயங்கியலில் குறிப்பிடும் 'ஆன்' உருபும் (தொ. சொ. 97. 108) மூன்றாம் வேற்றுமை உருபாக கொள்ளுதற்குரியது. ஈண்டு வினைக்கும் பெயருக்குமிடையேயுள்ள உறவு கருவிப் பொருண்மையதாக அமைகின்றது.

சங்க கால இலக்கியங்களில் 'ஒடு' உருபு உடனிகழ்ச்சி, கருவி ஆகிய இருபொருண்மையினையும் குறிக்கப் பயன்படுத்தப் பெற்றுள்

ஏன. 'ஒடு' உருபு தொல்காப்பியர் காலத்தில் உடனிகழ்ச்சி, கருவி ஆகிய இருபொருண்மையினையும் உணர்த்தி வந்தமையான் இவர் உருபினை அடிப்படையாகக் கொண்டு இருவேறு பொருண்மையினை ஒரே வேற்றுமைக்குள் அடக்கிவிட்டார் எனலாம். தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமையில் புற நிலை வழக்குகளாகச் சுட்டுவதில் பெரும்பான்மையும் உடனிகழ்ச்சிப் பொருண்மையினதாகவே அமைகின்றன.[2]

## குவ்வெனப் பெயரிய வேற்றுமை

தொல்காப்பியர் நான்காம் வேற்றுமையின் உருபு 'கு' எனவும் அது யாதானும் ஒரு பொருளாயினும் அதனை ஏற்று நிற்குமெனவும் சுட்டுகின்றார் (தொ. சொ. 76). மேலும் இவர் இவ்வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளாக பத்தனைக் கூறுகின்றார் (தொ. சொ. 77), செய்யுள் வழக்கில் குகரத்துடன் அகரம் இணைதலும் உண்டு (தொ. சொ. 104. 110).

நான்காம் வேற்றுமையில் பெயருக்கும் வினைக்குமிடையே காணப்படும் உறவு கொடைப் பொருண்மையினதாய் அமைகின்றது. தொல்காப்பியர் குறிப்பிடும் இவ்வேற்றுமைக்குரிய பொருட்பாகுபாடுகள் பத்தனையும் சிறப்பாக நோக்கு, கொடை, எல்லை, முறை (இசரயேல், மோ., 1976 ; பக். 112) என்னும் நான்கனுக்குள் அடக்கி விடலாம். இன்னமும் தொல்காப்பியர் கூறும் நான்காம் பொருட் பாகுபாட்டிற்கு உரையாசிரியர்கள் தரும் சில சான்றுகள் பிற வேற்றுமைப் பொருண்மையினதாக (அருள்ராஜ், ச., 1978 : பக். 14 – 24) அமைந்து காணப்படுகின்றன.[3]

## இன்னெனப் பெயரிய வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமையின் உருபு 'இன்' எனவும் 'அது இதனின் இற்று இது' என்னும் பொருண்மையினை உணர்த்துமெனவும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (தொ.சொ. 78). இது பெரும்பான்மையும் ஒப்புப் பொருண்மையில் செயலாற்றுகின்றது. உரையாசிரியர்கள் 'நீக்கம்', 'எல்லை'. 'ஏது' ஆகிய பிறவற்றையும் இவ்வேற்றுமைப் பொருண்மையினவாகக் குறிக்கின்றனர். உரையாசிரியர் கூற்றுக் கேற்ப தொல்காப்பியருடைய ஐந்தாம் வேற்றுமைப் பொருட்பாகு

பாட்டை விளக்கும் நூற்பா (தொ. சொ. 79) அமைந்து காணப்படு கின்றது.

இந்நூற்பாவில் சுட்டப்பெறும் இருபத்தேழு பொருண்மையில் இருபத்தினான்கு ஒப்புப் பொருண்மையில் அமைகின்றன. ஏனைய மூன்றும் முறையே 'எல்லை', நீக்கம்' 'ஏது' ஆகிய பொருண்மையில் அமைகின்றன.

சங்க கால இலக்கியங்களில் 'இன்' உருபு பெரும்பான்மையும் ஒப்புப் பொருண்மையில்தான் கையாளப்பட்டுள்ளது. தொல்காப் பியரும் 'இதனது இற்று இது' என இதற்குப் பொருள் தருவதால் ஐந்தாம் வேற்றுமையினை இவர் ஒப்புப் பொருள் வேற்றுமையாகத் தான் கருதியுள்ளார் எனலாம்.

தொல்காப்பிய மொழியில் 'இன்' உருபு உவமப்பொரு (ஐப் போல) உறழ்பொரு (ஐ விட) என்ற இரு நிலையிலும் கையாளப்பட்டு வந்திருக்கின்றது. 'இன்' உருபு உணர்த்தும் பொருண்மைக்கு நிகரான 'ஐ(ப்) போல 'அல்லது 'ஐ விட' என்பதனை நாம் ஐந்தாம் வேற்றுமையாகக் கருதாமல் இரண்டாம் வேற்றுமையில்தானே சேர்த் துக் கொள்கின்றோம். சங்ககால இலக்கியங்களிலும் 'இன்' உருபு உணர்த்தும் பொருண்மைக்கு நிகராக 'ஐ(ப்) போல' எனும் வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளமையினை அறிய முடிகின்றது.

இந்நிலையில் 'இன்' உருபு உணர்த்தும் பொருண்மையினை ஏன் நாம் தொல்காப்பியர் கூறும் இரண்டாம் வேற்றுமையின் புறநிலை வழக்கில் கூறப்பெறும் 'ஒப்பு' எனும் பிரிவில் சேர்க்கக் கூடாது? இதனை வேறு வகையாகவும் அமைத்துக் காட்டலாம்.

காக்கை—இன் கரிது களம்பழம்
காக்கை—ஐ விடக் கரிது களம் பழம்.

'காக்கையின் கரிது களம் பழம்' என்ற தொடரில் இரண்டாம் வேற் றுமை உருபு தொக்கு வருகின்றதெனவும் 'இன்' தனித்து வழங்கா உவம உருபு எனவும் கருதலாம் (ஆதித்தன், ஏ., 1978: பக்.17-19). 'போல', 'விட'என்னும் உவம உருபுகளைப் போன்று 'இன்' என்னும்

வடிவமும் தொல்காப்பியர் காலத்தில் வழங்கி வந்துள்ளது என்றும், தனித்து வழங்கா நிலையில் இதனை ஒரு வேற்றுமையாகத் தொல் காப்பியர் கருதிவிட்டார் என்றும் கொள்வதே ஏற்புடையதாக அமை கின்றது.

இனி உரையாசிரியர்கள் குறிப்பிடும் ஏனைய மூன்று பொருண் மையினையும் காணலாம்.

நீக்கம்:

நின்னின் விடா நிழற் போல (கலித்தொகை: 61)
நாரை காலை (இல்) இருந்து மாலை சேர்க்கும்
(ஐங்குறுநூறு: 157)

எல்லை

குமரியின் தெற்கு (புறநானூறு: 6)

'இல்லிருந்து' என்னும் பொருண்மையினதாக வரும் 'நீக்கம்' 'எல்லை' ஆகிய இரண்டனையும் ஏழாம் வேற்றுமையாகவோ அன்றி ஏழாம் வேற்றுமையின் ஒரு பிரிவினதாகவோ (ஆதித்தன், ஏ., 1979:பக் 18) ஏன் கருதுதல் கூடாது?

ஏது

அருவிடரோ சிறுநெறி ஏறலின் வருந்தி (புறநானூறு: 135)

இத்தொடரில் 'இன்' உருபு 'ஏறுதல்' என்னும் தொழிற்பெயரோடு இணைந்து 'ஏறுதலால்' என்னும் ஏதுப்பொருண்மையினைச் சுட்டு கின்றது.

ஏதுப் பொருண்மையில் வரும் 'இன்'னினை மூன்றாம் வேற்று மை 'அதனின் ஆதல்' என்ற பொருண்மையில் சேர்த்துக் கொள்ள முடியும் (ஆதித்தன், ஏ., 1979: பக்.18).

எனவே தொல்காப்பியர் தனித்து வழங்கா வடிவமாகிய 'இன்' என்பதனை அடியொற்றியே ஐந்தாம் வேற்றுமை என்று தனியொரு பாகுபாடு அமைத்து விட்டார் எனக் கருதுதல் ஏற்புடைத்து.

**அதுவெனப் பெயரிய வேற்றுமை**

ஆறாம் வேற்றுமையின் உருபு 'அது' எனவும் அது 'தன்னினும் பிறிதினும் இதனது' என்னும் கிழமையில் தோன்றும் எனவும் தொல் காப்பியர் குறிக்கின்றார் (தொ. சொ. 78) 'அ' கரத்தையும் உருபாகக் கொள்வர் உரையாசிரியர்.

எல்லா வேற்றுமைகளும் பெயர் வினை ஆகியவற்றிடையேயுள்ள உறவு நிலையினைச் சுட்டி நிற்க ஆறாம் வேற்றுமை மட்டும் பெயர் களுக்கிடையேயுள்ள உறவினைச் சுட்டி நிற்கின்றது. இப்பண்பு வேற்றுமை இலக்கணத்தினின்றும் முரண்பட்டுக் காணப்படுகின்றது. இம் முரண்பட்ட நிலையில் இதனைத் தனியொரு வேற்றுமையன்று எனக்கொண்டால் ஆறாம் வேற்றுமையுருபுகளுக்கு விளக்கம் தந்தாதல் வேண்டும்.

ஆறாம் வேற்றுமையுருபுகளாகக் கருதப்படுபவை அனைத்தும் ஏனைச் சில வேற்றுமை உறவு நிலையில் வரும் பயனிலைகளின் எச்சங்களாகவே காணப்படுகின்றன (ஆதித்தன்.ஏ., 1980 : ப.46).

கோட்ட களிறு > களிறு கோட்டை உடையது

நெடும் பொறை மிசைய கொன்றை > கொன்றை நெடும் பொறை மிசையிலுள்ளது

அரசனது நாடு > 1. நாடு அரசனை உடையது

2. நாடு அரசனுக்கு உரியது

இக்காலத் தமிழில் 'அ' கரமும் 'அது' வும் பிற பெயர் வடிவங் களோடு இணைந்து செயல்படுகின்றன. மற்றொரு சொல்லுருபான 'உடைய' என்பது தனித்து வழங்குகின்றது. தமிழில் ஆறாம் வேற் றுமை வேற்றுமை இலக்கணத்திற்குப் பொருந்தி வருதல் இல்லை என்பது வெளிப்படை. அது போன்று ஆறாம் வேற்றுமை உருபு களாகக் கருதப்படுபவை அனைத்தும் வேறு சில வேற்றுமை உறவு நிலையில் வரும் பயனிலைகளின் எச்சங்கள் என்பதும் தெளிவு[5].

**கண்ணென் வேற்றுமை**

தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமையின் உருபு 'கண்' எனவும் அது வினைசெய் இடத்தின், நிலத்தின், காலத்தின் அனைவகைக் குறிப்பில் தோன்றும் எனவும் குறிக்கின்றார்(தொ,சொ.81). இதனை அடுத்து இவர் வேற்றுமை உருபின் பாலவைகளாகப் பத்தொன்பதனைக் குறிப்பிடுவார் (தொ.சொ.82).

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இவற்றை வேற்றுமை உருபெனக் குறிப்பர் (தொ.சொ.77.83). நன்னூலார் இத்தகு உருபுகளை இடப் பொருளுருபுகள் என்பர் (நன்னூல்.302). கல்லாடனார் இவற்றைப் பெயர்களாகவும் வேற்றுமை உருபுகளாகவும் செயலாற்றும் வடிவங்கள் எனக் குறிப்பிடுவார் (தொ.சொ.83).

பெயர் வடிவங்கள் வேற்றுமை உருபாக செயலாற்றுதல் உண்டு. ஈண்டுத் தொல்காப்பியர் (குறிப்பிடுவது) ஏழாம் வேற்றுமையின் பல்வேறுபட்ட பொருள் வழக்குகளை விளக்க பத்தொன்பது சொற்களைக் கொடுத்துள்ளார் (மோ. இசரயேல், 1979. பக் 117).

**விளி வேற்றுமை**

தொல்காப்பியர் இலக்கண மரபில் இடம் பெற்ற ஏழு வேற்றுமைகளோடு விளி வேற்றுமையினையும் சேர்த்து வேற்றுமை எட்டெனக் குறிக்கின்றார் (தொ.சொ.62.)

விளி வேற்றுமை உண்டென்றும் இல்லென்றும் இயம்புகின்ற இரு வேறு இலக்கண அறிஞர் குழு உண்டு. பெயருக்கும் வினைக்கும் இடையே காணப்படும் இலக்கண உறவே வேற்றுமை எனில் பெயரின் திரிபாம் விளியினை ஒரு வேற்றுமையாகக் கருதுதல் ஏற்புடைத்தன்று.

தொல்காப்பியச் செய்தியினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பெற்ற வேற்றுமை இலக்கணத்தினைத் தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டு வேற்றுமைகளோடு பொருத்திக் காணுங்கால் ஆறாம் வேற்றுமையையும் எட்டாம் வேற்றும்மையயுப் வேற்றுமை எனக் கருதுதல் இயலாது. இன்னமும் ஐந்தாம் வேற்றுமையில் கூறப் பெறும் பொருட் பாகுபாட்டினை மூன்றாம் வேற்றுமையிலும் (ஏது)

ஏழாம் வேற்றுமையிலும் (நீக்கம், எல்லை) சேர்த்துக்கொள்ள முடியும். ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருண்மையில் செயலாற்றும் 'இன்'உருபினை உவம உருபாகக் கருதுதல் சிறப்புடைத்து.

## II

### இக்காலத் தமிழில் வேற்றுமைகள்

இக்கால மொழியியல் அறிஞர்கள் தமிழ் மொழியில் காணப் பெறும் வேற்றுமைகளாகக் குறிப்பனவற்றை ஈண்டுத் தொகுத்துக் கொடுக்கப்படுகின்றது.

| வேற்றுமைகள் | | | சான்றுகள் |
|---|---|---|---|
| 1. | எழுவாய் | — Nominative | கண்ணன் |
| 2. | விளி | — Vocative | கண்ணா |
| 3. | செயப்படுபொருள் | — Accusative | முருகன் - ஐ |
| 4. | திசை | — Directive | வீட்ட-ஐ நோக்கி |
| 5. | விளக்கம் | — Descriptive | சேகர்-ஐப் பற்றி |
| 6. | ஒப்புமை | — Comparative | அவள் -ஐப் போல |
| 7. | உடனிகழ்ச்சி | — Sociative | சீதா-ஒடு |
| 8. | கருவி | — Instrumental | கத்தி-ஆல் |
| 9. | ஏது | — Causative | ஏறுதல்-ஆல் |
| 10. | கொடை | — Dative | கரும்பு-இன்-கு |
| 11. | காரணப் பொருட்டு | — Purposive | வாழ்தல் பொருட்டு |
| 12. | நீக்கம் | — Ablative/elative | வீட்ட-இல் இருந்து |
| 13. | உடைமை | — Genitive | புலி-இன்-அது |
| 14. | இடம் | — Locative | இல்-இன்-கண் |
| 15. | புறம் | — Sublative | வீட்ட்-இன்-மேல் |
| 16. | அகம் | — Illative | வீட்ட்-இன்-உள் |
| 17. | நிலை | — Stative | கோபம்-ஆக |
| 18. | பங்கீடு | — Distributive | வீடு-தொறும் |
| 19. | எல்லை | — Terminative | வீடு-வரை |
| 20. | திரிபு | — Translative | மனிதன்-ஆக |
| 21. | வாயில் | — Mediative | கீதா-மூலமாக |

ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ள வேற்றுமைகள் அனைத்தையும் கீழ்க்காணும் ஆறு வேற்றுமைக்குள் அடக்கிவிட முடியும்.

1. எழுவாய் { 1. எழுவாய்
   2. விளி

2. செயப்படு பொருள் { 3. செயப்படு பொருள்
   4. திசை
   5. விளக்கம்
   6. ஒப்புமை

3. உடனிழ்ச்சி 7. உடனிகழ்ச்சி

4, கருவி { 8. கருவி
   9. ஏது
   10. வாயில்

5. கொடை { 11. கொடை
   12. காரணப் பொருட்டு

6. இடம் { 13. இடம்
   14. நீக்கம்
   15. புறம்
   16. அகம்
   17. நிலை
   18. எல்லை

மொழியியல் அறிஞர்களால் சுட்டப்பெறும் 21 வேற்றுமைகளில் ஆறாம் வேற்றுமை வேற்றுமை இலக்கணத்திற்குப் பொருந்தி வாராமையின் அதனை ஒரு வேற்றுமையாகக் கருதுதல் இயலாது. ஐந்தாம் வேற்றுமைப் பொருண்மையினை மூன்று, ஏழு ஆகிய இரு வேற்றுமைகளது பொருண்மைகளோடு சேர்த்துக் கொள்ள முடியும்.

திரிபு வேற்றுமை என்பது தனியொரு வேற்றுமையா என்பது ஆய்வுக்குரிய ஒன்று.

'மனிதனாக மாறினான்'

இத்தொடரில் மாற்றம் அல்லது திரிபினைக் காட்டுவது 'மாறினான்' என்ற வினையே அன்றி 'ஆக' என்னும் உருபு அன்று.

இதனை நிலைப் பொருண்மையில் (stative) சேர்த்துக் கொள்வதே ஏற்புடைத்து.

பங்கீட்டு வேற்றுமையும் (distributive case) தனியொரு வேற்றுமையா என்பது மேலும் ஆய்தற்குரியது.

'வீடு தொறும் சென்றான்'

இத்தொடரில் வரும் 'தொறும்' என்பதனை ஒரு வேற்றுமையாகக் (பங்கீட்டு வேற்றுமை) கருதினால் தமிழ் இலக்கணங்கள் சுட்டும் அனைத்து இடைச் சொற்களையும் வெவ்வேறு வேற்றுமைகளாகக் கருதும் நிலை ஏற்படும்.

## III

## வேற்றுமைகளின் வளர்ச்சி நிலை

சொற்களின் அமைப்பு முறைமையினால் வேற்றுமைப் பொருண்மை உணர்த்தப் பெற்று, பின்னர் அவைகளில் சில வேற்றுமை உருபுகளாகவும் சொல்லுருபுகளாகவும் கருதப்பட்டன என்னும் கருத்து ஈண்டு நினைவு கூரத்தக்கது.

வேற்றுமைகளின் எண்ணிக்கை வளர்ந்த நிலையினைக் கருது கோளாக மூன்று நிலையாகச் சுட்டலாம்.

| | | | |
|---|---|---|---|
| முதல் நிலை | 1 | 2 | |
| இரண்டாம் நிலை | 3 | 4 | 7 |
| மூன்றாம் நிலை | 3A, 3B | 5 | |

(A = கருவி, B = உடனிகழ்ச்சி)

## IV

## வேற்றுமைகளின் முந்தைய நிலை

தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு வேற்றுமையினை ஆராயுங்கால் சில கருத்துக்கள் புலனாகின்றன.

1. தொல்காப்பியர்காலத் தமிழில் வேற்றுமைகளின் எண்ணிக்கை ஐந்தாக அமையும் நிலையில் தொல்காப்பியரோ வேற்றுமைகள் எட்டாகக் குறிக்கின்றார்.

2. தொல்காப்பியர் வேற்றுமையியலில் வேற்றுமைகளையும் அதன் பாகுபாடுகளையும் விளக்கப் பயன்படுத்தும் நூற்பாக்கள் 21. ஆனால் வேற்றுமை மயங்கியலுக்குப் பயன்படுத்தும் நூற் பாக்களோ 38.

இக்கருத்துக்கள் வேற்றுமை பற்றிய கோட்பாட்டில் காணப் பெறும் சிக்கலை நமக்கு நன்கு புலப்படுத்துகின்றன. இனி வேற்றுமை உருபுகளின் ஆட்சியினைக் காணுங்கால் பண்டை இலக்கியங்களில் இவற்றின் அருகிய வருகைநிலையினை அறிய இயலும்.

தொல்காப்பியத்திற்குச் சமகால இலக்கியங்களாகக் கருதப்பெறும் சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையும் வேற்றுமைத் தொகை களின் ஆட்சியே 70 விழுக்காடுகளுக்கு மேலாகக் காணப்படுகின்றது.

இன்னமும் எங்கெல்லாம் வேற்றுமை உருபுகள் தொக்குவரின் அங்கெல்லாம் பொருட் குழப்பம் ஏற்படும் நிலை இருக்கின்றதோ அங்கெல்லாம் கூட வேற்றுமை உருபுகள் தொக்குவரும் நிலையினை இவ்விலக்கியங்களில் காண முடிகின்றது.

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்படும் (குறள்:191)
புறவலர் காணாது (புறம்:204)
மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு (குறள்: 240)
அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் (குறள்:121)

கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளில் மிக முந்தையதாகக் கருதப் பெறும் கல்வெட்டுகளில் வேற்றுமை உருபுகளின் ஆட்சி இல்லை எனும் நிலைதான் இருக்கின்றது.

இக்கருத்துக்கள் அனைத்தும் வேற்றுமைக் கோட்பாடும் வேற் றுமை உருபுகளும் பிற்கால வளர்ச்சியாக இருத்தல் கூடும் என்ற கருத்தினை உருவாக்குகின்றன.

வேற்றுமை உருபுகள் அனைத்தும் முழுச் சொற்களின் திரிபு நிலையால் அமைந்தவை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ள

பட்ட கருத்தாகும். ஆனால் வேற்றுமைக் கோட்பாடு கடன் வாங்கப்பெற்றது என்னும் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் கருத்து பரிசீலனைக்குரியது.

வேற்றுமைக் கோட்பாடு எல்லா மொழிக்கும் உரியதே. இதனை ஒரு சான்று வாயிலாக விளக்கலாம். தமிழில் 'ஓலை' என்ற சொல் குறிப்பாக ஐந்து சொற்களுக்குப் பிறகு அவற்றோடு இணைந்து வரும். இச்சொற்களுக்கிடையே காணப்படும் உறவு நிலை பற்றித் தமிழில் கோட்பாடுகள் இல்லை. பெஞ்சமின்லீ ஹார்ப் என்பவரது 'மறை நிலைக் கோட்பாடு' (cryptotype theory) உருவாக்கத்திற்குப் பிறகு இச்சொற்களுக்கிடையே ஒரு வித உறவு காணப்படுகிறது என்பதும் அதனால்தான் 'ஓலை' எனும் சொல் இவ்வைந்து சொற்களோடு மட்டும் இணைந்து வருகின்றது என்பதும் புலனாகின்றன.

பனை<br>
தென்னை<br>
கமுகு } ஓலை<br>
ஈந்து<br>
சவை

'ஓலை' என்ற சொல் பனைக் குடும்பத்தைச் சார்ந்த ஐந்து மரங்களைக் குறிக்கும் சொற்களுக்குப் பின்னர்தான் வருகின்றது. ஈண்டுப் 'பனை' முதலிய ஐந்து சொற்களுக்கும் 'ஓலை' என்ற சொல்லுக்குமிடையே ஒருவிதையிலைத்தாவரம், பனைக்குடும்பம் போன்ற ஒன்பதுவகையான பண்புகள் காணப்படுகின்றன. இத்தகைய மறைமுக உறவினையே 'மறைநிலை உறவு' (cryptotype relation) என்பர் அறிஞர். இந்த உறவு வெளிப்படையாக அமையுமாயின் 'தெரிநிலை உறவு' (phenotype relation) என்று அழைக்கப்படுகிறது. தமிழில் வேற்றுமை உருபு வரின் அதற்குப் பின்னர் அதன் அண்மை உறுப்பாக வினை வரல் வேண்டும் என்பதும் இதற்குத் தக்க சான்றாகும்.

பனைக்கும் ஓலைக்குமிடையே காணப்படும் உறவு நம் மொழியில் இயல்பாக அமைந்து காணப்படுகின்றது. 'மறைநிலைக் கோட்பாடு' கண்டு பிடிக்கப்பட்ட பின்னர்தான் இங்கு இத்தகைய

உறவு இருக்கின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றோம். வேற்றுமைக் கோட்பாடும் இத்தகையதே.

தமிழில் வேற்றுமைஉறவுநிலை சொற்களை அடுக்கி வாக்கியம் அமைக்கும் முறையிலே அமைந்திருக்கலாம். பின்னர் வேற்று மொழித் தொடர்பால் இத்தகைய உறவினை நாம் வேற்றுமை எனக் கண்டறிந்திருக்கலாம். காலப்போக்கில் ஏற்பட்ட மொழி மாற்றத்தால் முழுச்சொற்கள் குறைச் சொற்களாகும் நிலையில் இவை சில குறிப் பிட்ட இலக்கண உறவினைப் புலப்படுத்தும் வடிவங்களாக அதாவது வேற்றுமை உருபுகளாகக் கருதப்பட்டுள்ளன.

தமிழில் வேற்றுமைக் கோட்பாட்டினைக் கண்டறிந்தமை பிற மொழிகளோடு ஏற்பட்ட உறவினால் ஏற்பட்ட தாக்கத்திற்குப் பின்னரே என்னும் கருத்து ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றா கும். இதற்குச் சான்று பகரும் நிலையில்தான் தொல்காப்பியத்தில் காணப்படும் சில சிக்கல்களும் அதன் சமகால இலக்கியங்களின் மொழியமைப்பும் முந்தைய கல்வெட்டுக்களும் அமைந்து காணப் படுகின்றது. இக்கொள்கை மேலும் ஆராய்தற்குமுரியது.

---

* இக்கட்டுரை நன்முறையில் அமைவதற்குப் பேருதவி புரிந்த என்னுடைய பேராசிரியர் டாக்டர் மோ. இசரயேல் அவர்க ளுக்கும் இணைப் பேராசிரியர் டாக்டர் ஜெக. நீதிவாணன் அவர்களுக்கும் நன்றி.

## அடிக்குறிப்புகள்

1. கால்டுவெல் (கால்டுவெல், 1953 ; பக். 255-56), மு. வரதராசன் (வரதராசன். மு., 1947 : பக். 146-48) ஆகிய இரு அறிஞர்களும் 'அம்' என்பதனை எழுவாய் வேற்றுமையின் உருபென குறிக்கின்றனர்.

இலக்குவனார் (இலக்குவனார், 1957 : ப. 22), கமில் சுவலபில் (கமில் சுவலபில், 1963 : பக். 15) போன்றோர் எழுவாய் வேற்று யின் உருபாக இன்மை வடிவத்தினைக் குறிக்கின்றனர்.

முத்துச்சண்முகன் அவர்களும் வேற்றுமை உறவு நிலையினை (முத்துச்சண்முகன், 1973 : ப. 112) வெளிப்படுத்திக் காட்டுவதற்கு உருபு இல்லை என்பதனால் எழுவாய் வேற்றுமையினை வேற்றுமை அல்ல என்று கூற முடியாது என்பர்.

2. 1. கத்தியால் வெட்டினான் (3)
   2. கத்தியைக் கொண்டு வெட்டினான் (3)
   3. கத்தியைப் பயன்படுத்தி வெட்டினான் (2)

'அவனைப் போல நடந்தான்' என்ற தொடரில் 'ஐ(ப்) போல) என்பதனைத் தனியொரு வேற்றுமையாகக் கருதாது இரண்டாம் வேற்றுமையினதாகக் கருதுகின்றோம். இது போன்று 'கத்தியைக் கொண்டு வெட்டினான்' என்ற தொடரில் வரும் 'ஐ (க்) கொண்டு' என்பதனைத் தனியொரு வேற்றுமையாகக் கருதாது இரண்டாம் வேற்றுமையில் சேர்த்துக் கோள்ளலாமா என்ற ஐயம் ஏற்படுவது முறையானதே.

3. பதினெண்கீழ்க் கணக்கில் 'கு' வ்வுருபு கொடைப் பொருண் மையிலும் காரணப் பொருண்மையிலும் கையாளப் பட்டுள்ளது (Athithan, A., 1978 : p. 111).

4. சேனாவரையர் (தொ. சொ. 79), நச்சினார்க்கினியர் (தொ. சொ. 60) ஆகிய இருவரும் 'அ'கரத்தையும் ஆறாம் வேற்றுமை உருபாகக் காட்டுகின்றனர்.

நன்னூலார் 'அ'கர உருபினைப் பன்மைக்குரியது என்று கூறு கின்றார்.

ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் (நன்னூல் 300).

பன்மையினை அகரம் உணர்த்தும் பான்மையில் சில சான்றுக ளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

சாத்தன குழைகள்
என கைகள்.

ஆறாம் வேற்றுமை உருபாகக் கருதப்படும் அகரம் ஒருமை, பன்மை வேறுபாடின்றி வருதலைச் சங்க கால இலக்கியங்களில் காண முடிகின்றது (ஆதித்தன், ஏ., 1976).

5. சிற்சில காரணங்களால் 'உடைய' என்பதனை ஆறாம் வேற்றுமை சொல்லுருபாகக் கருதுகின்றவர்களும் உண்டு. 'உடைய என்பதற்கு இரண்டு வேறு நிலைகளைத் தருவர் பொன். கோதண்டராமன்.

'என்னுடைய வீடு' என்னும் தொடரில் 'என்' என்னும் வேற்றுமையேற்கும் வடிவத்திற்குப் பின்னால் 'உடைய' எனும் வடிவம் வருகின்றமையால் இதனைச் சொல்லுருபாகக் கருதுகின்றவர்களும் உண்டு. வேற்றுமை ஏற்கும் வடிவமாகிய 'என்' என்பதற்குப் பின்னர் வரும் நிலை காரணத்தான் 'உடைய' என்பதனைச் சொல்லுருபாகக் கருதினால் 'உடைய' என்பதன் கட்டிலா மாறியாகிய (free variant) 'உடை' எனும் வடிவம் வேற்றுமை ஏலா வடிவத்திற்குப் பின்னர் வருதல் கூடாதன்றோ?

......................... யானுடைக்
கற்பின் ஏப்பரிசு இழைத்துக் காட்டுகேன்
(கம்பராமாயணம்: சுந்தர காண்டம் 508)

யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
(சிலப்பதிகாரம்: 20:69)

'என்னுடைய வீடு' எனும் தொடரில் வரும் 'என்' எனும் பகுதிக்கும் 'உடைய' எனும் பகுதிக்குமிடையே இருவேறு வேற்றுமைகளுக்கு (2 & 4) இடமிருக்கும் பான்மையினை அறியின் 'உடைய' என்பதனை வேற்றுமைச் சொல்லுருபாகக் கருதும் நிலை மாற்றம் பெறும்.

## துணை நூற்பட்டியல்

1. அகத்தியலிங்கம், ச., 1972 'ஐ வேற்றுமையா?', ஆய்வுக் கோவை, 4 பக்: 279-285.

2. ———— 1977 'வேற்றுமை', ஆய்வுக்கோவை, 9. பக்: 1-6

3. அருள்ராஜ், வெ. சா., 1978 'வேற்றுமை உருபா? வெற் றுருபா?', ஆய்வுக்கோவை, 10 பக் : 19-24.

4. ஆதித்தன். ஏ., 1976 'பெயரெச்சம் ஒரு பார்வை', வியாழ வட்டக் கருத்தரங்கம், (அச்சில்).

5. ———, 1978 'பெயரடை விகுதியா? வேற்றுமை உருபா?', இலக்கியப் பூங்கா பக் : 95-102

6. ———, 1979 'இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி, செந்தமிழ், 73:1 பக் : 17-19.

7. ———, 1980, 'தமிழில் ஆறாம் வேற்றுமையா?' ஆய்வுக் கோவை, 13 பக் : 43-48

8. இசரயேல், மோ., 1976 'வேற்றுமை இலக்கணம்', இலக்கண ஆய்வு - பெயர்ச்சொல், பக் : 101-121, மதுரை,

9. ———, 'பெயரினாகிய தொகை', இலக்கண ஆய்வு - பெயர்ச்சொல், பக் : 95 - 100. மதுரை,

10. கால்டுவெல், 1953 திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம் சென்னை.

11. கோதண்டராமன், பொன்., 1972 'ஆக என்பது ஒரு வேற் றுமையா?' இலக்கண உலகில் புதிய பார்வை, பக் : 94-100 சென்னை.

12. ———, 'ஆறாம் வேற்றுமை அதுவும் உடையவும் இலக்கண உலகில் புதிய பார்வை, பக் 101-106 சென்னை.

13. தொல்காப்பியர். தொல்காப்பியம் - சொல்லதிகாரம், பூரணர் உரை, குமாரசாமி நாயுடு பதிப்பு, சென்னை.

14. ———, 1944 தொல்காப்பியம்-சொல்லதிகாரம், நச்சினார்க் கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை.

15. ———, 1923, தொல்காப்பியம் - சொல்லதிகாரம், சேனா- வரையர் உரை, கழக வெளியீடு, சென்னை.

16. ———, 1929, தொல்காப்பியம்-சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு தஞ்சாவூர்.

17. ———, 1964 தொல்காப்பியம் – சொல்லதிகாரம் கல்லாடனார் உரை, கழக வெளியீடு, சென்னை.

18. பவணந்தி, 1963, நன்னூல் காண்டிகை உரை, சென்னை.

19. முத்துச் சண்முகம், 1973, 'வேற்றுமை', இக்காலத் தமிழ்' பக்:110–124, மதுரை.

20. மு. வரதராசன், 1947, மொழிநூல், கழக வெளியீடு, சென்னை.

21. Agesthialingom, S; Edr.) 1976, *Dravidian Case system* Annamalai University, Annamalai Nagar.

22. Athithan, A; 1979, *The Grammar of Tolkāppiam and the Language of Patineṇkilkkaṇakku* – A Compartive Study, Ph. D., Dissertation, Madurai Kamaraj University.

23. Dell Hymes 1964, "*Language in Culture and Society* Allied Publishers Private Limited, Delhi.

24. Israel, M. 1973, *The Treatment of Morphology in Tolkāppiyam*, Madurai University, Maduari.

25. Meenakshisundaran, T. P. 1964, *Foreign Modals in Tamil Grammar*, Dravidian Linguistics Association, Trivandrum.

26. Rajalakshmi, N; 1961. *History of Tamil Grammar with Reference to Declension*, M.Litt. Thesis, Annamalai University, Annamalai Nagar.

மொழியியல் 5. 1. (1981)

# பதிலிடு பெயராக்கத் தடைவு

ப. பத்மநாப பிள்ளை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம

## 1. பதிலிடு பெயராக்கம் – விளக்கம்

உலக மொழிகள் அனைத்திலும் பெயர்களும் (nouns) படர்க்கைப் பதிலிடுபெயர்களும் (pronouns) வழக்கிலுள்ளமை யாவரும் அறிந்ததே. ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வாக்கியங்களில் ஒரே பெயர்த்தொடரைப் பலமுறை குறிப்பிட நேரின் பெயர்த்தொடர்களுக்குப் பதிலாக படர்க்கைப் பதிலிடுபெயர்களை அவற்றின் இடத்தில் பயன்படுத்துகிறோம். ஆங்கில அறிஞர்கள் (Reibel & Schane, 1969) புதைநிலை அமைப்பிலுள்ள பெயர்த் தொடருக்குப் பதிலாக புறநிலை அமைப்பில் ஒரு பதிலிடுபெயரைத் தருவிப்பதே பதிலிடு பெயராக்கமாகும் என விளக்கி இதனை ஒரு மாற்றியமாகக் (trans formation) கொண்டுள்ளனர். பொதுவாக ஒரு வாக்கியத்தின் முதலில் வரும் பெயர்த் தொடர் அப்படியே இருக்க அடுத்து வரும் அதே பெயர்த்தொடர்கள் (co–referential) பதிலிடுபெயராக மாறுகின்றன. இப் பொதுவிதிக்கு முரணாக சில வாக்கியங்கள் வரு

வது உண்டு. இம் முரண்பாடுள்ள வாக்கியங்களைக் கண்டு அதனைத் தவிர்ப்பதற்கு ஒரு தடைவை (constraint) ஆராய்ந்து காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 2. முரண்பாடுகள்

வாக்கியங்களில் முதலில் வரும் பெயர்த்தொடர் பின்னர் வரும் பெயர்த்தொடரைப் பதிலிடுபெயராக மாற்றுகிறது என்ற பொது விதிக்கு உட்பட்டு வரும் வாக்கியங்களை முதலில் காண்போம். வாக்கியம் ஒன்றின் கிளை வரை படம் (1') கீழே தரப்பட்டிருக்கிறது.

1. இராமன் வந்ததாக இராமனின் நண்பன் கூறினான்.
2. கண்ணன் போனதை நினைத்துக் கண்ணனின் அம்மா வருந்தினாள்.

1'.




மேலே கண்ட வாக்கியங்கள் (1 – 2)-ல் முதலில் வரும் பெயர்த்தொடர் பின்னர் வரும் பெயர்த்தொடரை பதிலிடு பெயராக மாற்றுகிறது. இங்கு முதலில் வரும் பெயர்த்தொடர், அடுத்து வரும் பெயர்த்தொடர் எனக் குறிப்பிடப்படுவது, பதிலிடு பெயராக்கம் செயற்படுமுன் உள்ள இடைப்பட்ட அமைப்புக்களின் (intermediate

(structures) அடிப்படையிலேயே அல்லாமல் புதைநிலை அமைப்பில் (deep structures) அன்று என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1 அ. இராமன் வந்ததாக அவன் நண்பன் கூறினான்.

2 அ. கண்ணன் போனதை நினைத்து அவன் அம்மா வருந்தினாள்

இனி, கீழ்க்காணும் வாக்கியங்களைக் (3 – 4) காண்போம். வாக்கியம் மூன்றின் கிளை வரைபடம் (3') கீழே தரப்பட்டிருக்கிறது.

3. இராமன் வீட்டிற்கு இராமன் போனான்

4. கண்ணன் வீட்டில் கண்ணன் படித்தான்

3'.




வாக்கியங்கள் (3–4) –ல் முதலில் வரும் பெயர்த் தொடரால் பின்னர் வரும் பெயர்த் தொடரைப் பதிலிடு பெயராக ஆக்க முடியாது. அப்படிச் செய்யின் கீழ்வரும் ஏற்கவியலாத (unacceptable) வாக்கியங்கள் தருவிக்கப்படலாம்.

* 3அ. ராமன் வீட்டிற்கு அவன் போனான்

* 4அ. கண்ணன் வீட்டில் அவன் படித்தான்

## 3. தடைவு

பிரிவு இரண்டில் கண்ட ஏற்கவியலாத வாக்கியங்களைத் (3அ — 4அ) தவிர்ப்பதற்கும் அதே சமயத்தில் ஏற்கும்படியுள்ள பிற

வாக்கியங்களைத் தருவிப்பதற்கும் நாம் ஒரு தடைவை வரையறுத்துக் கொள்ளலாம்.

**தடைவு I**

ஆறாம் வேற்றுமை கொண்டு வரும் பெயர்த்தொடர் மற்றொரு பெயர்த் தொடருக்கு முதற்பெயராக (antecedent) இருக்க முடியாது.

இத் தடைவு மேலே கண்ட வாக்கியங்களைத் (3அ – 4அ) தவிர்த்து (1அ - 2அ) போன்ற வாக்கியங்களைத் தருவிப்பதற்கு வழி செய்கிறது. ஆனால் இத்தடைவுக்கு (I) முரணாகவும் சில வாக்கியங்கள் உள்ளன. காட்டாக, கீழ்வரும் வாக்கியங்களை (5–6) காண்போம். வாக்கியம் ஐந்தின் கிளைவரை படம் (5') கீழே தரப்பட்டிருக்கிறது.

5. முருகனின் நாய் முருகனைக் கடித்தது
6. பெருமாளின் தங்கை பெருமாளைத் திட்டினாள்

5'




ஆறாம் வேற்றுமையைக் கொண்டு வரும் (5–6) வாக்கியங்களில் பெயர்த்தொடர் பின்னர் வரும் பெயர்த்தொடரைப் பதிலிடு பெயராக மாற்றுவதை (5அ–6அ) வாக்கியங்களில் காணலாம்.

5 அ. முருகனின் நாய் அவனைக் கடித்தது
6 அ. பெருமாளின் தங்கை அவனைத் திட்டினாள்

இதிலிருந்து நமது தடைவு (I) தவறாக இருக்கிறது என்பது பெறப்படுகிறது. ஆகையால் மேலே கண்ட வாக்கியங்களையும் (5அ-6அ) உட்படுத்துவதற்காக தடைவு (II) கீழே தரப்பட்டுள்ளது.

**தடைவு II**

ஆறாம் வேற்றுமையைக் கொண்டு வரும் பெயர்த்தொடர் மற்றொரு எழுவாய் பெயர்த்தொடருக்கு முதற்பெயராக இருக்க முடியாது.

இத்தடைவின் (II) மூலம் இதுவரை நாம் கண்ட வாக்கியங்களைத் (1 அ — 6 அ) தருவித்து விடலாம். மேலும் சில வாக்கியங்கள் இத் தடைவின் (II) வரையறைக்குள் வராதிருப்பதையும் காணலாம். காட்டாக வாக்கியங்கள் (7 — 8) கீழே தரப்பட்டிருக்கின்றன. வாக்கியம் ஏழின் கிளை வரைப்படம் (7') கீழே கொடுக்கப்பட்டுள்ளது

7. லதாவின் நண்பன் லதா வந்ததைக் கூறினான்.

8. மூர்த்தியின் தங்கை மூர்த்தி வந்ததாகச் சொன்னாள்.

7'.



(7 – 8) வாக்கியங்களில் ஆறாம் வேற்றுமையைக் கொண்டு வரும் பெயர்த்தொடர் பின்னர் வரும் எழுவாய் பெயர்த்தொடரைப் பதிலிடு பெயராக மாற்றி விடுகிறது.

7 அ. லதாவின் நண்பன் அவள் வந்ததைக் கூறினான்

8 அ. மூர்த்தியின் தங்கை அவன் வந்ததாகச் சொன்னாள்

ஆதலால் நம் தடைவைத் (II) திருத்தியமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மேலே உள்ள வாக்கியங்களை (7 அ - 8 அ) உற்று நோக்கினால் ஆறாம் வேற்றுமையைக் கொண்டு வரும் பெயர்த்தொடர் அந்த வாக்கியத்திலுள்ள அடங்கு வாக்கியத்தின் (embedded sentence) பெயர்த்தொடரைப் பதிலிடுபெயராக மாற்றியிருப்பது புலப்படும். இதைக் கருத்தில் கொண்டு நோக்கினால் தடைவு III ஏற்புடையதாக இருக்கும்.

**தடைவு III**

> ஆறாம் வேற்றுமையைக் கொண்டு வரும் பெயர்த்தொடர் அதே வாக்கியத்தின் அல்லது மேல் வரும் வாக்கியத்தின் (higher sentence) எழுவாய் பெயர்த்தொடருக்கு முதற் பெயராக இருக்க முடியாது.

**முடிவுரை**

மேற்கூறிய தடைவை (III) ஏற்றுக்கொண்டு நோக்கினால் நாம் இதுவரை கண்ட அனைத்து ஏற்புடைய வாக்கியங்களையும் தருவித்து விடலாம். மேலும் இத் தடைவு ஏற்கவியலாக வாக்கியங்களையும் தவிர்த்து விடுகிறது. இத் தடைவு (III) மற்ற திராவிட மொழிகளுக்கும் பொருத்தமானதாக இருக்கலாம்.

## மொழியியல் பேரறிஞர்

# வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்
## (பரிதிமாற் கலைஞர்)
## (1870–1903)

சு. சக்திவேல்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பரிதிமாற் கலைஞர் என்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் மதுரையைச் சார்ந்த விளாச்சேரியில் 1870 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6-ஆம் நாள் பிறந்தார். பத்து வயது வரை வடமொழியையும் தமிழையும் பயின்றார். சென்னை கிருத்தவக்கல்லூரில் பயின்று 1893 இல் பி. ஏ. பட்டம் பெற்றார். தத்துவத்திலும் தமிழிலும் மாநிலத்திலேயே முதல்வராகத் தேறினார். 1895–இல் சென்னை கிருத்துவக்கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகப் பணி யாற்றினார். 1900–இல் 'ஞானபோதினி' என்ற பத்திரிகை நடத்தினார்.

**பரிதிமாற் கலைஞர் எழுதிய நூற்கள்**

1895 ரூபாவதி நாடகம்.

1896 சபாபதி முதலியாரின் 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழை'ப் பதிப்பித்தார்

1897 சித்ரகவி விளக்கம்

1897 நாடகஇயல் (முதல்பதிப்பு)

1897 கலாவதி நாடகம்

1901 நாடக இயல் (முற்றிய பதிப்பு)

1901 சபாபதிமுதலியாரின் 'மதுரை மாலை'யைப் பதிப் பித்தது

1901 தனிப்பாசுரத் தொகை

1902 மதிவாணன்

1902 மானவிஜயம்

1902 சூர்ப்பநகை

1902 முத்ராராக்ஷசம்

1903 தமிழ் மொழியின் வரலாறு

கீழ்க்கண்ட வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

1. வித்தியா விருத்தி
2. குமாரசம்பவம்
3. சிராம்ய பிரயோக நிபந்தனம்

செயங்கொண்டாரது 'கலிங்கத்துப் பரணியை'யும் புகழேந்தியின் 'நளவெண்பா'வையும் மழவை மகாலிங்க ஐயர் உரைநடையில் இயற்றிய 'தமிழ் இலக்கணநூலை'யும் தாண்டவ முதலியார் தமிழாக்கம் செய்த 'பஞ்ச தந்திரத்தையும்' பதிப்பித்தார். ஞான போதினி ஆசிரியராகவிருந்த காலத்து வெளியான கட்டுரைகள் 'தமிழ் வியாசங்கள்' என்ற பெயரில் வெளிவந்தது.

சூரியநாராயண சாஸ்திரி என்ற பெயரை பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிய நற்றமிழ் அறிஞர். தமிழகமே ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில், பரிதிமாற் கலைஞர் போன்றவர்கள் தோன்றி தமிழை ஆதரித்தனர். தமிழும் ஆங்கிலமும் ஆர்வமுறப் பயின்று பல்கலைக் கழக பட்டம் பெற்ற பரிதிமாற் கலைஞர் சென்னை கிருத்தவக்கல்லூரியில் தமிழாசிரியராக அமர்ந்து செந் தமிழால் மாணவர் சிந்தனையைக் கவர்ந்தார். முத்தமிழும் முறையாக வளரவேண்டுமெனக் கருதி ஓயாது உழைத்து அரிய நூல்கள் பல இயற்றினார். 'தமிழ் மொழியின் வரலாறு' (1903) என்னும்

பெயரால் அவர் வெளியிட்ட ஆராய்ச்சிநூல் இயற்றமிழின் நீர்மையை இனிது விளக்குவதாகும். தமிழ்நாட்டில் தமிழ்மொழி வரலாற்றிற்கு வழிகாட்டியவர் பரிதிமாற்கலைஞராவர். நாடகத் தமிழுக்கு இலக்கண நூற்கள் இன்மையால், 'நாடகவியல்' என்னும் இலக்கணநூலை வெளியிட்டார். பரிதிமாற் கலைஞர் முப்பத்தி மூன்று ஆண்டுகளே வாழ்ந்தாலும், பல துறைகளிலும் முன்னோடியாக வாழ்ந்தார். ஆங்கிலத்திலுள்ள 'Sonnets' போன்று தமிழிலும் 'தனிப்பாசுரங்களை' இயற்றினார். நாடகத்தமிழிற்கும் முதன்முதலாக ஓர் இலக்கணம் வகுத்தவரும் இவரே. ஆராய்ச்சி முறையை மேற்கொண்டு முதன்முதலாகத் தமிழ் மொழி வரலாற்றை இயற்றியவரும் இவரே. நன்னூல் முதலிய இலக்கண நூற்களில் கண்ட பகாப்பதங்களில் பெரும்பாலானவை பகுபதங்களே என்பதையும் 'அறு' என்னும் பகுதியடியாக ஆராய்ச்சிசெய்து முதன்முதலிற் கூறியவரும் இவரே. அக்காலத்திலேயே ஆங்கிலக் கலைச்சொற்களை நல்லதமிழில் மொழிபெயர்த்தார். நாடகம், நெடுங்கதை, கவிதை, கட்டுரை, ஆராய்ச்சி போன்ற பல துறைகளில் ஓய்வின்றி உழைத்தார்.

பரிதிமாற் கலைஞரின் மொழிக்கொள்கையைக் குறித்து டாக்டர் க. கைலாசபதி கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. அவர் பொதுவாகத் தமிழ்மொழியைப் பற்றிக்கொண்டிருந்த கருத்துக்கள் அக்காலத்தவர் பலர் கொண்டிருந்த கருத்துக்களினின்றும் வேறுபட்டன. செந்தமிழைத்தனது பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தியமை, தனித்தமிழ்என்றகோட்பாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தமை, தாய்மொழிமூலம் கல்வி என்ற கொள்கையை வற்புறுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். செந்தமிழ் என்னும் இதழில் 'உயர்தனிச் செம்மொழி' என்னும் பொருள் பற்றி ஆசிரியர் ஒருமொழியியற் கட்டுரை எழுதியுள்ளார். தனித்தமிழ் குறித்து இவர் ஆங்காங்கே குறிப்பிட்டிருந்தாலும் வடமொழிச் சொற்களையும் கிரந்த எழுத்துக்களையும் இவரது நூலில் காண்கிறோம். 'உயர்தனிச் செம்மொழி' 'சுதேச பாஷை நீக்கம்' 'சுதேச பாஷையாக்கம்' ஆகிய கட்டுரைகளில் தமிழ்மொழி—வடமொழி பிரச்சனையை எத்தனை நுணுக்கமாகவும் ஆழமாகவும் தருக்கரீதியாகவும்அவர்நோக்கினார் என்பதைக் கண்டு தெளியலாம். தமிழ் மொழியின் தொன்மை, ஒலிமாற்றம், காலம், சொற்பொருள்

மாற்றம் முதலியவற்றைத் 'தமிழ் மொழியின் வரலாற்றில்' விரிவாக விளக்கியுள்ளார். அக்காலத்தை நோக்க இஃதொரு சிறந்தநூலாகும்.

தமிழ் அறிஞர்களில் கல்லூரி ஆசிரியர், புலவர், நாடக ஆசிரியர், ஆராய்ச்சியாளர், பத்திரிக்கையாளர், பதிப்பாளர் என்னும் பல திறப்பட்ட தன்மைகளையும் மேற்கொண்டு விளங்கிய ஒரே பெரியார் பரிதிமாற்கலைஞர் எனலாம். தமிழின் நலமே தம் நலமாகக் கொண்டு வாழ்ந்த இப்பெரியார், முப்பத்திமூன்று வயதிலே காலமானது தமிழன்னைக்குப் பெரும் பேரிழப்பாகும்.

## தமிழில் அறிவியல் சொற்கள்

தமிழிலுள்ள சில சொற்களே, தமிழில் அறிவியற் செய்திகள் இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்று பகரும். நிலத்திற்கு 'ஞாலம்' என்னும் சொல்லை இன்றும் பயன்படுத்துகிறோம். 'நாலுதல்', 'ஞாலுதல்' என்றால் தொங்குதல் என்று பொருள். தொங்குகின்ற அறிவுக் கருவியை 'நாக்கு' என்கிறோம். தெலுங்கில் அதற்கு 'நாலிக' என்று பெயர். தொங்கும் வாயையுடைய யானையை 'நால்வாய்' என்கிறோம். தூக்குப் போட்டுக் கொள்வதை 'நான்று கொள்ளுதல்' என்கிறார்கள். நில உருண்டை வானவெளியில், ஆதாரம் ஏதும் இன்றித் தொங்கிக் கொண்டிருக்கும் உண்மையை உணராமலா தமிழன் 'ஞாலம்' என்னும் சொல்லை ஆக்கியிருப்பான்? நிலம் தட்டையானது என்று உலகின் வேறு பகுதியிலிருந்த அறிஞர்கள் கருதியிருந்தனர். அஃது உருண்டையானது என்று சொன்ன அயல்நாட்டுப் பேரறிஞர் ஒருவருக்கு உயிர்த்தண்டனை கொடுத்தனர். அதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே உலகம உருண்டையானது என்று தமிழர் கண்டிருந்தனர்.

**கி. இராமலிங்கனார்**
தமிழில் எழுதுவோம்.
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
சென்னை, 1978.

மொழியியல் 5, 1 (1981)

# கூட்டுவினைகளும் அவற்றைக் கண்டறியும் விதிகளும்

ஆ. கார்த்திகேயன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## 0. முன்னுரை

கூட்டு (compound) என்றால் என்ன? என்பது பற்றியும் கூட்டு வினைகள் (compound verbs) பற்றியும், அவற்றின் அமைப்பினையும் தொடரில் கூட்டுவினையைக் கண்டறியும் விதிகள் (criteria) பற்றியும் இக் கட்டுரை ஆராய முற்படுகின்றது.

## 1. கூட்டு என்றால் என்ன?

பொதுவாகக் கூட்டுச் சொற்களை ஆராயப்புகுமுன், தொடரில் இரண்டு சொற்கள் அடுத்தடுத்து இருப்பதற்கும், இரண்டு சொற்கள் ஒன்றாகக்கூடி ஒருசொல் நீர்மைத்தாய் கூட்டாக இயங்குவதற்கும் உள்ள வேறுபாட்டை விளக்கினால் கூட்டு என்பது என்ன என்று விளங்கிவிடும். காரணம் கூட்டமைப்பும் (compound construction)

தொடர் அமைப்பும் (syntactic construction) இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களாலோ அமைந்திருப்பதுதான்.

எடுத்துக் காட்டாக,

1. நல்ல பையன்
2. வேகமாக வந்தான்

போன்ற தொடர்களில் **நல்ல, வேகமாக** என்ற பெயரடையும், வினையடையும் முறையே **பையன்** என்ற பெயர்ச்சொல்லையும், **வந்தான்** என்ற வினைச்சொல்லையும் தழுவி மாற்றிகளாக (modifiers) செயல்படுகின்றன. எனவே தொடர்கள் 1உம், 2உம் தனி அமைப்புக்கள் (free constructions) என்று சொல்லலாம். ஏனெனில், **நல்ல** என்ற பெயரடையை மாற்றி

3. கெட்ட பையன்
4. உயரமான பையன்

என்ற தொடர்களைப் பெறமுடியும். அதுபோலவே தொடர் 2 இல் உள்ள **வேகமாக** என்ற வினையடையை மாற்றி

5. மெதுவாக வந்தான்
6. ஆடியாடி வந்தான்

என்பன போன்ற தொடர்களையும் பெறமுடியும். எனவேதான் இவற்றை தனி அமைப்புக்களாகக் கொள்கிறோம். இதற்கு மாறாக

7. கொள்ளை யடித்தான்
8. கைது செய்தார்கள்

போன்ற அமைப்புக்கள் கூட்டு அமைப்புக்களாக செயல்படுகின்றன தொடர்கள் 1,2 போல இத் தொடர்கள் செயல்படுவதில்லை. **அடித்தான்** போன்ற வினைச்சொற்கள் மிகக் குறைந்த, குறிப்பிட்ட (privilege of occurrence is limited) பெயர்ச் சொற்களோடு சேர்ந்து ஒரு கூட்டாகச் செயல்படுகிறது.

2. கூட்டுவினைச்சொல்

ஒரு மொழியில் எல்லா வாக்கியங்களும் ஒரு வினைச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. பொதுவாக இந்த வினைச் சொல் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச் சொற்களையோ தன்னுடன் சேர்த்து வாக்கியத்தில் அமையும் (Chafe 1970 : 96). எடுத்துக் காட்டாக,

13. அவன் கல்லூரியில் படித்தான்

என்ற வாக்கியத்தில் **படித்தான்** என்பது வினைச் சொல். இவ் வினைச் சொல் **அவன் கல்லூரி** போன்ற பெயர்ச் சொற்களைச் சேர்த்து ஒரு வாக்கியமாக அமைகின்றது. **அவன் கல்லூரியில்** என்ற அமைப்பு பொருளில் குறையுடையதாக அமைகின்றது. ஆனால் **கல்லூரி** என்ற பெயர்ச் சொல்லை நீக்கினால்,

13 a. அவன் படித்தான்.

என்ற வாக்கியம் ஏற்றுக் கொள்ளக் கூடியதும், வாக்கியம் 13க்கு பொருளில் மாறுபடாததாகவும் விளங்குகின்றது.

மாறாக, கீழ்க்காணும் வாக்கியங்களையும் சோதனை செய்வோம்.

14. கோழைகள் மற்றவர்கள் வாழ்க்கையைப் பாழாக்குவார்கள்.

15. நான் 'விடு' 'விடு' என்று சத்த மிட்டேன்.

16. அவர் முயற்சியில் தோல்வியுற்றார்.

17. நீங்கள் கொஞ்சம் ஓய்வெடுங்கள்.

மேற்கண்ட வாக்கியங்களில் உள்ள **பாழ், சத்தம், தோல்வி, ஓய்வு** போன்ற பெயர்ச் சொற்களை நீக்கி விட்டால் கிடைக்கும் வாக்கியங்கள்,

*18. கோழைகள் மற்றவர்கள் வாழ்க்கையை ஆக்குவார்கள்.

*19. நான் 'விடு' 'விடு' என்று இட்டேன்,

*20. அவர் முயற்சியில் உற்றார்.

* 21. நீங்கள் கொஞ்சம் எடுங்கள்,

பொருள் அற்றதாகவோ அல்லது பொருள் மாறுபட்டதாகவோ விளங்குகின்றன. வாக்கியங்கள் 18 உம், 21 உம் பொருள் மாறுபட்டும், 19 உம், 20 உம் பொருள் அற்றும் இருப்பதை வாக்கியங்கள் 14–17 ஓடு ஒப்பிட்டுக் காணலாம்.

எனவே வாக்கியங்கள் 14–17 இல் உள்ள சொற்கள் முறையே ஆக்கு, இடு, உறு, எடு போன்றவைகள் அந்த வாக்கியங்களின் முழு வினைகளாக்க் கொள்ள முடியாது. மாறாக பாழாக்கு, சத்தமிடு தோல்வியுறு, ஓய்வெடு என்பவற்றையே வினைகளாகக் கொள்ள முடியும். இத்தகைய சொற்களையே கூட்டு வினைச்சொற்கள் என்கிறோம்.

இதுகாறும் விளக்கியவற்றால், கூட்டு வினையின் இரண்டு சொற்களுக்கிடையில் privilege of occurrence குறைவாக இருக்கும் என்றும், கூட்டுவினையில் உள்ள முதற்சொல்லை நீக்கி விட்டால் பொருள் மாறுபட்டோ பொருள் அற்றோ ஆகிவிடும் எனவும் அறிந்தோம்.

## 3. கூட்டு வினையின் அமைப்பு

கூட்டு வினையின் அமைப்பைக் கீழ்கண்டவாறு தெரிவிக்கலாம்.

கூட்டுவினை > அடிப்பகுதி (base) + வினையாக்கி (verbalizer)

அதாவது அடிப்பகுதியினுடைய அமைப்பையும், வினையாக்கியின் அமைப்பையும் விளக்கினால் கூட்டு வினையின் அமைப்பை ஒருவாறு புரிந்து கொள்ள முடியும்.

அடிப்பகுதியாவது ஒரு கூட்டு வினையின் முதல் பகுதியாக (first constituent) விளங்குவதாகும். இத்தகைய அடிப்பகுதி பெயர்ச் சொல்லாகவோ, இடைச்சொல்லாகவோ அமையலாம்.

கூட்டு வினையில் அடிப்பகுதியாக வரும் பெயர்ச் சொற்களை மூன்று வகையாகப் பிரித்து விளக்கலாம்.

அ. தனிப்பெயர்கள் (Simple nouns)
ஆ. கூட்டுப்பெயர்கள் (Compound nouns)
இ. ஆக்கப்பெயர்கள் (Derivative nouns)

தனிப்பெயர்கள் தன்னளவில் பெயர்ச் சொற்களாக விளங்குகின்றன. அவற்றை மேலும் பிரித்தால் பொருள் உடையதாக இருக்காது.

எ. கா.

அரட்டை, ஆர்வம், ஆசை, பாழ், வீண் போன்றன.

கூட்டுப்பெயர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டு விளங்கும்,

எ. கா.

திறனாய்வு (திறன் + ஆய்வு)
மொழிபெயர்ப்பு (மொழி + பெயர்ப்பு)
பரிந்துரை (பரிந்து + உரை)
இறக்குமதி (இறக்கு + மதி)
வாக்குறுதி (வாக்கு + உறுதி)
மூலதனம் (மூலம் + தனம்)

இவற்றில் திறனாய்வு, மொழிபெயர்ப்பு போன்ற கூட்டுப் பெயரில் திறன், மொழி போன்றவைகள் தனிப் பெயர்கள். ஆய்வு, பெயர்ப்பு போன்றவைகள் ஆக்கப்பெயர்கள். பரிந்துரையில் பரிந்து என்ற சொல்லும் இறக்குமதியில் இறக்கு என்ற சொல்லும் முறையே வினையெச்சமாகவும், வினைப்பகுதியாகவும் விளங்குகிறது. வாக் குறுதியில் வாக்கும், உறுதியும் தனிப்பெயர்கள். இவ்வாறு பலவகை களிலிருந்தும் கூட்டுப் பெயர்கள் வருவித்து அவைகள் கூட்டுவினை யின் அடிப்பகுதியாகச் செயல்படுகின்றன.

### 3. 1. ஆக்கப்பெயர்கள்

வினையிலிருந்து வருவிக்கப்பட்ட ஆக்கப்பெயர்களும் கூட்டு வினையின் அடிப்பகுதியாகச் செயல்படுகின்றன. எடுத்துக்காட்டாக

ஆதரவு (ஆதரி + வு)
தொடர்பு (தொடர் + பு)
வெறுப்பு (வெறு + ப்பு)
விசாரணை (விசாரி + அணை)

சரியான ஆக்க ஒட்டுக்களை (derivational suffixes) வினைச்சொற்களுடன் சேர்ப்பதன் மூலம் இத்தகைய ஆக்கப்பெயர்கள் ஏற்படுகின்றன.

ஆக்கப்பெயர்களை மேலும் இரண்டு வகையாகப் பிரிக்க முடியும். ஒரு வகையில் ஆக்கப்பெயரும், அவற்றோடு தொடர்புடைய வினைகளும் வடிவத்திலும் பொருளிலும் ஒத்ததாக விளங்குகின்றன.

ஆதரவு
ஆதரி
வெறுப்பு
வெறு போன்றன.

மற்றொரு வகையில் ஆக்கப்பெயர்கள் அவற்றோடு தொடர்புடைய வினைகளுடன் வடிவத்தில் ஒத்தும் பொருளில் வேறுபட்டும் விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக,

கொள்
கொள்ளை
காய்
காய்ச்சல்
ஏறு
ஏற்றம்

இந்த வேறுபாட்டைக் கீழ்வரும் வாக்கியங்களில் காணலாம்.

22. அவன் ஆதரித்தான். அவனுடைய ஆதரவு.
23. அவன் வெறுத்தான். அவனுடைய வெறுப்பு.
*24. அவன் கொண்டான். அவனுடைய கொள்ளை.
*25. அவன் விட்டான். அவனுடைய விடுதலை.

இத்தகைய ஆக்கப் பெயர்கள் தங்களின் பொதுவான பொருளை (general meaning) இழந்து வினையினின்றும் வேறுபட்டு சிறப்புப் பொருளில் (specialised meaning) வழங்குகின்றன.

இவைகளைத் தவிர சில இடைச் சொற்களும் கூட்டு வினையின் அடிப்பகுதியாக விளங்கும். எடுத்துக் காட்டுக்கள்.

முன், பின், வெளி, நேர், கிறீச் போன்றன.

### 3.2. வினையாக்கிகள்

ஒரு கூட்டு வினையில் இரண்டாவது பகுதியாக விளங்குவது வினையாக்கிகள். இவை பெயர்ச்சொற்களை வினைகளாக (கூட்டு) மாற்றுகின்றன. மேலும் காலம், பால், இடம் என்ற இலக்கணக் கூறுகளையும் குறித்து நிற்கின்றன. எடுத்துக்காட்டாக,

அடி
அடை
அளி
செய்
படுத்து
விடு

போன்ற வினைச்சொற்கள் வினையாக்கிகளாகப் பயன்படுகின்றன. வினையாக்கிகள் முழுவினையின் பொருளை இழந்து அல்லது அதிலிருந்து பொருளில் குறைந்து (lexically depleted) செயல்படுகின்றன.

அவன் மரத்தில் ஏறினான் (concrete)
அவன் முன்னேறினான் (abstract)

i) கூட்டு வினை → அடிப்பகுதி + வினையாக்கி

ii) அடிப்பகுதி → { பெயர்ச் சொல் / இடைச் சொல் }

iii) பெயர்ச் சொல் → { தனிப் பெயர் / கூட்டுப் பெயர் / ஆக்கப் பெயர் }

iv) தனிப் பெயர் → அரட்டை, ஆர்வம், ஆவல், போன்றன.

v) கூட்டுப் பெயர் → பரிந்துரை, வாக்குறுதி போன்றன.

vi) ஆக்கப் பெயர் → ஆராய்ச்சி, முடிவு, பார்வை போன்றன.

vii) இடைச் சொல் → பின், முன், வெளி, உள், நேர்.

vii) வினையாக்கி → அடி, அடை, படு, செய் போன்றன.

கூட்டு வினையின் அடிப்பகுதியாகச் செயல்படும் பெயர்கள் இடைச் சொற்கள் எல்லா வினையாக்கிகளையும் எடுத்து கூட்டு வினையாகச் செயல்படாது. ஒரு குறிப்பிட்ட வினையாக்கியையோ, அல்லது வினையாக்கிகளையோதான் எடுத்துச் செயல்படும் என்பது இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று.

### 4. கண்டறியும் விதிகள்

கீழ்க்காணும் விதிகள் கொண்டு ஒரு அமைப்பு கூட்டு வினையா அல்லது பெயர் வினை அடுத்தடுத்தமைந்த தனி அமைப்பா என்பதைக் கண்டறியலாம்.

பொதுவாக கூட்டுச்சொற்களின் நடுவே எந்த சொல்லையும் புகுத்த முடியாது. இதுபோலவே கூட்டு வினையில் ஐ வேற்றுமையை நடுவில் புகுத்த முடியாது. எடுத்துக்காட்டாக,

போராடு
சண்டை போடு
குணப்படுத்து

போன்ற கூட்டு வினைகளில் ஐ வேற்றுமையைப் புகுத்தக்கிடைக்கும்

* போரை ஆடு
* சண்டையைப் போடு
* குணத்தைப் படுத்து

போன்ற அமைப்புகள் ஏற்றுக் கொள்ள முடியாததாகவும், இலக்கணத்திற்குப் புறம்பானதாகவும் இருக்கின்றன. ஆனால்

பானை செய்
வீடு கட்டு

போன்ற அமைப்புகளில் ஐ வேற்றுமையை புகுத்தக் கிடைக்கும்

பானையைச் செய்
வீட்டைக் கட்டு

போன்ற அமைப்புக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இருக்கின்றன. எனவே, பானை செய், வீடுகட்டு போன்றன கூட்டு வினைச்சொல் அல்ல என்று தெளியலாம்.

மேலும் கூட்டுவினையின் இரண்டு சொற்களிடையே மாற்றிகளை (modifiers) புகுத்த முடியாது. காட்டாக

*குணம் நன்றாகப் படுத்தினார்.

என்பது பிழையுடையது. மாறாக கூட்டு வினைக்கு முன்னால் மாற்றிகள் வருவதைக் காணலாம்.

நன்றாகக் குணப்படுத்தினார்.

சில இடங்களில் கூட்டு வினைக்கு நடுவில் மாற்றிகள் வரக் காணலாம்.

அரட்டை நன்றாக அடித்தான்.
காதல் நன்றாகச் செய்தான்.

போன்றவைகள்.

நன்றாக அரட்டை அடித்தான்.
நன்றாகக் காதல் செய்தான்.

போன்ற அமைப்போடு சிறிது பொருள் மாறுபட்டு விளங்குகின்றன. மேலும்

பானை செய்
வீடு கட்டு

போன்றவற்றில் மாற்றிகளை எளிதாகச் செருக முடியும்.

பானையை அழகாகச் செய்
வீட்டை அழகாகக் கட்டு

ஒரு கூட்டுவினைக்கு இணையாக ஒரு தனிவினைச்சொல் அதே மொழியிலோ அல்லது வேறு மொழியிலோ இருப்பின் அதுவே கூட்டு வினைச்சொல் என்று கொள்ள ஏதுவாக இருக்கும். காட்டாக

கொலைபண்ணு

கொல்

காதல் செய்

காதலி

உரையாடு

பேசு (உரை)

வாதாடு (cf. English 'argue')

கூறிடு (cf English 'divide')

மாறாக பானை செய், வீடு கட்டு போன்ற தனி அமைப்புகளுக்கு இணையாக தனிச்சொல் (synonym) இருக்க முடியாது.

கூட்டு வினைக்கு முன் பெயரடையோ எண்ணுப் பெயரடையோ பெயரெச்சமோ, உன், என் போன்ற ஆறாம் வேற்றுமைத் தொடரோ வர முடியாது. காட்டாக,

* 29) நல்ல பழிவாங்கினேன்

* 30) இரண்டு பழிவாங்கினேன்

* 31) கொடுத்த பழிவாங்கினேன்

* 32) உன் பழிவாங்கினேன்

இது பழிவாங்கு என்ற தொடர் அடிப்படையிலேயே வினைச்சொல் என்பதைக் காட்டுகிறது.

கூட்டு வினையல்லாத பெயர் வினை அமைப்பாக இருந்தால் மேலே குறிப்பிட்டவைகளோடு வரும்.

33) பேனா வாங்கினேன்.

34) நல்ல பேனா வாங்கினேன்.

35) இரண்டு பேனாக்கள் வாங்கினேன்.

36) கொடுத்த பேனாவை வாங்கினேன்.

37) உன் பேனாவை வாங்கினேன்.

எனவே பழிவாங்கு என்பதைக் கூட்டு வினையாகவும், பேனாவாங்கு என்பதைச் சாதாரணப் பெயர்வினை அமைப்பாகவும் கொள்ள வேண்டும்.

## 5. முடிவுரை

இக்கட்டுரையில் கூட்டுவினையின் தன்மைகளையும், அமைப்பையும், தொடரில் அல்லது வாக்கியத்தில் அதைக் கண்டறியும் விதிகளையும் விளக்கினோம்.

### துணை நூல்

1 Chafe, Wallace L. 1970, *Meaning and the Structure of Language*. The University of Chicago Press, Chicago.

# இடமும் காலமும்

இடத்தைப் பற்றிய அறிவு வளர்ந்து நெடுங்காலம் கழிந்த பிறகே காலத்தைப்பற்றிய அறிவு வளர்கிறது. இடம் பருப்பொருள்; காலம் நுண்பொருள். நாகரிகம் வளரவளர, இடத்தை ஒட்டிய வேறுபாடுகளை உணர்த்தும் மொழிக்கூறுகள் குறைந்து காலத்தை ஒட்டிய வேறுபாடுகளை உணர்த்தும் மொழிக்கூறுகள் பெருகுகின்றன.

நாகரிகம் குறைந்த சூலு (Zulu) மொழியில், என் தந்தைக்கு ஒரு சொல்லும் உன் தந்தைக்கு ஒரு சொல்லும், அவனுடைய அல்லது அவளுடைய தந்தைக்கு வேறொரு சொல்லுமாக இடவேறுபாடுகளுக்கு ஏற்பத் தந்தையர்க்கு வெவ்வேறு பெயர்கள் உள்ளன. அந்தச்

சொற்களுள், தந்தை என்னும் பொதுத் தன்மையை உணர்த்தும் உறுப்பு இன்னதெனப் பிரித்தெடுக்க இயலாதாம். பைந்தமிழிலும் இதே நிலைமை இருந்து வந்தது என்பதைப் பின்வரும் சொற்களிலிருந்து அறியலாம். ஆனால், தமிழில் வெவ்வேறு பெயர்கள் இருந்த போதிலும், ஒவ்வொன்றிலும் இடத்தை உணர்த்தும் உறுப்பு இன்னது என்று தனியே பிரித்து ஐ என்பது அப்பனை உணர்த்தும் பொதுச் சொல்லாக நிற்றலை அறிய முடிகிறது. ஆகவே தமிழ் பழங்காலத்தி லேயே வளர்ச்சியுற்ற நிலையில் விளங்கியது எனக் கூற இடம் உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| என்னை<br>எந்தை | — | தன்மை | (என் அப்பன்)<br>(எம் அப்பன்) |
| நுந்தை | — | முன்னிலை | (உன் அப்பன்)<br>(உம் அப்பன்) |
| தந்தை | — | படர்க்கை | (தன், தம் அப்பன்) |

என்பவை பழங்கால வழக்கு. ஐயன், ஐயர் என்ற சொற்கள் மூன்று இடங்களுக்கும் பொதுவாக இருந்தபோதிலும், அப்பன் என்ற வரை யறுத்த பொருளில் இல்லை; மூத்தோர் சான்றோர் என்ற பொருளிலும் அது வழங்கியது. ஆகவே, அப்பன் என்ற பொருளில் பொதுச்சொல் அக்காலத்தில் வழங்கவில்லை எனலாம். இடத்தை ஒட்டி வேறுவேறு சொல்லாக மூன்று நான்கு சொற்கள் இருந்தன. இக்காலத்தில் தந்தை என்பதில் படர்க்கைப் பொருளுணர்ச்சி இல்லாமற் போக, அதை மூன்று இடங்களுக்கும் பொதுவாக வழங்குதல் காணலாம்.

| | |
|---|---|
| என் தந்தை<br>எம் தந்தை | தன்மை |
| உம் தந்தை | முன்னிலை |
| அவர் தந்தை | படர்க்கை |

டாக்டர் **மு. வரதராசனார்**
மொழிவரலாறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை, 1975.

# வணிகத்தொடர்பால் தோன்றும் புது மொழிகள்

**கோ. சீனிவாச வர்மா**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மொழித்தொடர்பு ஏற்படும்பொழுது, தொடர்புகொள்ளும் மொழிகள் வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தனவாகவும், புரிந்து கொள்ள முடியாதனவாகவும் அமைந்து, அம்மொழிகளைப் பேசும் மக்கள் மற்றவர்களது மொழியினைக் கற்றுக்கொள்ள விரும்பாத நிலையில், புதியமொழிகள் தோன்றுகின்றன. இவ்வகை மொழிகளை வணிகமொழி (pidgin) எனலாம். புதியமொழி, தொடர்பு கொள்ளும் மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியின் அடிப்படை இலக்கண அமைப்பினை ஆதாரமாகக் கொண்டு மற்ற மொழியிலிருந்து சொற்களைப் பெருவாரியாகப் பெற்று வணிகமொழி உருவாகின்றது. ஆங்கிலேயர் சீனர்களுடன் தொடர்பு கொண்டபொழுது தோன்றிய வணிகமொழியே 'பிஜின்' (pidgin) என்றனர். இச்சொல் business என்ற ஆங்கிலச் சொல்லின் திரிபு என்பாரும், இல்லை என்பாரும் உண்டு.[1] ஆரம்பத்தில் வணிகமொழி எந்த ஒரு சூழ

வினருக்கும் தாய்மொழியாக இல்லாமல், தொடர்பு மொழியாக இரு குழுவினருக்கும் பொது மொழியாகவே இருக்கும். பின்னர் காலப் போக்கில் அப்பேச்சுமொழி, ஒரு குழுவினருக்குத் தாய்மொழியாக அமையும். அப்பொழுது, அப்பேச்சுமொழி (பிஜின்) வணிகமொழி என்ற நிலையிலிருந்து வணிகத் தாய்மொழி (creole) என்ற நிலைக்கு உயர்கிறது.[3] வளர்ச்சியடைந்த இம்மொழி மக்கள் அளிக்கும் சமுதாய உயர்வு தாழ்வுக்கு ஏற்பப் பயன் கூடியோ, குறைந்தோ காணப்படும்.

வணிகமொழிகள் பெரும்பாலும், ஏதேனும் ஒரு ஐரோப்பிய மொழியுடன் தொடர்புடையதாக உள்ளன. ஆங்கிலம் – சீன மொழிகளின் தொடர்பால் உருவான வணிக மொழி, ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழி – ஆங்கில மொழிகளின் தொடர்பால் உருவான வணிக மொழி ஆகியன ஆரம்ப நிலையில் உள்ள வணிகமொழிக்கு எடுத்துக்காட்டுக்களாகும். நன்கு வளர்ச்சியடைந்த வணிகத்தாய் மொழிகட்கு எடுத்துக்காட்டாக நியூகினிய மொழி – ஆங்கிலமொழிகளின் தொடர்பால் உருவான மொழியைக் கூறலாம்.

வணிகத்தாய் மொழி, எந்த மொழியினை அடிப்படையாகக் கொண்டு உருவானதோ அம்மொழி வழங்கும் பகுதியிலேயே வழங்கப் படுமானால், அவ்வணிக மொழிக்கும், பொதுமொழிக்கும் இடையில் பல கிளை மொழிகள் காணப்படலாம்.

| வணிகத் தாய்மொழி | அடிப்படை மொழி | வழங்கும் நாடு |
|---|---|---|
| கிரியோ | – ஆங்கிலம் | – சியரோ நாடு |
| ஹைஷியன் கிரியோல் | – பிரெஞ்சு | – ஹைட்டி நாடு |
| ஸ்ரனன் | – ஆங்கிலம் | – சுரிநாம் நாடு |

இடைநிலையில் உள்ள பேச்சு வழக்குகளை வெவ்வேறு கிளை மொழிகளாகக் கொள்ளலாம் என்ற கருத்து உருவாகியது. அந்நிலையில் மூன்று கிளைமொழிகளை வகைப்படுத்தினர். அவை முறையே, 1. அடிக்கிளை மொழி (Basilect) 2. தரமான பொதுக் கிளைமொழி (Acrolect) 3. இடைக்கிளை மொழி (Masolect) ஆகும்.

அடிக்கிளை மொழியாவது, அது வழங்கும் நாட்டில் அல்லது பகுதியில் மிகப்பரவலாக, பெரும்பான்மையோரால் பேசப்படும் வணிகத் தாய்மொழியின் ஒரு கிளைமொழியாகும்.

தரமான பொதுக்கிளைமொழியாவது, அம்மொழி வழங்கும் நாட்டில் பேசப்படும் அடிப்படை மொழியின் ஒரு கிளைமொழியாகும். இது இரு குழுவினருக்கும் பொதுவான சமுதாய பின்னணியினைக் கொண்டு, தரமான பேச்சு மொழியாக வழங்கும் கிளைமொழியாகும் வணிகத்தாய் மொழியுடன் மிகச்சிறுபான்மை ஒற்றுமையையே பெற்றிருக்கும்.

அடிக்கிளை மொழிக்கும், தரமான பொதுக்கிளை மொழிக்கும் ஏற்படும் தொடர்பின் விளைவால் உண்டான பரஸ்பர குறுக்கீட்டினால் உருவாகும் பேச்சு மொழியே இடைக் கிளைமொழியாகும். இதன் அமைப்புபற்றியும் நிகழ்வு பற்றியும் முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன.

வணிகத்தாய்மொழி நன்கு வளர்ச்சியடைந்து, பரவல் செய்தித் தொடர்பு, கல்வி பயிற்றல், சமுதாய உயர்வு போன்றவைகட்கு பயன்படுத்தப்படும்பொழுது பல சிக்கல்கள் உருவாகின்றன. திகேம்ப் (De Camp: 1971) அவர்கள் 'கரிபியன்கிரியோல்' மொழியினை ஆராய்ந்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஒத்து நோக்கத்தக்கன. அடிப்படைமொழிவழங்கும் நாட்டில், புதியதாகத்தோன்றிய வணிகத் தாய்மொழிக்கும் அங்கு முன்னரே வழங்கி வருகின்ற உள்நாட்டு மொழிக்கும் இடையில் ஒரு நிரந்தரத் தொடர்பு உள்ளது. அத் தொடர்பினை மேற்கூறிய மூன்று வகைகளாகப் பிரித்துக் கூற முடியாது என்று விளக்குகிறார். மேலும் டெரெக் பிக்கர்ட்டன் (Derek Bickerton : 1971) அவர்கள் கியானிஸ் கிரியோல் மொழியை விரிவாக ஆராய்ந்து இக்கருத்தினை வலியுறுத்தியுள்ளார். ஒரு மொழியின் கிளை மொழிகள் தம்முள் தொடர் இயக்கம் உடையன என்ற நிலையிலிருந்து, இங்கு ஆராயப்படும் தொடர் இயக்கம் வேறானதாகும். வணிகத்தாய் மொழி வழங்கும் நாட்டில் உள்ள கிளை மொழி நிலையை விளக்க முற்படும் பொழுது, மூன்று வழக்குகள் மட்டுமே உள்ளன என்று வரையறுப்பது பொருந்தாது. இந்த எண்ணிக்கை கூடவோ குறையவோ இருக்கலாம். இத்தனைதான் என்று ஆராய

மல் கணிக்க முடியாது. மேலும் உள்நாட்டு மொழிக்குப் பல கிளை மொழிகள் இருக்கக் கூடும். புதியதாகத் தோன்றிய வணிகத்தாய் மொழிக்கு, காலப் போக்கில் கிளைமொழிகள் உருவாகலாமல்லவா? ஆதலால் தொடர் இயக்கத்தை ஏற்றுக்கொள்ளலாமேயன்றி மூன்று கிளை மொழிகள் என்ற பிரிவுவகையை ஏற்றுக்கொள்ள முடியாது. கிளை மொழிகள் என்று குறிப்பிடும் பொழுது அவைகள் வழங்கும் வட்டாரம், சமூகச் சூழல் ஆகியவற்றைத் தெளிவுபடுத்த கிளைமொழி வரை கோடுகளும் அவற்றின் கற்றைகளும் இங்கு காணப்பட வில்லை. ஆதலால் கிளைமொழிகளின் எண்ணிக்கை, வழங்கும் பகுதி அல்லது சமுதாயச்சூழல் ஆகியன அற்ற ஒரு புதிய நிலை உரு வாகியுள்ளதை அறியமுடிகிறது. எனவே தொடர்இயக்க இயல்பை ஏற்றுக் கொண்டு செயல்படவேண்டும். முதலில் அந்நாட்டுமொழியும் அதன் கிளை மொழிகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டனவாகும். பின்னர், மொழித் தொடர்பால் உருவான வணிகமொழி. வணிக மொழி வளர்ந்து, வணிகத் தாய் மொழியாக உயர்ந்து வழங்கும் நிலை. இதற்கு அடுத்த மூன்றாவது நிலையில் வணிகத் தாய் மொழிக்கு ஏற்படும் கிளை மொழிகள். இவையனைத்துக்கும் மேலாக கிளைமொழிகள் தம்மில் கலந்து, தொடர்பு ஏற்பட்டுப் புதிய கிளை மொழி உருவாகுமா என்பதாகும், இது கோட்பாட்டு அடிப்படை யிலும், நிகழ்வு அடிப்படையிலும் எழுப்பப்படும் வினாக்களாகும். வணிகத் தாய்மொழி வழங்கும் நாடுகளில் களப்பணி செய்து கண்டறிய வேண்டியதொன்றாகும். கிளைமொழியியலார் வளர்ந்து வரும் இருமொழியம், பல்மொழியம் வழங்கும் நாடுகளில் ஆராய வேண்டிய துறைகளில் இஃது இன்றியமையாத துறையாகும்.

## அடிக் குறிப்புகள்

1. "Pidgins : The traditional etymology of the word 'pidgin' is as being derived from the English 'business' but there is some disagreement on this point. The word was first applied to Chinese pidgin English and later to similar types"

   J. T. and H. K. Platt (1975 : 101)

2. "Creole : The term creole (from Portuguese crioulo) originally meant a whiteman of European descent, born and raised in a tropical colony. Creoles are pidgins which have become primary languages, i.e a speech community uses a creole as its first, its native language of communication. The structure of the original pidgin is expanded to enable it to fulfil its new function." ibid. 103.

### துணை நூல்கள்

Petyt, K. M. 1980 *The Study of Dialect, An Introduction to Dialectology*. Andre Dentch.

Platt, J.T. and H.K. 1975 *The Social Significance of Speech* Australia

Srinivasavarma, G. 1980 *Irumoliyam* (Tamil) Annamalainagar.

## உயர் சொற் கிளவிகள்

கிழக்கு நாடுகளின் மொழியில் உள்ளதாக ஐரோப்பியர் எடுத்துக் காட்டும் குறை ஒன்று உளது. அஃதாவது; சமுதாய ஏற்றத் தாழ்வுகளின் மிகுதியினால், உயர்ந்தோரை நோக்கிப் பேசும்போது பலவகை உயர் சொற்கிளவிகள் உள்ளன என்பர். பேசுவோர் தம்மை மிக இழிவுற வைத்துக்கொண்டு பேசும் தாழ்வுமனப்பான்மை இம் மொழிகளில் மிகுதி என்பர்.

| | |
|---|---|
| நீ | — வேலையாளிடம் |
| நீர் | — ஒத்தவரிடம் |
| நீங்கள் | — சிறிது உயர்ந்தவரிடம் |
| தாங்கள் | — மிக உயர்ந்தவரிடம் |

இவ்வாறே ஒருமையில் வழங்கும் சொற்களாக அவர், அவர்கள் என்பவை வழங்குகின்றன. 'ஆமாம்' என்று ஒத்தவரிடம் சொல்பவர், ஆமாங்கள் (ஆமாங்க)என்று உயர்ந்தவரிடம் சொல்லுதல் காணலாம். மொழியில் இத்தகைய சமுதாய ஏற்றத்தாழ்வுகள் மிகுதியாக இடம் பெற்றிருப்பதை எடுத்துக்காட்டி ஐரோப்பியர் குறை கூறுவர். ஆங்கிலத்தில் இவை இருந்தன. thou, thee, ye, you, என்று பல சொற்கள் இருந்த இடத்தில் இப்போது முன்னிலையிடப் பெயராக you என்ற ஒருசொல் மட்டுமே வழங்குகிறது. தமிழில் ஒருவனையே (ஒருவரையே) அவர் என்றும் அவர்கள் என்றும் குறிப்பது போன்ற உயர்சொற்கிளவி ஆங்கிலத்தில் இல்லாமல், he என்ற ஒரே சொல் வேலையாள், ஆசிரியர், அரசன், கடவுள் எல்லோரையும் குறிக்க வழங்குகிறது. எனினும் His Highness, His Majesty முதலிய சொற்கள் உயர்வு வேண்டும்போது வழங்குகின்றன. இத்தாலிய மொழியில் மூவகை உயர்சொற்கிளவிகள் முன்னிலையில் உள்ளன. ஸ்பெயின் மொழியிலும் இத்தகைய சொற்கள் உள்ளன. ஆங்கிலத்தில் ஏற்பட்டது போன்ற மாறுதல் (எல்லோருக்கும் ஒரு சொல்லாக அமைதல்) நாளடைவில் பிற மொழிகளிலும் ஏற்படக்கூடும். தமிழிலும் அத்தகைய மாறுதல் ஒரு காலத்தில் ஏற்படலாம்.

டாக்டர் மு. வரதராசனார்

மொழிவரலாறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

சென்னை, 1975.

## அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

### 1. மொழியியல் - வாழ்வும் வரலாறும் (History of Linguistics)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
M,A., Ph. D. (Kerala) Ph. D., (Ind. U. S. A.)

டாக்டர் க. புஷ்பவல்லி, M.A., Ph. D.,

மொழியியல் அறிஞர்கள் பலர் மொழியியல் வளர்ச்சிக்கு வேரும் விதையுமாக நின்றனர். அவர்களுடைய வாழ்வு, வரலாறு, அவர்கள் ஆராய்ச்சியில் கண்ட வெற்றி இன்னோரன்ன பல செய்திகளையும் பல்வேறு மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்குவது இந்நூல்.

பக்கம் 458) (விலை ரூ. 16/-

### கிளை மொழியியல்

டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M. A. Ph. D.

ஒரே மொழி வழங்கும் நாட்டில் கூட வட்டாரம், இனம், சாதி தொழில், சமூகம் முதலிய வேறுபாடுகள் மூலம் பேச்சு மொழி வேறுபடுகிறது. தமிழில் அவ்வாறு வேறுபடுகின்ற பேச்சு மொழி ளைப்பற்றி விரிவாக விளக்கிக்கூறும் முதல் நூல் இந்நூல்.

பக்கம் 226) (விலை ரூ. 10/ -

### 3. மொழித்திட்டமிடுதல் (Language Planning)

டாக்டர் கி. கருணாகரன், M.A., Ph.D.,

மொழித் திட்டமிடுதலில் இன்றைய நிலையில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ள முக்கியமான சில கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் எளிய நடையில் எடுத்

தியம்புவது இந்நூல். தமிழின் புதுமையாக்கம், எழுத்துருவாக்கம், நிலைபேறாக்கம் முதலியவற்றைப்பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்குகிறது இந்நூல்.

பக்கம் 165) (விலை ரூ. 7/-

**4. உலக மொழிகள் - திராவிட மொழிகள் I**

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**
**M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A)**

திராவிட மொழிகளின் வாழ்வு, வரலாறு, இலக்கியம் இலக்கணம், கல்வெட்டு போன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் திராவிட மொழிகட்கும் மற்ற மொழிகட்குமுள்ள பல்வேறு உறவினையும் விளக்குவது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஐந்தாவது நூல் இது.

பக்கம் 250) (விலை ரூ. 12/-

**5. உலக மொழிகள் - திராவிட மொழிகள் II**
**(Dravidian Languages)**

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**
**M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A.)**

இருபத்திரண்டுக்கும் மேற்பட்ட திராவிடமொழிகளின் வடிவங்களை ஒப்பிட்டுத் தொல் திராவிட மொழியிலுள்ள ஒலியமைப்பு-பெயர் இலக்கண அமைப்பு ஆகியவற்றைச் சான்றுகாட்டி ஒப்பிலக்கண அடிப்படையில் ஆராய்வது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஆறாவது நூல் இது.

பக்கம் 265) (விலை ரூ. 15/-

**6. நரிக்குறவப் பழங்குடி மக்கள்**

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M.A., Ph. D.**

இந்நூல் நரிக்குறவர்களின் வாழ்க்கை முறையையும் சுற்றுப் புறச் சூழலுக்கேற்ப அவர்கள் மேற்கொள்ளும் பழக்க வழக்கங் களையும் விளக்குகிறது. மேலும் அவர்கள் வாழ்வில் அமையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுகிறது.

பக்கம் 96) (விலை ரூ. 4/-

**7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform)**

**டாக்டர் செ. வை. சண்முகம், M. A., M. Litt., Ph. D.**

எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ் வரிவடிவத்தில் செய்யப் படும் சீர்திருத்தம் மட்டுமன்று; எழுத்தின்தொகை, சொல்லெழுத்து பிறமொழிச் சொற்களைத் தழுவும் முறை ஆகியவைகள் பற்றியும் செய்ய வேண்டிய திருத்தம் என்ற நோக்குடன் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இனிச் செய்யப்பட வேண்டியவைகளும் தமிழ்நாடு அரசு வெளியிட்ட எழுத்துச் சீர்திருத்தம் குறித்த ஆணை பற்றிய விமர்சனமும் இறுதி இயலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பக்கம் 240) (விலை ரூ. 12.50/-

**8. ஒலியியல் (Phonetics)**

**டாக்டர் சு. இராசாராம், M. A., Ph. D.**

தமிழொலிகளின் வகை, பிறப்புமுறை ஆகியவற்றோடு பொது வாக ஒலியைப் பற்றியும் அதன் ஆய்வு முறைகள் மற்றும் பேச் சுறுப்புக்களைப் பற்றியும் இந்நூல் விவரித்துக் கூறுகிறது. ஒலியியல் கலைச் சொற்கள் ஒவ்வொன்றும் விளக்கத்தோடு இறுதியில் கொடுக் கப்பட்டுள்ளன.

பக்கம் 180) (விலை ரூ. 15/-

## 9. எழுத்திலக்கணக்கோட்பாடு (Phonological Theoreis in Tamil Grammars)

டாக்டர் செ. வை. சண்முகம், M. A., M. Litt., Ph. D.

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், ஆகிய நூல்களின் எழுத்ததிகாரத்தில் காணப்படும் மொழியியல் கோட்பாடுகள், எழுத்ததிகார அமைப்பு, பிறப்பியல், தொல்காப்பியரின் 'எழுத்து', முதலும் சார்பும், எழுத்தியலின் களன், எழுத்தியல், பதவியல், புணரியல், அடிநிலைக் கிளவி, புணரியல்களின் அமைப்பு, சாரியை என்று பதினோரு இயல்களில் விளக்கப்பட்டுள்ளன. முதல் இயலான 'இலக்கணமும் மொழியியலும்' என்பதில் இலக்கணத்துக்கும் மொழியியலுக்கும் உள்ள உறவு, மொழியியல் நோக்கில் இலக்கணத்தை ஆராயும் முறை, இந்த நூற்றாண்டில் இலக்கண ஆய்வின் வரலாறு ஆகியனவும் கடைசி இரண்டு இயல்களான 'போக்குகள்' 'உத்திகள்' என்பனவற்றில் இலக்கணங்களிடையே காணப்படும் ஆய்வுப்போக்கும், இலக்கண உத்திகளும் விவரிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே உரையாசிரியர்களின் கருத்துகளும் மொழியியல் நோக்கில் பரிசீலிக்கப்பட்டுள்ளன. பொதுவாக இந்தநூல் எழுத்ததிகாரத்தை ஒப்பு நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் படிப்பதற்கு உதவியாக இருக்கும்.

பக்கம் 306) (விலை ரூ. 20/-

## 10. சொல்லியல் 1 (Morphology) – பெயரியல் (Noun)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
M. B., Ph. D., (Kerala), Ph. D., (Ind. U. S A.)

தமிழ் மொழியின் சொல்லியல் பற்றி இக்கால மொழியியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்வது இந்நூல்.

முதல் இயலான 'சொல்லியல் கொள்கைகளும் விளக்கங்களும்' என்ற தலைப்பில் தற்கால மொழியியல் கோட்பாடுகளும், பெயரியல் என்ற இரண்டாம் இயலில் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் வகைப்பாடு

களும் அவற்றின் காரணங்களும், பதிலிடு பெயர்கள், எண்ணுப் பெயர்கள் போன்றவையும் விளக்கப்படுகின்றன. மூன்றாவது இயலான 'எண் பால் பகுப்பு' என்ற தலைப்பில் எண் அமைப்பும் பால் அமைப்பும் விளக்கப்பட்டுள்ளன. 'வேற்றுமை' என்னும் இயலில் வேற்றுமைகளின் அமைப்பும் ஆக்கமும், பொருளும் போக்கும் ஆராயப்படுகின்றன. பொதுவாக தமிழ் மொழியின் பெயர்ச்சொல் அமைப்பு பற்றிப் பல புதிய விளக்கங்களை இதில் காணலாம். பல்வேறு புதிய கோணங்களில் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. சொல்லியல் என்ற வரிசையில் முதல் நூல் இது.

பக்கம் 280) (விலை ரூ. 21/-

**11. Linguistic Convergence**

**Dr. K. KARUNAKARAN,** M.A, Ph.D., Dip. in Kannada

This monagraph deals with some of the problems related to the use of languages in contact situations, and as a result the development of some commonness in the structure of the languages. The topics discussed include nature and direction of convergence, use of minority languages in multilingual situation, mass communication diglossia and linguistic convergence, social setting–language development and linguistic convergence, and current issues and research related to the study of convergence.

pp. 188] [Price Rs. 10/

**12. இரு மொழியம். (Bilingualism)**

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா,** M. A., Ph. D.

ஒருவர் இரண்டு மொழிகளைக்கற்று அவைகளைப் பேசும் பொழுது, அவருடைய பேச்சில் ஒரு மொழியின் கூறுகள் மற்றொரு

மொழியில் கலந்து வழங்குகின்றன. மொழித் தொடர்பு நீண்ட காலம் நிலைத்திருந்தால் தொடர்பு கொண்ட மொழிகள் ஒன்று மற்றொன்றாலோ அல்லது இரு மொழிகளுமோ தாக்கத்திற்குட் படலாம். அவ்வாறு தாக்கம் நிகழும் பொழுது, பிற மொழிக் கூறுகள் குறுக்கீடாகவோ, அல்லது கடனாகவோ வரும். இவை களை மொழி அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும் விரிவாக விளக்கிக் கூறும் முதல் நூல் இந்நூல்.

பக்கம் 152) (விலை ரூ. 15/-

## உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

*மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு*


1. வெளியீட்டாளர் & ஆசிரியர்
   டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
   செயலாளர், அனைத்திந்தியத்
   தமிழ் மொழியியற்கழகம்,
   மொழியியல்துறை,
   அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
   அண்ணாமலைநகர் 608002.

2. அச்சிட்டோர்:
   சிவகாமி அச்சகம்,
   அண்ணாமலைநகர் 608002

மொழியியல்

தொகுதி 5 எண் 1

ஜூலை - செப்டம்பர் 1981

# உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| காரண வினை<br>ச. அகத்தியலிங்கம் | 1-9 |
| திராவிட மொழிகளில் 'பால்' அமைப்பின் வரலாறும் வளர்ச்சியும்<br>தெ. பொ. மீனாட்சிசுந்தரன் | 11-31 |
| மொழி வேறுபாட்டுக் கொள்கையின் சமூகக் காரணிகள்<br>சி. ஏசுதாசன் | 33-75 |
| 1800-க்கு முன்னர் ஐரோப்பியக் கண்டத்தில் மொழி ஆய்வு<br>ஆட்டோ ஜெஸ்பர்ஸன் | 77-88 |
| தமிழில் வேற்றுமைகள்<br>ஆதித்தன் | 89-106 |
| பதிலிடு பெயராக்கத் தடைவு<br>ப. பத்மநாப பிள்ளை | 107-112 |
| மொழியியல் பேரறிஞர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்<br>சு. சக்திவேல் | 113-116 |
| கூட்டுவினைகளும் அவற்றைக் கண்டறியும் விதிகளும்<br>ஆ. கார்த்திகேயன் | 117-127 |
| வணிகத்தொடர்பால் தோன்றும் புது மொழிகள்<br>கோ. சீனிவாச வர்மா | 129-135 |